# Theresian
## Flavour - 02

2008 - 2012












**ST.Theresa's Girls' College, Atchuvely**



# கல்லூரிக் கீதம்

I

Little flower of Carmel
Pattern of your school
Lovingly we come to you
To learn your little way

*Chorus*

Dear St. Therese
Do not turn away
Drop down just one little rose
The rose we need today

II

Make us pure and truthful
In all we do and say
Drawing us in loyalty
To all who teach your way

III

Help us to seek God alone
Live in love sincere
Seeking unity and Love
Until our end is near

புனித தெரேசா புனித தெரேசா புனித தெரேஸ்
கன்னியின் மகிமையை நாமும்
போற்றிடுவோமே என்றும் வாழ்த்திடுவோமே

இல்லம் மூன்றின் இணையற்ற சேவைகளும் நிலைத்திடவே
நித்தம் தமிழ் மணக்கும் நிலையான சற்சிறக்கும்
சத்தியம் தனிச்சிறக்கும் சன்மார்க்கம் போல் சிறக்கும்
கல்விச்சேவை மிளிரவே கன்னியர் புகழ்ந்துரைக்கும்
(புனித தெரேசா)

அறிவினாற்றல் மீதும் அருட்செயலால் தினமும்
ஆவியுடன் பொருளும் அற்பணித்தே தினமும்
தேசசேவை என்றுமே பெருமையை நோக்கும்
தீராத பரம்பொருள் திருவருளை வேண்டிடுவோம்.
(புனித தெரே

# Vission

Blooming the values and

Prospering knowledge and skills

# Mission

- Enhancing the attitude such as the best leadership quality and values through students' knowledge and multiple talented development.
- Handling ways and means to enhance pure and truth.
- Implementing time management.
- Imprinting Competencies in language and mathematics.


St. Therese

# *Our School Founder*



CHEVALIER SIR CHITTAMPALAM ABRAHAM GARDINER

The dornor of the School convent land

and THE MAIN BLOCK.

called to serve. 06-01-1899. called to rest. [illegible] 12.1960

| | | |
|---|---|---|
| **Title** | :- | **Theresian Flavour - 02** |
| **First Edition** | :- | **2007** |
| **Second Edition** | :- | **2012 November** |
| **Pages** | :- | **70 x Xiii** |
| **Publisher** | :- | **J/St.Theresa's Girls' College, Atchuvely** |



# அதிபரின் வாழ்த்துச் செய்தி

சமூக அர்ப்பணிப்புள்ள சான்றோர்களால் தான் இன்றும் இவ்வுலகம் வளம் பலகொழித்து இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவர்கள் எண்ணிக்கையில் சிறிதாயினும் எண்ணங்களால் உயர்ந்தவர்கள். இவர்கள் தங்கள் நல்லெண்ணங்களால் உலகை இயக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்தவகையில் எமதுகல்லூரி சேர்.சிற்றம்பலம் காடினர் அவர்களின் எண்ணங்களால் துளிர்விட்டு புளியடிப் பள்ளிக்கூடம்,திண்ணைப் பள்ளிக்கூடமாக உதயமாகி ஓயாதஅலைகள் போல் அருட்சகோதரிகளின் நெறிப்படுத்தலில் அழகொளிரும் உயரிய ஒரு நிறுவனமாகத் திகழ்கின்றது.

இன்றையதகவல் தொழில் நுட்ப யுகத்திற்கேற்ப பாரிய மாற்றங்களை உள்வாங்கி அதேநேரம் பழமையின் தொடர்ச்சியையும் புதுமையின் உத்வேகத்தையும் பேணும் பல்கலை நிறுவனமாக எமது கல்லூரி விளங்குகின்றது. ஒரு நிறுவனம் எவ்வளவுகாலம் இயங்கியது? என்பதை விட அது சாதித்தது என்ன? என்பதுதான் முக்கியம் எமது கல்லூரியானது ஒழுக்க விழுமியங்களைப் பேணும் பல்துறை சார்ந்த பல கல்விமான்களையும், சான்றோர்களையும் உருவாக்கிய பெருமையினைத் தன்னகத்தே கொண்ட கல்விக்கூடமாக வளர்ந்து கொண்டே வருகின்றது.

கல்வித் துறையில் 2012ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பெறுபேறு கல்லூரிக் காலத்தில் தடம் பதித்த ஆண்டாகப் பெருமை பெறுகின்றது. அண்மைக் காலங்களில் பல்கலைக்கழகங்களில் கலை, வர்த்தகத் துறைகளுக்கும் மாணவர்கள் தெரிவாகிக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

சாதனைகள் பல படைத்த எமது கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்கள் இன்றும் உலகின் பல பாகங்களிலும் உயர் நிலையில் இருப்பதைக் காண முடிகின்றது. பொதுப் பரீட்சைகளில் மட்டுமல்லாமல் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் முத்திரை பதித்துள்ளது.

எமது கல்லூரி கோப்பாய் கோட்டத்தில் சிறந்ததொரு பெண்கள் பாடசாலையாக இன்றும் பேசப்படுவதற்குத் தம்மை மெழுகுவர்த்திகளாகவும் ஏணிப் படிக்கற்களாகவும் ஆக்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், அருட்சகோதரிகள் மட்டுமன்றி பழையமாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் ஆகியோரும் மூல காரணமானவர்கள்.

கல்விப் புலத்தில் துரிதமாற்றங்கள் உலகளாவிய ரீதியாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் இம் மாற்றங்களையும் உள்வாங்கி சிறந்ததொரு இறைபக்தியுடைய ஒழுக்கவிழுமியங்கள் தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த ஒரு இளம் சமுதாயத்தை வழங்கவேண்டிய பாரிய பணி எம் கையில் உள்ளது. எனவே இதற்காக நாம் எல்லோரும் அர்ப்பணிப்புடன் பணிபுரிவோம் எனக் கூறி கல்லூரி மேலும் பலபடிகள் ஏற்றம் பெற வாழ்த்துகின்றேன்.

பாடசாலை அதிபர்,
அருட்சகோதரி மரியறொசாறியோ அ.கா



# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

பாடசாலையின் வருடாந்த சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி தருவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். பாடசாலை என்பது நல்ல பின் புலத்துடன் சமகால நிகழ்வுகளும் சிறப்புற அமைந்திருப்பது அவசியமாகும். அந்த வகையில் எமது கல்லூரியானது சிறந்த பின் புலத்துடன் சமகால நிகழ்வுகளைத் தன்னகத்தே கொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும். அந்தவகையில் இங்கு கற்கும் மாணவர்கள் தாம் கற்கும் பாடசாலையின் சிறப்பைக் கண்டு பெருமை கொள்ளுதலில் வியக்கத்தக்கது எதுவும் இல்லை. கற்பிக்கும் ஆசிரியர்களும் பெருமைப்பட முடியும். ஒழுக்கமும் கல்வியும் சிறந்து விளங்குவது இங்கே கண்கூடு. இவ் இரண்டும் சிறந்து விளங்குவது கண்டு நாம் பெருமையடையலாம். நல்ல பின்புலமே இப் பாரம்பரியத்திற்கு ஊன்று கோலாகும்.

மாணவர்கள் தம் காலத்தில் செய்ய வேண்டியவற்றைச் சிறப்பாக செய்ய ஆசிரியர்கள் அவர்களை உறுதிப்படுத்த வேண்டும். மாணவர்களது ஆக்கம் தாங்கி வெளிவரும் இதழ்கள் ஏற்றம் மிகு இதழ்களாக வெளிவருதற்கு ஆசிரியர்களின் கட்டுரைகளும் காரணமாக அமைகிறது இவை அனைத்திற்கும் நன்றி கூறி அமைகின்றேன்.

வாழ்க! வளர்க

திருமதி.சு.மகேஸ்வரதாசன்
பாடசாலை உபஅதிபர்.



## அச்சுவேலி லங்கா மாதா மடத்துத் தலைவி

## அருட் சகோதரி மேரி தெரெசில்டா அவர்களின் ஆசிச் செய்தி

கல்விப் பணியில் 65ஆண்டுகள் நிறைந்த சேவையினை வழங்கிய யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி எத்தனையோ சோதனைகள், வேதனைகள் மத்தியிலும் சாதனைகளை நிறைவாகத் தந்து ஏணிப் படிக்கல்லாய் உயர்ந்து நிற்பதைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்கள், பாரம்பரியங்களைப் பேணிவரும் நிறுவனங்களில் முதன்மையானது அந்தப் பிரதேசத்தில் இயங்கும் பாடசாலைகளே. ஒரு சந்ததியின் கல்வி, பண்பாட்டு பாரம்பரியங்களும் வழக்குகளும் ஒருங்கிணைந்த வகையில் இன்னுமொரு சந்ததிக்குக் கடத்தக் கூடிய ஊடகமாக விளங்கும் பாடசாலைகளே அந்தப் பிரதேசத்தின் குறிகாட்டிகளாகும்.

அந்தவகையில் 1947ல் ஒரு திண்ணைப் பாடசாலையாக அச்சுவேலிப் பிரதேசத்தில் உதயமாகி அருட்சகோதரிகளின் கைகளில் தவழ்ந்து இன்றுதரம் 01 – 13 வரை மாணவர்கள் கல்விகற்கும் உயரிய ஒரு நிறுவனமாகப் பொலிவு பெற்று விளங்குகின்றது. கலை, வர்த்தகத் துறைகளில் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். 2012 தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வி. வைஸ்ணவி லோகநாதன் என்ற மாணவி மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தையும், மாகாணமட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுத் தந்து எமது கல்லூரிக்குத் பெருமை சேர்த்துள்ளார். அவருடன் 10 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். பொதுப் பெறுபேறுகள் கடந்தகாலங்களில் உயர் வளர்ச்சியைப் பெற்றுள்ளன. இக் கல்லூரியின் எழுச்சிக்கு உரமாகவிருந்த *சேர் சிற்றம்பலம் காடினர்* அவர்கள் கல்லூரியின் அகல் விளக்காக விளங்கிய அதிபர்கள், அவர்களுக்குத் துணையாக நின்ற ஆசிரிய சிற்பிகள்,கல்விப் பணியுடன் இறைபணியாற்றும் அருட்சகோதரிகள் ஆகியோரின் அர்ப்பணிப்பும் கல்லூரிச் சமூகத்தினது ஒத்துழைப்பும் போற்றுதற்குரியது. இவர்களின் சேவைபற்றிக் கூறின்

**"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல் இனியநீர்த்தண் சுனைகள் இயற்றல**
**அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**பின்னருள்ளதருமங்கள் யாவும் பெயர் விளங்கியொளிரநிறுவுதல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்"**

என்றஅடிகள் என் உள்ளத்தில் துளிர் விடுகின்றது. அறுபத்தைந்தாவது ஆண்டு சிறப்புமலர் Theresian Flavour இன் ஊடாக வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன். இப் பிரதேசத்தில் பல அறிஞர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், நற்பிரஜைகள் எனப் பலரையும் உருவாக்கிய யா/அச்சுவேலி புனிததெரேசாள் மகளிர் கல்லூரிச் சமூகம் தொடர்ந்தும் கல்வித்துறையிலும், இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் தனது சேவையை மென்மேலும் முன்னெடுத்துச் செல்ல இறையாசிவேண்டி அமைகின்றேன்.

நன்றி

*அருட்சகோதரிமேரிதெரெசில்டாஅ.கா*

*மடத்துத் தலைவி*

*லங்காமாதாமடம்,அச்சுவேலி.*



## பங்குத் தந்தையின் ஆசிச் செய்தி

அச்சுவேலிக் கிராமத்தின் அச்சுநகர்பகுதியில் கோப்பாய்க் கோட்டத்தின் ஒரேயொரு சீர்மிகு பெண்கள் பாடசாலையாகச் சிறந்தோங்கும் யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி ஐந்து வருடங்களுக்கொரு முறை வெளியிடுகின்ற Theresian Flavour என்னும் 2ஆவது மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

அச்சுவேலிப் பங்கின் பாடசாலையாக 1875 ஆம் ஆண்டு சூசைப்பிள்ளை விதானையும் தம்பிமுத்துப் பெரியாரும் இணைந்து உருவாக்கிய திண்ணைப் பள்ளிக்கூடம் சேர் கார்டினர் சிற்றம்பலம் அவர்களின் பேருதவியால் இன்று யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரியாக உயர்வடைந்துள்ளது.

1881 ஆம் ஆண்டில் இருந்து நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தனது ஆரம்பக்கல்வியைக் கற்றுயர்ந்த இப் பாடசாலை 1928 ஆம் ஆண்டு நல்லதோர் கட்டடத்தைப் பெற்றதோடு 1943இல் திருக்குடும்ப அருட் சகோதரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. பங்கு மக்கள் மத்தியில் அனைத்துப் பணிகளையும் ஆற்றுவதில் திறமை கொண்ட இத் திருக்குடும்ப சபை அருட்சகோதரிகளின் காலத்திலேயே 1946 தை 06 இல் "யா/ புனித தெரேசாள் பாடசாலை" எனப் பெயரிடப்பட்டு அச்சுவேலி சங்கானை வீதியில் சேர் கார்டினர் சிற்றம்பலம் பேருதவி செய்து புதிய பாடசாலைக் கட்டடத்தை அமைத்தார். அதே நாளில் தானே வைத்தியசாலைக்கான அடிக்கல்லையும் நாட்டினார். 1943 ஆம் ஆண்டு தொடக்கம் அதிபராக இருந்த திருக்குடும்ப சபை அருட்சகோதரி றெஜினா H.F இங்கும் தொடர்ந்தார். அவ்வேளை பெண்கள் பாடசாலையாக இருக்கவில்லை. ஏனெனில் ஆண்களும் பெண்களுமாக 10 பேர் 1949 இல் S.S.C (O/L) பரீட்சைக்குத் தோற்றினர் என அறிகிறேன்.

அருட்திரு. J.P.E. செல்வராஜா அவர்களின் கூற்றுப்படி 1947 மார்கழி 27இல் வந்த கார்மேல் சபை அருட்சகோதரிகள் 1947ஆம் ஆண்டு 28ஆம் திகதி பொறுப்பேற்றார்கள் அன்று முதல் இன்று வரை இக்கல்லூரி ஊடாக எமது பங்கு மக்கள் வளர்ந்துள்ளனர்.

மேலும் கல்லூரியின் தற்போதைய அதிபர் ஆசிரியர் குழுவையும் பாராட்டுவதோடு கல்லூரி மென்மேலும் உயர்வடைய, சிறப்படைய இறையாசீர் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்

அருட்திரு.கு.யே. அன்ரனிபாலா

பங்குத் தந்தை புனித சூசையப்பர் ஆலயம்



# மனம்மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்

அச்சுவேலி புனிததெரேசாள் மகளிர் கல்லூரியின் அறுபத்தைந்து ஆண்டுகால நினைவுகளைப் பதிக்கும் "திரேசியன் -02" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இக்கல்லூரி கத்தோலிக்க மிசனரிமாரால், பெண்பிள்ளைகளின் கல்வியை உயர்த்தும் உன்னத நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. மகாகவிபாரதியின் உயரிய சிந்தனைக்கு உயிர்ப்பூட்டும் வகையில், ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றாக இதனைக் குறிப்பிடலாம். கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளாக அச்சுவேலி வாழ்மக்களின் அறிவுக்கண்களைத் திறக்கும் ஆலயமாக இது செயற்பட்டு வந்துள்ளது. இக்கல்லூரியிற் கற்ற மாணவிகள் பலர் இந்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சிறப்புடன் சேவையாற்றி வருகின்றனர். இதற்குமப்பால் சமூகத்திற்கு உகந்த பிரஜைகளை வழங்குவதிலும் இப்பாடசாலை முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

இப்பாடசாலையின் இவ்வுயரிய பணிக்கு அச்சாணியாக விளங்கிய அதிபர், துணைநின்ற ஆசிரியர்கள் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். புனிததெரேசாளின் புனிதமான பணி தொடர வாழ்த்துகிறேன்.

திரு. வ. செல்வராசா

மாகாணக் கல்விப் பணிப்பாளர்

வடமாகாணம்



# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/புனிததெரேசாள் மகளிர் கல்லூரியினது அறுபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் திரேசியன் சஞ்சிகைக்கு இச் செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

அச்சுவேலிக் கிராமத்தில் ஒரு திண்ணைப் பாடசாலையாக உருவெடுத்த இப்பாடசாலை படிப் படியாக வளர்ச்சி பெற்று இன்று சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்ற ஒரு பாடசாலையாகத் திகழ்கின்றது. இக் கல்லூரியானது கல்விப்பணியோடு மாணவர்களது ஒழுக்கம், நன்னடத்தை, விழுமியப் பண்புகள் என்பனவற்றிலும் மிகுந்த கவனத்தைச் செலுத்திவருகின்றது. பல கல்விமான்களையும், அருட்சகோதரிகளையும் உருவாக்கிய கலைக் கூடமாக இக் கல்லூரி திகழ்கின்றது.

பெண்களுக்கு கல்வியை வழங்குவதன் மூலம் பாடசாலையைச் சூழவுள்ள சமூகத்திற்கு கல்வியை வழங்கும் பெரும் பணியினை இப் பாடசாலை ஆற்றிவருகின்றது. அந்த வகையில் கோப்பாய்க் கோட்டத்தில் ஒரேயொரு பெண்கள் பாடசாலையாகத் திகழ்ந்து அரும்பணியாற்றி வரும் இக் கல்லூரி இப்பிரதேச பெண்களினது கல்விக்கு வழிகாட்டி, மென்மேலும் வளர்ச்சி கண்டு பல்லாண்டு காலம் தனது பணியினைச் செய்ய வாழ்த்துகின்றேன்.

திரு. செ. உதயகுமார்,

வலயக்கல்விப் பணிப்பாளர்,

யாழ்ப்பாணம்.



## பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரவீந்திரன்

## அவர்களின் ஆசிச் செய்தி

"எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ – விரிந்த அறிவைத் தருமோ – தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்வி தான் நமக்குத் தேவை" என்றார் சுவாமி விவேகானந்தர்.

அந்த வகையில் யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி கல்விப்பணியுடன் ஆன்மீக ரீதியாகவும் ஆற்றிவரும் சேவைகள் அளப்பரியன. கல்வியைப் புகட்டி அறிவார்ந்த பெண்கள் சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று விரும்பிய மிஷனரிமாரின் கனவுகள் இக்கல்லூரியினூடும் நனவாயின. அச்சுவேலிப் பெண் கல்விப் பாரம்பரியத்திலே யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரிக்கு நிலையானதோர் இடமுண்டு. பெண்பிள்ளைகள் கல்வியைப் பெற்று உயர்ந்த தொழில்களை வகிக்கவும் பொதுப்பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடவும் பயிற்சியளித்த பெருமை இந்தக் கல்லூரிக்கு உண்டு.

இத்தகைய பெருமை வாய்ந்த பாடசாலையினால் வெளியிடப்படும் "திரேசியன் 2" சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இக்கல்லூரியை தொய்வின்றி நடாத்தி வந்த அதிபரகள், ஆசிரியர்கள் நன்றியுடன் வாழ்த்தப்பட வேண்டியவர்கள். "திரேசியன் 2" சஞ்சிகையின் படைப்பு, வெளியீடு என்பவற்றுக்கு பொறுப்பாக உள்ள அதிபர், ஆசிரியர்கள் அனைவருமே பாராட்டுக்குரியவர்கள் என்பதுடன் அவர்களது பணி சிறப்புறத் தொடரவும் பாடசாலைக் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் சிறந்தோங்கி உயர வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

யோ.ரவீந்திரன்.

பிரதிக்கல்விப்பணிப்பாளர்,

யாழ்ப்பாணம்.



# கோப்பாய்க் கோட்டத்தில் ஓர் தனித்துவமான கல்லூரி

**யா/** அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். மானுட விழுமியங்களை மலரச் செய்து அறிவோடு திறனையும் மாண்புறச் செய்தல் என்ற தூர நோக்கோடு அளப்பரும் கல்விப்பணி ஆற்றி வரும் இக்கல்லூரியின் கல்விப்பணி மகத்தானது. மாணவர்களுக்கு அறிவு, ஒழுக்கம், நன்நடத்தை, நற்பழக்கவழக்கங்கள் அனைத்தையும் மாணவரிடையே பதியச்செய்வதில் இக்கல்லூரிக்கத் தனிச்சிறப்புண்டு. இக்கல்லூரியில் கற்ற மாணவர்கள் தாம் என்று பெருமையோடு கூறத்தக்க வகையில் மாணவர்களை இக்கல்லூரி உருவாக்கி வருவது பெருமைக்குரியதே.

கோப்பாய்க் கோட்டத்தில் உள்ள ஒரேயொரு பெண்கள் பாடசாலையாக விளங்கும் இக் கல்லூரி அறுபத்தைந்தாவது அகவையில் வீறு நடை போடுகின்றது. இக்கல்லூரியில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்குப் பெற்றோர்கள் முண்டியடிப்பது இக்கல்லூரியின் தரத்திற்கும் பெருமைக்கும் கட்டியம் கூறுவதாக உள்ளது. ஒரு தனித்துவமான பாடசாலைக் கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்பி மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்தி வருவது இக்கல்லூரியின் சிறப்பம்சமாகும்.

இக்கல்லூரியின் வளர்ச்சிப்பாதையில் கடமையாற்றிய ஒவ்வொரு அதிபரும் முத்திரை பதித்துள்ளனர். தற்போது கடமையாற்றும் அருட்சகோதரி மரிய றொசாரியோ அ.கா அவர்களது முயற்சியும் பாராட்டுக்குரியது. கல்லூரியின் வளர்ச்சியில் அவர்களுடைய அர்ப்பணிப்பு, ஆர்வம் மிகச் சிறந்து காணப்படுகிறது. அதிபரின் சிந்தனைகளுக்கு வடிவம் கொடுப்பதில் இக்கல்லூரியின் ஆசிரியர்கள் காட்டும் அர்ப்பணிப்பு மெச்சத்தக்கது. **"இது எங்கள் பாடசாலை"** என்ற உணர்வோடு அவர்கள் ஆற்றிவரும் சேவையைப் பாராட்டுகின்றேன்.

இப் பிரதேசத்தின் கல்வி அறிவுக்கு ஒளிவீசிக் கொண்டிருக்கும் இக் கல்லூரி மேலும் வளர்ச்சிபெற வாழ்த்துவதோடு மாணவர்கள் ஆசிரியர்களின் ஆக்கத்திறனுக்குக் களமமைக்கும் திரேசியன் மலர் தொடர்ந்தும் வெளி வந்து பயன்தரவும் வாழ்த்துகிறேன்.

திரு.வே.பாலசுப்பிரமணியம்

கோட்டக் கல்விப் பணிப்பாளர்

கோப்பாய்.



# வாழ்த்துச் செய்தி

எமது அன்னையாம் யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் 65 ஆம் அகவையில் வெளிவரும் "திரேசியன் -02" புகழ்பரப்பும் நறுமலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

எங்கள் மண்ணில் தனித்துவமிக்க மகளிர் கல்லூரியாகத் திகழ்ந்து கல்வியிலும் ஒழுக்கத்திலும் மாத்திரமன்றி பல்வேறு ஆற்றல்களிலும் சிறந்தோங்கும், பன்முக ஆளுமை கொண்ட கல்விச் சமூகத்தை உருவாக்கிவரும் எம் கல்லூரி இன்னும் பல நூற்றாண்டுகள் தம் பணியில் சிறந்தோங்க வேண்டுமென இவ் வேளையில் வாழ்த்துகிறேன். இக் கல்லூரி அன்னையின் உயர்வுக்காய் உழைத்த அருட்சகோதரிகள், ஆசிரியர்கள் அனைவரையும் இவ்வேளையில் நன்றியுடன் வாழ்த்தி வரவேற்கின்றேன்.

திருமதி றொசற் தவநாயகம்

தலைவர்

பழைய மாணவர் சங்கம்



**பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் உள்ளப் பதிவிலிருந்து.**

இயற்கை அன்னையின் எழில் தவழும் அச்சுநகரில் ஆன்மீகத்தையும் கல்வியையும் ஒருங்கே வளர்த்தெடுக்கவென சேர். சிற்றம்பலம் கார்டினர் அவர்களின் சிந்தனை வேரிலே முளைத்தெழுந்த அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியானது தோன்றிய காலம் முதல் இன்றுவரை மங்காப் புகழுடன் ஒளிவீசி வெற்றி நடை போடுகின்றது. கோப்பாய் கோட்டத்திலுள்ள தனிப்பெரும் மகளிர் கல்லூரியானது இப்பிரதேச வாழ் மாணவர்களினது கல்வி, ஒழுக்கம், தூய்மை, ஆன்மீக சிந்தனை ஆகியவற்றை வளர்த்தெடுப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. மேலும் இதன் சீர்மையை அறிந்த இலங்கைத் தீவின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் தங்கள் பிள்ளைகளையும் உயரிய பண்பாட்டாளர்களாகவும் சிறந்த கல்வியாளர்களாகவும் வளர்த்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டு இதன் அயலில் இயங்கும் " லங்கா மாதா" மகளிர் விடுதியில் சேர்த்துள்ளனர். இவ்விடத்தில் "லங்கா மாதா" மடத்தையும் அதன் பணிகளையும் கல்வி, ஒழுக்கம், தூய்மை ஆகியவற்றில் காட்டும் அக்கறை என்பவற்றையும் வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. அங்குள்ள அருட்சகோதரிகளின் வழிகாட்டலில் மிகவும் சிறந்த ஆளுமையும் பண்பாடும் கொண்ட ஒரு சமுதாயம் உருவாகியுள்ளது.

இப்பாடசாலையில் கல்வி கற்ற பெருந்தொகையான மாணவர்கள் தற்போது நாட்டின் பல்வேறுபட்ட துறைகளில் உயர்ந்த இடங்களைப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களால் இக் கல்லூரிக்கு மிகவும் பெருமை சேர்ந்துள்ளது. மேலும் புலமைப் பரிசில் பரீட்சையில் ஆண்டு தோறும் இக் கல்லூரி மாணவர்கள் குறிப்பிடக் கூடியளவு சாதனைகளைப் படைத்து வருகின்றனர். மேலும் பல்வேறுபட்ட நெருக்கடிகளின் மத்தியிலும் இக்கல்லூரி சவால்களுக்கு முகம் கொடுத்து வீறு நடை போடுகின்றதென்றால் காலத்துக்குக் காலம் அங்கு அதிபர் பதவி வகித்த அருட்சகோதரிகளினதும் அவர்களின் சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுத்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஆசிரியர்களினதும் உயரிய பங்களிப்பே காரணமாகும்.

தற்போது இப்பாடசாலையின் சிறப்பானது நாற்றிசையும் பரவியமை காரணமாக பெருமளவான மாணவர்கள் அனுமதி பெறுவதற்காக மிகவும் பிரயத்தனப்படுகின்றனர். ஆயினும் இங்குள்ள இடப்பற்றாக்குறை மற்றும் கல்வி வலயத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள வகுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டிய தேவை ஒன்று உள்ளது. இருப்பினும் காலக்கிரமத்தில் அனேக பெற்றோரினதும் மாணவர்களினதும் வேண்டுகோளுக்கமைய இப்பாடசாலையை மேலும் விஸ்தரித்து அதிகளவான வசதிகள் கொண்ட பாடசாலையாக செயற்பட வைப்பதற்கு கல்லூரிச் சமூகத்தினர் அரும்பாடுபட்டு வருகின்றனர். இம் முயற்சியின் ஒரு பகுதியாகவே அருகிலுள்ள காணி வாங்கப்பட்டு நான்கு வகுப்பறைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் அறிவியல் துறையில் மாணவர்கள் சிறந்து விளங்கவும் விஞ்ஞான ஆய்வுகளை சிறந்த முறையில் செய்து கற்பதற்கும் வசதியான ஆய்வுகூடம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றமை சிறப்புக்குரியதாகும்.

எனவே இக்கல்லூரியானது எதிர்காலத்தில் மாவட்டத்தின் சிறந்ததொரு முன்னணிப் பாடசாலையாகத் திகழவும் அதிகளவான மாணவர்கள் நற்கல்வி பெற்று சிறந்த பண்பாளர்களாகப் பரிணமிக்க வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழவும் இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

ஹொட்விறி ஜீவன்
செயலாளர்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## Editorial Board

- Rev.Sr.Maria Rosario A.C
- Mrs.S.Maheswarathasan
- Mr.K.Thusyanthan
- Mr.T.Easwaran
- Mrs.S.Mathiyarasan
- Mr.P.Sahalakalanithy
- Mrs.K.Senthilvel
- Mrs.I.Kumarakuruparan
- Mrs.M.Srishantharajah
- Mrs.R.Thirukeetheswaran
- Mrs.S.Thangarajah
- Mrs.S.Mahenthirajah



Designed and Print by
St.Theresa's Computer Unit
&
Pirakanth Press

# *Principals Of St. Theresa's Girls' College, Atchuvely*



Sr. Regina H.F.C
1942 - Dec 1946



Sr. Mary Alacoque A.C
07.01.1947 - 10.01.1949



Sr. Mary Sabina A.C
11.01.1949 - 05.01.1952



Sr. Mary Everilda A.C
06.01.1952 - 28. 01.1970



Sr. Stanislas Mary A.C
29.01.1970 - 31.12.1974



Sr. Cecelia Mary A.C
01.01.1975 - 01.02. 1981



Sr. Mary Fidelina A.C
02.02.1981 - 17.10.1986



Sr. Mary Calistra A.C
18.10.1986 - 29.03.1990



Sr. Mary Ethelviva A.C
05.03.1990 - 12.07.2000



Sr. Maria Rosario A.C
13.07.2000 - To Date

# உள்ளடக்கம்


| விடயம் | பக்க இல |
|---|---|
| 1. Birth and Growth | 01 - 02 |
| 2. எம் அதிபர் | 03 - 04 |
| 3. இந்திரன் வரலாற்றிற்கு ஓர் அறிமுகம் | 04 - 06 |
| 4. Essay (Mobile Phones) | 07 |
| 5. கவிதை (என் கல்லூரிக்கு இயற்கையின் ஆசிரவாதம்) | 08 |
| 6. Our Country | 09 |
| 7. சிறுவர் உரிமைகள் | 10 |
| 8. இந்து அறிவியல் சோதிடக் கலை | 11 - 13 |
| 9. கவிதை (என் அன்னையே) | 14 |
| 10. நம்ப முடியாத உண்மைகள் | 15 - 16 |
| 11. My Village | 16 |
| 12. அறிவுடையோர் நட்பு அறிவுக்கு அரணாகும் | 17 |
| 13. கவிதை (கவிதை எழுதவென) | 18 |
| 14. கவிதை (புனித தெரே சாளே வாழி நீ) | 19 |
| 15. The Crane | 19 |
| 16. My Self | 20 |
| 17. தமிழோசையை உலகமெல்லாம்..... (தனிநாயகம் அடிகள்) | 21 - 22 |
| 18. நவீன உலகினது தேவைக்கேற்ப ............. | 23 - 24 |
| 19. Bird Watching | 25 |
| 20. கவிதை (என்னைக் கவர்ந்த எனது பாடசாலை) | 26 |
| 21. கவிதை (மலர்கள்) | 26 |
| 22. My Friend | 27 |
| 23. My Hobby | 28 |
| 24. சிறு கதை (வாழ்வின் பாடங்கள்) | 29 - 30 |
| 25. உரோம நாடக மரபு | 31 - 32 |
| 26. முதலுதவிப் பெட்டி | 33 |
| 27. கவிதை (ஆசானின் ஆசி வேண்டி) | 34 |
| 28. கவிதை (மாற்றுவலு தந்தெமக்கு .......) | 35 |
| 29. எனது செல்லப்பிராணி | 36 |
| 30. அவசர உலகில் ஆங்கில மொழியின் அவசியம் | 37 |
| 31. கவிதை (தாய்) | 38 |
| 32. Pronounciation | 39 - 40 |
| 33. The Cow | 41 |
| 34. Our School | 42 |
| 35. My Class | 42 |
| 36. பாடல் (பொம்மை) | 43 |
| 37. கவிதை (முதல் கவிதை) | 43 |
| 38. கவிதை (நட்பு பிரியும் தருணம்) | 44 |
| 39. பாதுகாவலர் புனிதர்கள் | 45 - 46 |
| 40. பாடசாலையில் இசைக்கலையின் முக்கியத்துவம் | 47 - 48 |
| 41. கவிதை (கல்வி) | 49 |
| 42. கவிதை (நீர் வளம்) | 49 |
| 43. பிள்ளையை அறிவோம் | 50 |
| 44. நோய் எதிர்ப்பு சக்தி | 51 - 52 |
| 45. ஓசோன் படை | 52 |

| விடயம் | பக்க இல |
|---|---|
| 46. எழுத்துப் பிழையின்றி எழுதிட சில விதிகள் | 53 - 56 |
| 47. தெரிந்து கொள்ளுங்கள் | 57 |
| 48. மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும் | 58 - 59 |
| 49. The Role of Sports in Human | 60 - 61 |
| 50. The Concentrated in your Studies | 62 |
| 51. சோழர் காலம் | 63 |
| 52. அழகியல் ஊடாக ஆன்மீகம் காணும் ஆடல் | 64 - 65 |
| 53. உரோம நாகரிகம் | 65 - 66 |
| 54. தர்ம சாஸ்திரங்கள் | 97 - 68 |
| 55. கார்மேல் சபையும், அச்சபை திருச்சபைக்கு ஆற்றிய பணிகளும் | 69 - 70 |

# காலத்தால் அழியாத
# அமரர் சிற்றம்பலம் அபிரகர் காடினர்

வரலாற்றுபதிவாகவாழ்நாளைக் கொண்டவராம்

வற்றாதநதியாகவளம்பலசேர்த்தவராம்

மறைந்தும் மறையாதமாண் புகழ் ஏற்றவராம்

மண் எல்லாம் போற்றுகின்றவாடாதமலர் அவரே

அச்சுவின் மைந்தராம் மனதினிலேதிகழ்கின்றார்

திரேசாவின் வேந்தராய் திசைஎல்லாம் தெரிகின்றார்

வற்றாதவள்ளல் அவர் வாயாரபுகழ்கின்றோம்

வண்ணமதிநிலவாகவானத்திலேஒளிர்ந்திடுவார்

அரசினர் வைத்தியசாலைஅச்சுவிலேஅமைவுபெற

அத்திவாரமாய் நின்றுஅழகானநிலம் கொடுத்தார்

வருந்தியமக்களுக்குவாழ் வளித்தகோமகனார்

வசந்தத்தின் திருவுருவாய் வாசலிலேநிற்கின்றார்

காலத்தால் அழியாதகல்வியதுவாழ்வுபெற

கற்றோரும் மற்றோரும் கண் திறந்துவாழ்வுபெற

கடல் கூட அழிந்தாலும் கல்விஎன்றும் அழியாது

கனமானகருத்ததனைகாலமதில் நிலைக்கவைத்தான்

சுகமானஆதாரம் சுகாதாரம் நன்மைக்குஅதுவே மூலாதாரம்

சோகம் என்றும் எமக்கில்லைசுகம் என்றும் ஆதாராம்

நன்றிஎன்று கூறுவதற்குநாளெல்லாம் உகந்தவராம்

நாளையஉலகிற்குகாடினரேகண் ஆவார்

நிதம் நிதம் நாளென்றுநித்தமும் வந்தாலும்

நிறுவுனர் நாளென்றுநிதர்சனமாய் அமைந்ததுஎன்றும்

எங்கள் தங்கக் கல்லூரிதாரகையாய் தான் திகழ

சரித்திரமாய் தான் இருந்தார் தங்கமானநிலமும் தந்தார்

காலத்தால் அழியாதகாவியநாயகர் காடினர் அவர்கள்

கண்ணில் தெரியும் கவின் பெறுதொண்டுகள்

பூதஉடல் அழியலாம் புகழ் உடல் அழியாது

பூ உலகம் உள்ளவரைபுதுமையாய் மதிப்போம்.

திரு.பொ.சகலகலாநிதி

# Our Academic Staff -2012

01 Sr. Maria Rosario A.C
02 Sr.MaryVimalini A.C
03 Mrs.S.Maheswarathasan
04 Miss.SuganthyniMuthulingam
05 Mr. P. Sahalakalanithy
06 Mr. S. Latheesan
07 Mr. T. Thirugnanasegaran
08 Mr.K.Thusyanthan
09 Mr.M. Iynkaran
10 Mr.T.Easwaran
11 Mrs. B. Karunananthan
12 Mrs. G. Subeeskaran
13 Mrs. I. Kumarakuruparan
14 Mrs. K. Kanagalingam
15 Mrs. K. Senthilvel
16 Mrs. N. Kugathasan
17 Mrs. N. Kunarajah
18 Mrs. R. Thiruketheeswaran
19 Mrs. S. Mahenthirarajah
20 Mrs. S. Mathiyarasan
21 Mrs. M.Srisgandarajah
22 Mrs. S. Rajavarauthayam
23 Mrs.C.Thayaparan
24 Mrs.J.Rajakumar
25 Mrs.J.Vijeyasankar
26 Mrs.M. Thayaparan
27 Mrs.S. Thankarajah
28 Mrs.K.Renuga
29 Mrs.ThusyanthanThulashi
30 Mrs.V.Nakkeeran
31 Mrs.V.Srieswaran
32 Mrs.V.Jehatheeswaran
33 Mrs.T. Vimalanathan
34 Mrs.A.Ketheeswaranathan
35 Mr.K.EnciliRukman
36 Mr. S. Panchamoorthy
37 Miss. T. Sangeetha
38 Miss. A. Sangeetha
39 Miss.R. Emilda
40 Sr.I.Harriet A.C

# The Administrative Sector



## Vice Principal



## Academic Staff -2012



# கல்லூரியின் மன்றங்கள்



அனர்த்த முகாமைத்துவ மன்றம்



சிறுவர் பாதுகாப்பு மன்றம்



ஆங்கில மன்றம்



ஆரம்பப் பிரிவு மன்றம்



வணிக மன்றம்



ஆலோசனையும் வழிகாட்டலும்



ஒழுக்காற்றுக் குழு



பா.அ.சங்கம்

# Birth and Growth of St.Theresa's College

**"The earth has yielded its fruit for God our God has blessed us.**

**May God still give us His blessing**

**till the ends of the earth revere him" Ps.66**

I am happy to have the privilege of penning a few thoughts about the Birth and Growth of St.Theresa's. It's great indeed Our hearts remember Rt.Rev.Dr.Emilianuspillai (Late Bishop of Jaffna) who had taken the initiative to introduce the A.C's to Jaffna with the help of Bishop Guyomar who was the Bishop of Jaffna in 1940. It was His Lordship Bishop Guyomar O.M.I of Jaffna who approached Mother Josephine - the Superior General on this Matter. Rt.Rev.Dr. Emilianuspillai, who was then the diocesan administrator, kept pursing the matter. He kept in contact with Mother Innocence who was the Regional Superior of Sri Lanka, and in October 1946 met Mother Josephine personally from whom he received some assurance of establishing a foundation.

A new development in this scheme arose when Mr.Chittampalam Gardiner, successful businessman in Colombo, heard of the A.C's and their work in education. He set his heart on introducing these nuns into his village – Atchuvely and assured the Bishop of his financial support in the founding of a Convent School as proposed by Rt.Rev.Dr. Emilianuspillai. In Atchuvely a parish school was in existence, conducted by the Sisters of the Holy family in a decent school block that had been put up by Mr.Gardiner. The Sisters resided in a rented house during the week and went back to their Convent in Illavallai at week – ends.

Rt.Rev.Dr. Emilianuspi;;ai visited Mother Josephine when she was in Sri Lanka 1947, bringing with him Sir.Gardiner, and having placed his scheme before her requested her to visit Acthuvely, which she did in April 1947, before returning to India, accompanied by Mother Innocence and Gertrude. They were warmly welcomed by Bp.Guyamar and were taken to the site of the new foundation, and to St.Theresa's Parish School. Here they came to terms about the foundation, which was sent in writing to Mother Josephine later.

In 1995 the school won an award and several certificates of merit for the best performance in Home Science Exhibition and World Industrial fair held at Vembady College. In 1958 the W.H.O Organizer visited and photographed the cadets. An Education Health Officer wrote. "The School health work carried out in this school is excellent. I was particularly interested in the community Development Actives carried out by the School children in the neighboring Villages. There is spirit and enthusiasm in this school" From 1959 onwards the students participated and won several awards in the Departmental sport Activities on

the District, Province and even All Island Levels. In 1963 the School's St.John Ambulance Cadets were placed first in the Island. In 1964 one of the Education Officers remarked, "I am happy to say that among all the Schools in this area, this School in particular, takes the most prominent place. My impression is that the high standard, of the Head Teacher 's Tamil is reflected in the School and on the children" Another commented "mainly in health competitions, physical training and essay competitions, this School has won the First Prize, not only in the North, but also in the whole Island of the Ceylon" These are examples to prove that very good work was done in this School.

At the time of the Government take over of Schools, the parents occupied the school premises in accordance with the policy of the Church to protest against this measure until they learnt that the hierarchy had decided to fall in line with the new education scheme and the 'occupation' was withdrawn about three weeks after the reopening of the School in January 1961. In 1969 Science was introduced in G.C.E. O/L. At that time the strength of the School was 450. The following Sisters succeeded in their mission of education in spite of Crises and challenges which they faced during the war and natural disasters.

Sr.Mary Alacoque A.C the first principal in 1947 and on her retirement in year 1949. Sr. Mary Sabina A.C assumed duties as the principal from 1949 to 1952. Sr.Mary Everilda A.C succeeded sister Sr.Sabina A.C from 1952 to 1970.She worked for 18 years as principal. from 1972 to 1974 Sr.Stanislas Mary A.C served as the principal. The foundation stone of a two storied building for the School was laid and Sr. Cecilia Mary A.C who succeeded as the principal in the year 1975, did her very best to complete it. She was transferred and Sr.Mary Fidelina A.C served as the principal 1981 to 1986. Since she had a Grade for principalship, improvements were made in the School. From 1986 to 1990 Sr.Mary Calistra A.C was appointed as principal and served during the war period. In 1990 Sr.Mary Ethelviva A.C succeeded Sr.Calistra as the principal of the School. At that time the strength of the School was 1072. In the year 2000 Sr.Maria Rosario A.C succeeded Sr.Mary Ethelviva as the principal of St.Theresa's Girls' College. She remains at the helm as we embark on Our celebration of our school's existence for 65 years. During her tenure of office she bought seven Larcharms of a Block of Land for forty Laks of rupees incurring with so much of difficulties and it are untiring efforts. This is adjoining the School premises and constructed the Primary section and Science Lab for the betterment of the School.

In the year 2012 one of our grade -05 students obtained the Scholarship ranking 2nd in the district level and 3rd in the province level. Now the strength of the School is increasing in number, and has been successful in other extra curricular activities. Sr.Maria.Rosario has several major projects for the new year. We hope and pray that her vision for St.Theresa's Girls" College will be a reality very soon.

Sr.Vimalini A.C

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர் விபரம்

## 2007

1. செல்வன் க. சங்கீத்
2. செல்வன் க.சிவப்பிரியன்
3. ச.சுகன்யா
4. தி.சங்கீதா
5. வே.ஜந்துஜா
6. பு.சியானுஜன்
7. ந.யசிந்தர

## 2008

1. மா.அமலன
2. ச.மாதங்கி
3. த.யனுசிகா
4. இ.டர்சி
5. அ.யதீசன்
6. உ.பானுஜா
7. செ.சுஸ்மிதா
8. ம.கலைமதி
9. சி.அர்வனா
10. அ.ஜோய் மனாசே
11. சோ.ஸ்ரீவக்ஷன்
12. சி.சாரங்கன்

## 2009

1. அ.ஜொஸ்லின் யனு
2. இ.சரண்யா
3. சி.சந்தியா
4. த.பிரசாந்த்
5. உ.சோபிகா
6. கு.டிலக்ஷன்
7. த.ஜோலின் நிவாசனா
8. பு.ஆகாஷ்
9. மோ.டயஸ்
10. கு.ஸ்ரீசன்
11. தி.சங்கவி

## 2010

1. க.லிதுர்சன்
2. தே.சரோன் கபோனா
3. ஸ்ரீ.திபிஷ்னா
4. கி.சுரேண்யா
5. சோ.ஸ்ரீவக்சினி
6. த.கோபிதன்
7. சோ.ஸ்ரீவக்சினி
8. லோ.தர்சிகா
9. ஜீ.ஜெனிபர் டிலக்ஷி
10. ம.அம்சிகா
11. ம.நிலக்ஷன்
12. மோ.கொலின்
13. ஜெ.நதீசன்

## 2011

1. மா.மனோஜா
2. இ.அபர்ணன்
3. க.சங்கவிகா
4. சு.ரிஷானா
5. ஞா.திலக்ஷன்

## 2012

1. **லோ.வைஷ்ணவி**
   **மாவட்டம் 02ம் நிலை,மாகாணம் 3ம் நிலை**
2. க.சங்கவி
3. கு.தனலக்ஷன்
4. வ.சஜந்தன்
5. ந.வதனி
6. த.சாளினி
7. சு.வருண்
8. இ.சாயினி
9. இ.தரணிகன்
10. சா.கௌசி

ஆ) பாடசாலையில் உள்ளமாணவர் விபரம் -2012:

| | தரம் | தமிழ்மொழி மூலம் | | | ஆங்கிலமொழி மூலம் | | | Grand Total | சமயஅடிப்படை | | | | Grand Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | Total | ஆண் | பெண் | Total | | இந்து | கிறிஸ் | றோ.க | இஸ் | |
| 1-5 | 1 | 42 | 66 | 108 | - | - | - | - | 95 | - | 13 | - | 108 |
| | 2 | 44 | 55 | 99 | - | - | - | - | 90 | - | 09 | - | 99 |
| | 3 | 36 | 50 | 86 | - | - | - | - | 77 | - | 09 | - | 86 |
| | 4 | 32 | 57 | 89 | - | - | - | - | 73 | - | 16 | - | 89 |
| | 5 | 26 | 37 | 63 | - | - | - | - | 52 | - | 11 | - | 63 |
| 6-9 | 6 | - | 49 | 49 | - | - | - | - | 41 | - | 08 | - | 49 |
| | 7 | - | 61 | 61 | - | - | - | - | 40 | - | 21 | - | 61 |
| | 8 | - | 87 | 87 | - | - | - | - | 65 | - | 22 | - | 87 |
| | 9 | - | 67 | 67 | - | - | - | - | 46 | - | 21 | - | 67 |
| 10-11 | 10 | - | 88 | 88 | - | - | - | - | 47 | - | 41 | - | 88 |
| | 11 | - | 53 | 53 | - | - | - | - | 36 | - | 17 | - | 53 |
| | 11 சு | - | 35 | 35 | - | - | - | - | 24 | - | 11 | - | 35 |
| 12-13 | 12 | - | - | 33 | - | - | - | - | 25 | - | 08 | - | 33 |
| | 13 | - | - | 43 | - | - | - | - | 30 | - | 13 | - | 43 |
| | 13 சு | - | - | 28 | - | - | - | - | 19 | - | 09 | - | 28 |
| Grand Total | | - | - | 989 | - | | - | - | 760 | - | 229 | - | 989 |

இ) ஆசிரியர் விபரம்

| | தமிழ்மொழி மூலம் | ஆங்கிலமொழி மூலம் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆண் | 06 | - | 06 |
| பெண் | 25 | - | 25 |
| மொத்தம் | 31 | - | 31 |

## ஆ) மாணவர் மதிப்பீடு

a)தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| தோற்றியோர் எண்ணிக்கை | 59 | 70 | 63 | 51 | 61 |
| சித்தியடைந்தோர் எண்ணிக்கை | 12 | 10 | 13 | 05 | 10 |
| சித்தியடைந்தோர் சதவீதம் | 20.3% | 14.2% | 20.63% | 9.8% | 16.39% |
| 70 க்குமேல் புள்ளிபெற்றஎண்ணிக்கை | 32 | 60 | 49 | 41 | 43 |

b)தரம் 09 மாகாணமட்டப்பரீட்சை:

| பாடங்கள் | சித்தியடைந்தவீதம் | | | |
|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010 |
| தமிழ்மொழி | 82.3% | 86.2% | 93.8% | 95.6% |
| ஆங்கிலம் | 68.5% | 17.2% | 46.9% | 50% |
| விஞ்ஞானம் | 28.5% | 24.13% | 38.7% | 56.5% |
| கணிதம் | 26.4% | 13.7% | 30.6% | 45.6% |
| வரலாறும் சமூகக்கல்வியும் | 44.1% | 51.7% | 48.9% | 50% |
| சுகாதாரம் | 54.2% | 89.6% | 77.55% | 63% |
| சைவம் | 70% | 90.9% | 100% | 100% |
| றாமன் கத்தோலிக்கம் | 100% | 100% | 82.3% | 100% |
| சங்கீதம் | 82.1% | 64.7% | 90% | 65.3% |
| நடனம் | 20% | 16.6% | 42.2% | 45.4% |
| புவியியல் | 60% | 82.7% | 91.8% | 82.6% |
| குடியுரிமைக்கல்வி | 45.7% | 72.4% | 85.7% | 93.4% |
| நாடகமும் அரங்கியலும் | - | - | - | 87.5% |

(C) க.பொ.த (சா/ த) பரீட்சை : மொழிமூலம்

| பாடங்கள் | சித்தியடைந்தோர் வீதம் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
| சைவம் | 100% | 100% | 100% | 96.6% | 100% |
| றோமன் கத்தோலிக்கம் | 100% | 100% | 100% | 100% | 100% |
| தமிழ்மொழி | 83% | 78.78% | 80% | 90.6% | 85% |
| ஆங்கிலம் | 31% | 15.15% | 20% | 27.9% | 13% |
| விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் | 47% | 51.51% | 30% | 44.1% | 34% |
| கணிதம் | 53% | 50% | 33% | 65.1% | 34% |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 69% | 78.78% | 57% | 79.0% | 55% |
| சங்கீதம் | 76.4% | 92.30% | 83% | 100% | 93% |
| நடனம் | 87.4% | 100% | | 100% | 25% |
| தமிழ் இலக்கியம் (விருப்பத்துக்குரியது) | 86% | 63.63% | 36.3% | 85.7% | 75% |
| புவியியல் | 87% | 62.96% | 78% | 81.8% | 86% |
| சுகாதாரம் | 100% | 100% | 95% | 81.4% | 87% |
| மனைப்பொருளியல் | 82% | 60% | 75% | 83.3% | 73% |
| வர்த்தகம் | 75% | 50% | 100% | 100% | 50% |
| ICT | 100% | - | 50% | 70.0% | 33% |
| நாடகமும் அரங்கியலும் | - | - | 100% | 100% | 100% |
| குடியுரிமைக்கல்வி | - | - | - | 88.8% | 31% |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| | - | - | - | - | |
| க.பொ.த (சா/ த) தோற்றியமாணவர்தொகை | 36 | 33 | 30 | 46 | |
| க.பொ.த (உ/ த) தகுதிபெற்றோர் | 19 | 16 | 10 | 28 | |
| க.பொ.த (உ/ த) தகுதிபெற்றசதவீதம் | 52.7% | 48.5% | 33.3% | 60.8% | |
| | | | | | |

## (d) க.பொ.த (உ/ த) பரீட்சை :

| பாடங்கள் | சித்தியடைந்தோர் வீதம் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
| தமிழ்மொழி | 100% | 100% | 87.5% | 82% | 92% |
| இந்துநாகரிகம் | 100% | 75% | 85.7% | 100% | 100% |
| கிறிஸ்தவநாகரிகம் | 100% | 100% | 100% | 100% | 100% |
| புவியியல் | 100% | 100% | 100% | 100% | 89% |
| வரலாறு | - | 100% | 100% | 100% | 87% |
| மனையியல் | - | 100% | 100% | 100% | 100% |
| நடனம் | 100% | - | - | - | 100% |
| சங்கீதம் | - | - | - | 67% | 100% |
| அளவையியல் | 89% | - | - | - | - |
| பொருளியல் | 60% | - | 100% | - | - |
| கணக்கீடு | 80% | - | 100% | - | - |
| வணிகக்கல்வி | 100% | - | 100% | - | - |
| நாடகமும் அரங்கியலும் | | | | | 100% |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| பல்கலைக்கழகஅனுமதி - கலை | 01 | - | - | 04 | |
| சதவீதம் | 7.6% | - | - | 23.52% | |
| பல்கலைக்கழகஅனுமதி–வர்த்தகம் | - | 01 | - | - | |
| சதவீதம் | - | 20% | - | - | |

# Budding Kiddies



Grade -01A



Grade -01B



Grade -01C



Grade -02A



Grade -02B



Grade -02C



Grade -03A



Grade -03B



Grade -04A



Grade -04B

# Juniors



Grade -05A



Grade -05B



Grade -06A



Grade -06B



Grade -07A



Grade -07B



Grade -08A



Grade -08B



Grade -09A



Grade -09B

# Seniors



Grade-10A



Grade-10B



Grade-11A



Grade-11B



Grade-12ARTS



Grade-12Commerce



Grade-13ARTS



Grade-13Commerce

# எம் அதிபர்

பல்லாயிரம் விண்மீன்கள் இலங்குகின்ற அழகிய வானில் தண்ணொளி வீசி குளிர்ச்சியை வாரி வழங்கும் நிலாவினைப் போல் எமது கல்லூரியில் மாணவர் மத்தியில் வலம் வருபவர் எம் அதிபர். கோப்பாய் கோட்டத்தில் தன்னிகரில்லா சிறப்புடன் விளங்கும் பெண்கள் பாடசாலையாகிய யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் 2000 ம் ஆண்டில் அதிபர் பதவியை ஏற்றார். அவர் தம் பணி வாழ்வில் செய்த சேவைகள் அளப்பரியன.

" தாயினும் நல்ல தலைவர்" என்ற வாக்கிற்கிணங்க எமக்குத் தாய்க்குத் தாயாகவும் ஆசானுக்கு ஆசானாகவும் அதிபருக்கு அதிபராகவும் பணி புரிந்து வருகின்றார். மிக நெருக்கடி மிகுந்த கால சூழ்நிலையிலும் எமது கல்லூரியில் கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, தலைமைத்துவம், கலை இலக்கியம், ஆன்மீகம் எனப் பலதுறை ஆற்றல் கலையுடைய மாணவர்களை உருவாக்குவதற்கான முறையான அடித்தளத்தினை இட்டு வளர்த்து வருகின்றார். தனது உள்ளத்தையும் உடலினையும் கல்லூரியின் வளர்ச்சிக்காய் உருக்கி ஒப்புவித்திருக்கும் உன்னத சேவையாளர். உயரிய நேரிய சிந்தையுடன், பாடசாலையே தனது உலகமென எண்ணி சுயநலமே கருதாது எம்மவர் வளர்சிக்கான ஊன்றுகோலாக நின்று உழைப்பவர்.

மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் இணைத்துக் கொண்டு பெருமனதுடன் பணியாற்றுபவர். பாடசாலையுடன் தொடர்புடைய எல்லா வகையான போட்டிகளிலும் மாணவர்களை ஈடுபடச் செய்து ஊக்கப்படுத்தி வருகின்றவர். " சுத்தம்" என்பது அவரது பெரு நோக்கு. பாடசாலை என்றாலும் சரி, மாணவர்கள் என்றாலும் சரி அதில் "சுத்தம்" என்பதற்கு முதலிடம் வழங்கி செயற்படுத்தி வருபவர். எமது பாடசாலையின் பெருமையை நோக்கி, பெருகி வரும் மாணவர் தொகையே அதிபர் அவர்களின் அரும் பணியை எடுத்துக் காட்டும்.

பாடசாலையின் நற்புகழுக்காகவும் எமது மாணவர்களை நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் அறிவிலே சிறந்தவர்களாகவும் எதிர்காலத்தை முறையாகச் செப்பனிடக் கூடிய வகையில் நற்பிரஜையாக உருவாக்க அரும்பாடுபட்டு உழைப்பவரே எம் அதிபர். அத்துடன் 2005ஆம் ஆண்டில் எமது பாடசாலையானது ஜெய்க்கா செயற்திட்டத்தின் மூலம் செழுமையடையும் அளவிற்கு தனது பணிக் காலத்தில் பாடசாலை வரலாற்றின் அறுபதாம் ஆண்டு நிறைவை ஒட்டிய மணிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடி மலர் வெளியீட்டினைச் செய்து தடம் பதித்தவர்.அத்தோடு நின்று விடாது தற்போது 65வது ஆண்டு நிறைவை ஒட்டிய மலர் வெளியீட்டில் துடிப்புடன் செயற்பட்டு வருகின்றார். இதைவிட எமது பாடசாலை பிள்ளை நேயப்பாடசாலைகளுள் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டு செயற்படுத்தி கூடிய அளவிற்கு பாடசாலை பற்றிணைவு சிறப்பினைப் பேணி வைத்துள்ளார்.

இவர் இரவுபகல் பாராது பாடசாலை வளர்ச்சிக்காய் சேவையாற்றுபவர். பாடசாலை இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அருகில் இருந்தகாணியை பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் கொள்வனவு செய்ததுடன் வகுப்பறைக் கட்டிடம் ஒன்றையும் அமைத்திருக்கின்றார்.

கல்லூரியின் வளர்சிக்காகவும் மாணவர்களின் நலனிற்காகவும் அரும் பெரும் சேவையை ஆற்றிக்கொண்டிருக்கும் இவர் தனது பணி சிறக்க பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம், ஆசிரியர்கள் நலன்விரும்பிகள் என்போருடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருப்பது பெருமைதருகின்றது.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் பேணப்படும் என்பதற்கிணங்க எமது அதிபர் அவர்களின்சேவையின் மகிமையை அவரால் ஆற்றப்பட்ட "தரமான முயற்சிகள்" ஆதாரப்படுத்துகின்றன.

எமது கல்லூரியின் கலங்கரை விளக்கு, கரை காணமுடியாத அறிவூற்று, கல்விக்கனாக்காணும் காவிய நாயகர்களின் கடவுள் எம் அதிபர் என்றால் அது மிகையாகாது. வார்த்தையில் அடங்காத இவரது பணிகள் எம் எண்ணம் என்னும் ஏட்டில் என்றும் எழுதப்பட்டிருக்கும். வாழ்க! வளர்க! அவர் பணி.

செல்வி தி.சுகப்பிரதா

தரம் 5.B

# இந்திரன் வரலாற்றிற்கு ஓர் அறிமுகம்

## நாகநாடும் இந்திரனும்

உலகில் வகுக்கப்பட்ட பதவிகளில் அதியுயர் பதவியாக அகன்ற பாரத மணிநாக நாடுகளின் பண்பாட்டியல் வரலாற்றிற் கருதப்படுவது இந்திரப் பதவியே. இந்திரன், தேவேந்திரன் என்றும் சிறப்பிக்கப்படுபவன். ஆரிய இனத்தின் தலைவன். உலகில் மழை - இடி – மின்னல்களின் கடவுள், விவசாய நிலமாம் மருத நிலத்தின் தனிப்பெரும் தெய்வம் எனப் பல்வேறு சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இந்திரன், தேவேந்திரன் எனவும் அனைவராலும் கௌரவிக்கப்படுபவன். இந்திரன், 'மயேந்திரனே' என்பார். உலகப் புகழ் பெற்ற கட்டட, சிற்ப மேதை உயர் திரு..கணபதி ஸ்தபதி அவர்கள். வேத, இதிகாச, புராண இலக்கியங்கள் தரும் இந்திரப் பதவியைப் பல்வேறு இந்திரர்கள் வகித்திருக்கின்றனர் என்பது இந்துப் பண்பாட்டியல் வரலாறு. ஒருகால் இந்திரப் பதவி வகித்த நகுலன் என்ற மாமன்னன் புராதன நாக நாட்டுப் பிரதேசத்தில் அரசு செய்த மன்னன் என்றே கருதப்படுதல் பொருத்தமாகின்றது. அந்த நகுலன் பெயராலேயே நகுலேஸ்வரம், நகுலேஸ்வரி ஆலயங்கள் தமக்குரிய பெயர்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்று ஊகித்தல் பொருத்தமே. அல்லது பூர்வீகப் பண்பாட்டு நிலையிலிருந்து இப்பெயர்கள் பொதுக் கொள்கையின் மூலம் பெறப்பட்டு இருத்தலும் கூடும் என்பதில் ஐயமில்லை.

வேதவியாசர், தமது பாகவதத்தில் " நாராயணன் எங்கனம் ஒரே கடவுளோ அக்கினி என்பது உலகெங்கும் எங்ஙனம் ஒரே அக்கினியோ உலக மக்கள் அனைவரும் ஒரே இனமோ, அதே போல ஒரு காலத்தில் வேதமும் ஒன்றாகவே இருந்தது. அதன் பெயர் பிரணவ வேதம் என்கிறார் மகாராஷ்டிர வாகெங்கர் என்னும் எழுத்தியல் (லிபிகால்) நிபுணர்.

நான்கு வேதங்கள் கோதாவரி நதிக்கரையில் பிறந்தன என்று கருதுகின்றார். இக்ககருத்துக்களின் பின்னணியில் புராதன மணிநாகநாடு எனப்படும் இலங்கைப் பிரதேசத்தில் தோற்றம் பெற்று வளர்ந்து பரிமாணம் கொண்ட பண்பாடு பௌராணிகவியல், வரலாற்றியற் கருத்துருவாக்கங்கள் மீது கட்டி எழுப்பப்பட்டதோர் சமயமே இந்து சமயம், இந்துப் பண்பாடு என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டியவர்களாகின்றோம். சமூக வரலாற்றில் ஆய்வாளர் திரு.ஹட்டன் (Hutton) தரும்.

"ஆரியர்களுக்கு முற்பட்ட இனத்தவர்களின் (திராவிடர்களின்) பழமையான தொண்மைக் கூறுகள் பலவும் வேதகாலப் பண்பாட்டில் உருமாறி இணைந்தன என்றும் நாம் கருத வேண்டியுள்ளது. ஆயின் அவை இருக்கும் வேதத்தில் மெலிந்ததாக தெளிவற்ற நிலையில் ஒலித்துக் கொண்டுள்ளன" என்னும் சிறிது தெளிவானதோர் ஜன்னலின் ஊடாக நாம் தொலைதூரம் நுணுக்குக் காட்டிகள் கொண்டு அணுக வேண்டியவர்கள் ஆகின்றோம்.

## இந்திர – துவஷ்டா யுத்தமும் களமும்

ஆரிய – திராவிட இனங்களுக்கு இடையிலான யுத்தத்திற்குத் தலைமை தாங்கிய இந்திரன், சம்பராசுதன் என்ற திராவிட இன மன்னனை வெற்றி கொள்வதற்காக திராவிட இன சிற்பியும் மன்னனுமாகிய துவஷ்டாவின் உதவியை நாடினான். அச் சந்தர்ப்பத்தில் தனக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் அதற்கு பிரதிஉபகாரமாக யாகங்களில் சமர்ப்பிக்கப்படும் அவி, உனக்கு சமர்ப்பணம் ஆகும். என்று இந்திரன் பேசிய நயவஞ்சகப் பேச்சிற்கு எடுபட்ட துவஷ்டா அவ்வாறே தனது இனத்திற்கு எதிரான போரிற்கு உதவி வழங்கலானான். இருக்குவேதம், தேவிபாகவதம் இவ்வரலாற்றை விதந்துரைக்கும்.

இப்போரில் இந்திரனுடன் தொடர்புட்ட இந்த இறுதி யுத்தம் இலங்கைப் பிராந்தியத்தையும் இணைத்தே நடைபெற்றுள்ளமை கருத்திற்குரியதாகின்றது. துவஷ்டாவின் அரசிருக்கை மையம். மாதோட்டம் எனப்படும் மன்னார் மாந்தைப் பிரதேசமே என்பதை நாம் இலகுவில் இனங்கண்டு கொள்ள முடியும். துவஷ்டா, துபேரன், மயன், மண்டோதரி, இராவணன் ஆகியோர் தம் புகழ்மிகு வரலாறு மாந்தையின் இருப்பினை துலக்கி நிற்கும் வெற்றியது. துஷ்டாவின் மகன் விருந்திராசுரனைப் படுகொலை செய்து வெற்றிபெற்ற இந்திரன், நந்தனம் போன்ற இடத்தில் மரகதத்தாலான தேவியின் சிலையைப் பிரதிஷ்டை செய்தான் என்று தேவிபாகவத புராணம் விபரிக்கின்றது.

## இந்திரன் – பிரதிஷ்டை செய்த சிலையும் பீடமும்

இவ்வரலாற்றின் படி இந்திரன் - துவஷ்டா தொடர்பிலான இயங்கு நிலை மையங்களை பின்வருமாறு விளக்க முடியும்.

இந்திரன் ↓ அமராவதி ↓ பொன்னாலை ↓ (பிற்காலம்) ↓ தேவிசிலை பிரதிஷ்டை ↓ (நயினா தீவு) - பிற்கால எழுச்சி நாகபூசணி அம்மன்

துவஷ்டா ↓ மாந்தை

விருத்திராசுரன் ↓ மாந்தை ↓ மரணம் (கதிரமலை)

தேவி பிரகாரம் கூறும் இந்த தேவியை பிரதிஷ்டையை மணிமேகலை என்னும் தமிழ்ப் பௌத்த காப்பியம்.

"பெரியவன் தோன்றா முன்னர் இப்பீடிகை கரியவன் இட்ட காரணம் தானும்" (காதை 25, வரி 54-55) என்று கூறும் பெரியவன் என்று சொல்லப்படும் புத்தர் தோன்றுவதற்கு முன்னர் என்பதன் மூலம் அவள் பிறந்து வாழ்ந்த கி.மு முன்னர் இப்பீடிகையின் காலம் நிர்ணயமாவது தெளிவு.

தேவர்கோன் இட்ட மாமலைப் பீடிகையின் காலம், காலநிர்ணயம் பற்றிய ஆய்வு ஒன்றின் தேவையுள்ளது. நந்தவனத்தில் நிறுவப்பட்ட சிலையின் அடியில் அல்லது அருகாமையில் அல்லது பிரதியீடான முறையில் இந்தியாவின் காரைக்குடி எம்..செல்லக்கண்ணு ஸ்தபதியின், "மூலஸ்தானத்தில் அமைப்பைப் பார்த்தால் அது ஆயிரம் வருடங்களுக்கு முந்தியதாகப் புலப்படுகின்றது. ஆனால் நாகப் பிரதிஷ்டை இதற்கு முன்னால் ஏற்பட்டிருக்கலாம் மூலஸ்தான விக்கிரகத்திற்கும் பின்னர் உள்ள நாக படம் பார்க்கப் பயங்கரமாகவிருக்கிறது. சீறுவது போல் இருக்கிறது. என்ற கருத்தும் தென்னக சிற்ப சாஸ்திர வல்லுநர் திரு.எம்.நரசிம்மனின்."நயினாதீவில் மூலஸ்தானத்தில் அம்மன் உருவம் போல இருப்பது பழைய நாகப் பிரதிஷ்டையே. இது மிகவும் தேய்ந்து அம்மன் உருவம் போலத் தெரிகிறது. இதற்குப் பின்னால் ஐந்துதலை நாகப் பிரதிஷ்டை ஒன்றுண்டு. இந்தியாவிலும் நாக வாழிபாட்டுக்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோயிலைக் காண்பதரிது. கலப்பற்ற தூய்மையான நாக வழிபாட்டுப் பண்பினை நயினாதீவிற் காணலாம். சரித்திர காலத்துக்கு எட்டாத காலந் தொடக்கமுள்ள கோயில் இது என்பது புலனாகின்றது" என்ற கருத்துத் தரும் வரலாற்றியற் பின்புலம் முக்கியமான இவ்வரலாற்றுத் தொன்மையினை நாம் தேவர்கோன் என்ற தனிப் பெரும் அரசன் கலைஞன், இராஜதந்திரி செல்வத்திற் செல்வன் என்னும் தகுதிகளைத் தன்னகத்தே கொண்ட தெவேந்திரனின் காலத்துடன் இணைக்க முடியும். அக்காலம், தொல்லியல் வரலாற்று நிபுணர்களின் பொது வரலாற்று நிபுணர்களின் பொது வரலாற்றை அணுகு "முறைகளை ஒட்டி கி.மு 6000 – கி.மு 3500 வரையிலானது என்று கருதுதல் மிகவும் பொருத்தமாகின்றது.

வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் (M.Phil)

முன்னைநாள் விரிவுரையாளர்

யாழ் பல்கலைக்கழகம்

செயற்றிட்ட அலுவலர்


முறைசாராக் கல்வி

வலிகாமக் கல்வி வலயம

நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன – ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கின்றது.

பில்கேட்ஸ்


# Mobile phones



A Mobile phone , also known as a hand phone , wireless phone, cell phone, cellular phone or cell telephone is a long range, electronic device used for mobilevoice or data communication over a network of specialized base stations known as cellsites. In addition to the standard voice function of a mobile phone , telephone, current mobile phones may support many additional services, and accessories, such as 'SMS' for text messaging , email , packet switching for access to the internet , gaming, Bluetooth infrared, camera with video, MP3 player , radio and GPS. Most current mobile phones connected to a celluar network of base stations - cell sites, which is in turn interconnected to the public switched telephone network.

In 1945 , the zero generation of mobile telephones which were introduced were not cellular , and so did not feature " hand over î frome one base station to the next and reuse of radio frequency channels. Like other technologies of the time, it involved as single powerful base station covering a wide area and each telephone would affectively monopolize a channel over that whole area while in use . The concepts of frequency reuse and hand off as well as a number of other concepts formed the basis of modern cellphone technology . This is the first embodiment of all the concepts that formed the basis of the next major step in mobile technology the Analog cellular telephone.

There are several categories of mobile phones, from basic phones to feature phones such as music phones, and camera phones , to smart phones. Mobile phones often have features beyond sending text message and making voice calls, Internet e-mail and browsing and serving as online games and other high quality games.



Ainthuya Vetheswaran

Grade -$10^{B}$

# என் கல்லூரிக்கு இயற்கையின் ஆசீரவாதம்

செந்தூரப் பூக்கள் ஒன்றாகக் கூடி – என்
கல்லூரிக்கோர் கவிமாலை சொன்னது
கல்லூரிப் பூக்களாம் மாணவர் எம்மில்
வண்மையும் தூய்மையும் நிறைந்திடச்
சொன்னவை

கருமுகில் கூடி என் கல்லூரிக்குள் தான்
பெருவாரி மழையைப் பிரசவித்திருந்தது
கல்லூரியெல்லாம் எம் தாய்வீடெனத் - தன்
பழைப் பிரசவத்தால் எமக்குணர்த்தியது

மழைக்கலாமது தம்பளப் பூச்சிகள் ஒன்றாகக் கூடி
கல்லூரிக்கோர் உபதேசம் செய்தது
கல்லூரிக் குடும்ப அங்கத்தவர் யாவரிலும்
ஒற்றுமை, சந்தோசம் நிறைந்திடச் சொன்னது

அன்றில் பறவைகள் ஒன்றாகக் கூடி – என்
கல்லூரிக்கோர் அறிவுரை சொன்னது
கல்லூரிக்குடும்ப வாரிசுகள் நீவிர
கல்லூரிக் குடும்ப வாரிசுகள் நீவிர்
இணைபிரியா நட்புடன் வாழ்வீர் என்றது

சின்னச் சிறு எறும்புகள் கூடி – என்
கல்லூரிக்கொரு தத்துவம் சொன்னது
அதிபர், ஆசிரியர், மாணவர் யாவரையும்
ஒன்றாகக் கூடி வாழ்ந்திடச் சொன்னது

க.சுகன்யா
தரம் - 13 கலைப்பிரிவு

தோல்வியின் அடையாளம் தயக்கம்
வெற்றியின் அடையாளம் துணிச்சல்

துணிந்தவர் தோற்றதில்லை
தயங்கியவர் வென்றதில்லை

நாம் அனைவரும் ஒரேயளவு திறமை
பெற்றவர்கள் இல்லை – ஆனால் நம்
திறமையை வளரத்துக் கொள்ள
ஒரேயளவு வாய்ப்புக்களைப்
பெற்றிருக்கின்றோம்.
அப்துல்கலாம்

# Our Country

Our country is Srilanka. It is a beautiful Island. So that is called the " pearl of the Indian ocean I Srilanka has many natural things like mountains , rivers, lakes, and forests. Most of the people like the beauty of srilanka . Srilanka has 25 districts and a provinces . The capital of Srilanka is Srijeyawardanapura . There are many developed cities in Srilanka . Mahinda Rajapaksha is the executive president of Srilanka. M. Jeyaratna is the prim minister of Srilanka .

There are many special things belong to srilanka . The national tree is "Naga treeî and national flower is "blue lilly. The national anthem of Srilanka is "Srilanka Matha. That is created by Ananda Samarakkon . The national flag is a lion with a sharp sword in his leg . There are many races of people live in Srilanka. They are Singalese , Tamils, Muslims, and Burgers. The most of the people are Singalese in Srilanka . There are many Temples, and various places in Srilanka.

Our country is developing day by day . I love my country very much.

G.Thenugan

Grade 04[B]

# Make Hay While The Sun Shines

# சிறுவர் உரிமைகள்

நாளைய உலகின் நாயகர்கள் தான் இன்றைய சிறுவர்கள். உலகம் வியந்த பெரியார்கள் எல்லோரும் முன்னைய சிறுவர்கள் தான். முட்டைக்குள் அடைகாத்த சிறுவன் தான் மின்குமிழைக் கண்டுபிடித்தான். இதனால் தான் இந்திய விஞ்ஞானியான சேர் அப்துல்காம் "2025 ஆம் ஆண்டு இந்தியாவை உலகவல்லரசாக மாற்றப்போவது இன்றைய சிறுவர்கள் தான்" எனக் கூறினார். இவ்வாறு பலராலும் போற்றப்படும் சிறுவர்களை நினைவுபடுத்தும் விதமாகத்தான் உலக சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றது.

"குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்

மழலைச் சொல் கேளாதவர்"

என்றார் திருவள்ளுவர். இன்று பலர் தம் பிள்ளைகளை அடித்துத் துன்புறுத்தி வருத்துகின்றார்கள். அது மட்டுமன்றி மதுபானம் வாங்குவதற்கும் புகைத்தல் பொருட்களை வாங்குவதற்கும் கடைகளுக்கு அனுப்புகின்றார்கள். இருபத்தியொரு வயதிற்குட்பட்டவர்களுக்கு புகைத்தல் பொருட்களை வழங்க வேண்டாமென்பதைச் சில வியாபாரிகள் கடைப்பிடிப்பதில்லை. "சிறுவர்களாயிலும் பிள்ளைகளின் கருத்துக்களைச் செவிமடுப்போம்" என்ற "போரூட்" நிறுவனத்தின் சுவரொட்டியை யாரும் கவனத்தில் எடுப்பதில்லை. சிறுவர்களது உரிமைகளில் சரியான கல்வியைப் புகட்டுதல் வேலைக்கமர்த்துதல் கூடாது. அடித்து துன்புறுத்தல் கூடாது. சிறுவர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் களவு, கொலை போன்றவற்றிற்குப் பயன்படுத்துதல் கூடாது. சிறுவர்களை பாலியல் வன்முறைகளுக்கு உட்டுபடுத்துதல் கூடாது ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

சிறுவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பு இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற அமைப்புக்கள் காணப்படுகின்றன. பொலிஸ் பிரிவில் சிறுவர்களுக்கென்று ஒரு தனியான பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

சட்டங்கள், கட்டுப்பாடுகளுக்கு அமைவாக இன்றைய உலகம் சிறுவர்களை நடாத்தவேண்டும் என்பதே காலத்தினதும் எங்களினதும் விருப்பமாகும்.

இ.ராருஜன்

தமர் -03A

பெண்களின் ஏழு பருவங்கள்

| | |
|---|---|
| *பேதை* | *– 1 முதல் 8 வயது வரை* |
| *பெதும்பை* | *- 9 முதல் 10 வயது வரை* |
| *மங்கை* | *- 11 முதல் 14 வயது வரை* |
| *மடந்தை* | *- 15 முதல் 18 வயது வரை* |
| *அரிவை* | *- 19 முதல் 24 வயது வரை* |
| *தெரிவை* | *- 25 முதல் 29 வயது வரை* |
| *பேரிளம்பெண்* | *- 30 வயது முதல்* |

# இந்து அறிவியல் சோதிடக் கலை

**அறிமுகம்**

சோதிடம் என்பது கருமானுட்டானங்களைச் செய்வதற்கு நாள் கோள் முதலிய கால விசேடங்களைக் கணித்துக் கூறுவது எனப்படுகின்றது. இந்து வானியலும் சோதிடமும் இணைந்து செயற்படும் அறிவியல் சார்ந்த சிந்தனைகளாகும். அறிவியலும் நம்பிக்கையும் ஒன்றிணையும் துறையாக சோதிடம் வளர்ச்சி கண்டுள்ளது. சிந்துவெளி மக்களிடையே காணப்பட்ட சமய நம்பிக்கைகளில் சில சோதிடச் சிந்தனைகளோடு ஒப்பு நம்பிக்கைகளில் சில சோதிடம் சிந்தனைகளோடு ஒப்பு நோக்கத்தக்கன. எனினும் அவை ஊகங்களாகவே நோக்கப்படுகின்றன. வேத காலத்தில் வானில் நிகழும் இயற்கை நிகழ்வுகள் பூமியில் நிகழும் கால மாற்றங்கள் என்பவற்றில் மக்கள் கொண்ட நம்பிக்கைகள் சோதிடம் பற்றிய சிந்தனைகளாக வளர்ச்சி கண்டுள்ளன.

வேதத்தின் ஆறு அம்சங்களில் ஒன்றாக சோதிடம் விளங்குகின்றது. யசுர் வேதத்தில் யாகங்களில் நாள், கோள் குறித்தமை பற்றிய சிந்தனைகள் சோதிடம் இக்காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கை பிரதிபலிக்கின்றன. இதிகாச புராணங்களில் சோதிடத்தின் செல்வாக்கு காணப்படுகின்றது.

உ+ ம்

- ❖ நகுல சகாதேவர் சோதிட வல்லுனர்'
- ❖ இராமாயணத்தில் இராமனது பட்டா அபிஷேகத்திற்கு நாள் குறித்தல்.
- ❖ கிருஸ்ணபரமாத்மா சோதிடத்தில் கவனம் செலுத்தியமை.
- ❖ புராணங்களில் தேவர்கள் அசுரர்கள் சோதிட சிந்தனைகளை

முன்னிறுத்தி செயற்பட்ட சம்பவங்கள் அரண்மனைகளில் சோதிடர் செல்வாக்கு வேதங்களைப் போல் பழமையுடையது. சோதிடம் வட மொழியில் 'ஜயோதிஷம்' எனப்பட்டது. இதன் பொருள் ஒளியுடைய சாஸ்திரம் என்பது

- ❖ ஜயோதிஷம் - ஞானத்தை அல்லது அறிவைத் தரும் ஒளி.
- ❖ நட்சத்திரங்களின் தூதுச் செய்தி என்ற கருத்துமுண்டு.

சோதிடம் வானியல் படி அமைகின்ற கோள்களின் நிலையைச் சாரந்துள்ளது என்பர். பண்டைய சந்திரன், நாள், சந்திரமாதம், சூரியவருடம், ஆறு காலங்கள், பன்னிரெண்டு, மாதங்கள், 27 நட்சத்திரங்கள், யுகங்கள், சதுர் யுகங்கள், மன்வந்தரங்கள் பற்றிய குறிப்புக்கள யாவும் இந்து சோதிடக் கலைக்கு அடிப்படையாக அமைந்தன எனலாம். பண்டைய வானியல் கோட்பாடுகளான பிதாம கோட்பாடு, புளிஷ கோட்பாடு, சூரியக் கோட்பாடு போன்றவையும் இந்து சோதிடக் கலை வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமைந்தன.

பொதுவாக மக்கள் வானவீதியில் வலம் வரும் கோள்கள், நட்சத்திரங்களின் இருப்புக்கள், அசைவுகள் என்பனவற்றை அறிந்து அவற்றின் இயக்கங்கள் பூமியோடு எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதையும் அந்தத் தொடர்புகளால் மானிட வாழ்வில் எத்தகைய தாக்கங்கள் ஏற்படும் என்பதையும் தெரிந்து அத்தீமைகளினிறும் தப்பி நன்மையடைய முயன்றனர். இம் முயற்சியின் விளைவாகத் தோற்றம் பெற்றதே சோதிடவியல் என்ற கருத்தும் காணப்படுகின்றது.

**சோதிட சார் நூல்கள்:-**

புராதன வானியலறிஞர்களான ஆரியப் பட்டர் பிரம்மகுப்தர் ஆகியோரின் நூல்களிலிருந்தும் சோதிடவியல் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன. கார்கி சம்ஹிதை சோதிடத்தைப் பற்றிய ஒரு நூலாக அமைவதாகவும் இது கிறிஸ்து

சகாப்தத்தின் ஆரம்ப காலத்தில் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. கார்க என்பவரது நூலை அடிப்படையாகக் கொண்டு வராஹிமிகிர் எனும் வானியலாளர் பிருஹத்சம்ஹிதை எனும் சோதிட நூலை இயற்றினார் எனக் கூறப்படுகின்றது. இந்நூலில் சோதிடக் கலைச் சொற்கள் பற்றிய விளக்கம் பல்வேறு கிரகங்கள் பற்றிய விளக்கம் பல்வேறுபட்ட பிறப்புக்கள் பாலரிஸ்டம் எனும் இளமையில் இறப்பு, நீண்ட ஆயுளைத் தீர்மானித்தல், கால ஒழுங்கில் கிரகபலன், வாழ்க்கை முறை, ராஜயோகம் இரு கிரக சேர்க்கைப் பலன், பல்வேறு ராசி வீடுகளில் உள்ள கிரக பலன், துரதிஸ்டம், மாரகம் ஏற்படுதல் போன்ற விபரங்கள் கூறப்பட்டுள்ளன. வராஹிமிகிரர் இது தவிர பிருபத்ஜாதக, யோகயாத்திரா போன்ற நூல்களையும் எழுதியுள்ளோம். இந்நூல்கள் தவிர கி.பி 1114 இல் வாழ்ந்த பாஸ்கராச்சாரியாரின் சாதக பாஸ்கரன் என்னும் நூலும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ் நாட்டில் சோதிடம்:-

தமிழ் நாட்டில் புராதன வரலாற்றை அறிய உதவும் சங்க இலக்கியங்களில் சோதிடம் பற்றிய செய்திகள் அக் காலப் புலவர்களால் பாடப்பட்டுள்ளன. நெடுநெல் வாடையில் நக்கீரர் வானவியல் குறிப்பு ஒன்றைக் கொடுத்துள்ளார். ஞாயிறானது மேடராசி தொடங்கி இராசி தோறும் பெயர்ந்து செல்வதை அவர் பாடியுள்ளார். கூடலூர்க் கிழார் மற்றும் உறையூ முதுகண்ணன் புறநானூற்றில் சோதிட செய்திகளை கூறியுள்ளார்.

பொதுவாக சங்ககாலத் தமிழர்கள் கி.பி 3ம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே

1. மேடம், இடபம் முதலான பன்னிரண்டு இராசிகளையும்
2. கோள்கள் திரிந்து வரும் வானமண்டலத்துள் அமைந்திருக்கும் நாண் மீன்களையும்
3. கோள்நிலை திரிவதாலும், புகைமீன் வீழ்வதாலும் நாண்மீன் ஒவ்வொன்றுடனும் நிலாக்கூடி வருவதாலும் ஏற்படக் கூடிய விளைவுகளையும் அறிந்திருந்தனர்.

பழந்தமிழர்களில் சிலர் இருக்குமிடத்திலிருந்தே கோள்களைத் துல்லியமாக கணிக்கும் ஆற்றல், பெற்றிருந்தனர். சங்க இலக்கியங்களில் "கணியன்" "பெறங்கணியன்" சம்பந்தமான குறிப்புக்கள் காணப்படுகின்றன.

## பண்டைத் தமிழர்

செவ்வண்ணக்கோளைச் - செவ்வாய்

பொன் வண்ணக் கோளைப் (வியாழன்) – பொண்

வெண்ணிறக் கோள் - வெள்ளி

நீலவண்ணக் கோள் - நீலக்காரி என

வழங்கியமைக்குச் சான்றுகளுண்டு

பபிலோனியா, சுமேரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையிலான விரிவான கடல் வணிகத்தில் ஈடுபட்டிருந்த பண்டைத் தமிழர் வானநிலையைக் கண்டே காலத்தையும் திசையையும் ஒட்டினர். சங்கமருவிய காலத்தில் எழுந்த திருக்குறளில் சோதிடம் பற்றிய குறிப்புக்கள் உண்டு. பல்லவர் காலத்தவரான திருஞான சம்பந்தரின் பதிகத்தில் சோதிடக் குறிப்பு காணப்படுகின்றது.

சோழர் காலத்தில் சோதிட விற்பன்னர்கள் அரசசபையை அலங்கரித்திருந்தனர். கி.பி 17ஆம் நூற்றாண்டில் சித்தர்களின் பெயரால் பல்வேறு சோதிட நூல்கள் இயற்றப்பட்டன.

## ஈழத்தில் சோதிடக் கலை

- ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் சோதிட நூல்கள் தோன்றின.

- கி.பி 1310இல் அரசவைப் புலவரான போசரா பண்டிதரால் சரசோதிமாலை பாடப்பட்டது.
- 1380இல் சோமசன்மா என்பவரால் செக்ராச சேக்ர மாலை பாடப்பட்டது.
- 1713இல் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அராலி இராமலிங்க முனிவரால் சந்தான தீபிகை இயற்றப்பட்டது.
- கி.பி 1929இல் அம்பலவாணர்ப்பிள்ளை இடைக்காடர் என்போரால் வானகசேகர சோடசபாவன சோதிடம் எனும் "இலகுசாதகம்" எனும் நூல் இயற்றப்பட்டது.
- 20ஆம் நூற்றாண்டில் "சந்தானமணி" எனும் சோதிட நூல் சபாபதி சோதிடரால் இயற்றப்பட்டது.

## பஞ்சாங்கம்

வரும் திகதி, நட்சத்திரம், யோகம், கரணம், எனும் ஐந்து முக்கிய குறிப்புக்களை உடையது பஞ்சாங்கம் எனப்படும்.

**வாரம்** – 7 வாரம் - இரவிவாரம், சோமவாரம், மங்கள வாரம், புதன் வாரம், பிரகஸ்தி வாரம், சுக்கிர வாரம், சனிவாரம்.

**திதி:–** இது சூரியன் நிற்குமிடத்திலிருந்து சந்திரன் நிற்கும் தூரத்தைக் குறித்து நிற்கும். பிரதமை முதல் பூரண வரை – சுக்கிலபட்சம்

பிரதமை முதல் அமாவாசை வரை – கிருஸ்ண பட்சம்

நட்சத்திரம்:- அச்சுவினி முதல் வேதி ஈறாக 27 ஆகும்.

யோகம்:- இது நட்சத்திரங்களைக் கொண்டு கணிக்கப்படும்

கரணம்:- 30ம் திகதிக்கும் 60 காரணங்களைக் குறிப்பிடுபவர் திகதிகளுக்கும் கரணமுண்டு.

அயனங்கள்:- அயனங்கள் இரு வகைப்படும். அவையாவன

1. உத்தராயனம் (தை முதல் ஆனி வரை)
2. தட்சிணாயனம் (ஆடி முதல் மார்கழி வரை)

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
| கும்பம் | இராசி அமைப்பு | | சிங்கம் |
| மகரம் | | | கடகம் |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

### கிரகங்களுக்குரிய எண்கள்

சூரியன் - 1
சந்திரன் - 2
குரு – 3
ராகு – 4
புதன் - 5
சுக்கிரன் - 6
கேது – 7
சனி – 8
செவ்வாய் - 9

திருமதி.இ.திருக்கேதீஸ்வரன்
இந்து நாகரிக ஆசிரியை



## என் அன்னையே..........!

பத்து மாதம் சுமந்து

பாலும் சோறும் தந்து

பக்குவமாய் வளர்த்தாள்

என் அன்னை

நீ தூங்காமல் என்னைத்

தூங்க வைத்தாய்

நான் அடித்தாலும்

வலி பொறுத்தாய்

பூக்களால் உன்னை

வாழ்த்தவில்லை

இதயத்தால் வாழ்த்துகின்றேன்

உன் பிள்ளை

சி.லக்ஷனா

தரம் -01 C

தவறி விழும்போது சிலருக்கு
வாயிலிருந்து வருகிறது
அம்மா.

# நம்ப முடியாத உண்மைகள்

- ✶ கங்காருவின் குட்டி பிறந்தவுடன் ஓர் அங்குல உயரம் இருக்கும்.
- ✶ நத்தையின் வேகம் மணிக்கு 23 அங்குலம் . பற்களின் தொகை 135.
- ✶ கடலில் வாழும் மீன்கள் கடல் நீரைக் குடிக்கின்றன. ஆனால் நன்னீரில் வாழும் மீன்கள் நன்னீரைக் குடிப்பதில்லை.
- ✶ 1753 ஆம் ஆண்டு பிரான்சில் ஒரு குழந்தை நெற்றிக் கண்ணுடன் பிறந்தது.
- ✶ இரையே இல்லாமல்ப் பாம்பு 25மாதங்களும். தவளை 16 மாதங்களும் உயிர் வாழும்.
- ✶ கலிபோர்னியாவிலே உள்ள பூனையொன்று நான்கு தலைகள் கொண்ட குட்டியை ஈன்றது.
- ✶ பொதுவாக பெண் யானைகளுக்கு கொம்பு முளைப்பதில்லை ஆனால் ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள பெண் யானைக்குக் கொம்பு உண்டு.

## பெயர் இப்படித்தான் வந்தது!

அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இருப்பிடத்துக்கு வெள்ளை மாளிகை என்று பெயர் 814 இல் இந்தக் கட்டத்தில் தீ விபத்து ஏற்பட்டது. சுவர்கள் எல்லாம் தீப்பிளம்பால் கறையாகி விட்டன. அதன் பிறகு அவற்றை மறைப்பதற்காக வெள்ளைப்பெயின்ட் அடிக்கப்பட்டது. அதிலிருந்துதான் அக் கட்டடத்திற்கு 'வெள்ளைமாளிகை' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

## சிந்தித்துச் செயற்பட ........ !

- ✶ ஒரு நொடியில் செய்த தவறு வாழ்நாள் முழுவதும் கவலை தரும்.
- ✶ கோபத்தோடு எழுகிறவன் நஷ்டத்தோடு உட்காருவான்.
- ✶ அநியாயமாக அடைந்த பொருள் மற்றப்பொருட்களையும் அழித்துவிடும்.
- ✶ திட்டமில்லா செயல்கள் யாவும் நஷ்டத்தை தரும்.
- ✶ உன் குணம் சரியாக இருந்தால் உன் புகழும் சரியாக இருக்கும்.

## உலக நாடுகளின் தேசிய சின்னங்கள்

- ➢ அமெரிக்கா – தங்கத்தடி
- ➢ அவுஸ்திரேலியா – கங்காரு
- ➢ அயர்லாந்து- ஹப்ரக் மலர்
- ➢ இந்தியா- சிங்கத்தின் தலை
- ➢ இலங்கை- வாளுடன் சிங்கம்
- ➢ ஈரான்- ரோஜா மலர்

- எகிப்து- தாமரைப்பூ
- கனடா- வெள்ளை மலர் (அல்லி)
- சீனா- திராட்சை மலர்
- ஈராக்- சிவப்பு ரோஜா
- சுவிற்சர்லாந்து- இடல்விஸ்
- பாகிஸ்தான்- பிறை
- போலந்து- சோலி மலர்
- பிரான்ஸ்- அல்லி மலர்
- பிரித்தானியா- ரோஜா மலர்
- ஜப்பான்- கூட்டுப்புழுக்கூடு
- ருமேனியா- பூவரசம்பூ
- ஜேர்மனி- கான்பூ
- ஸ்பெயின்- கருடன்
- டென்மார்க்- கடற்கரைச்செடி

# My Village

My Village is Atchuvely.

It is an agricultural village.

Most of the people are farmers here.

They earn a lot of money by growing grains and vegetables.

There are many Banks , Temples, Churches and a post office.

There are two big schools .

There is a big hospital too.

The people in my village are kind , polite and hard- working.

I'm very proud of my Village

V.Athirai

Grade-04A

# அறிவுடையோர் நட்பு உயர்வுக்கு அரணாகும்

நட்பு என்றது வாழ்க்கையில் வளர வேண்டிய ஒன்று. நட்பு இல்லா வாழ்வு உப்பில்லா பண்டம் போன்றது. அதுவும் அறிவுடையோர் நட்பு ஆலவிருட்சம் போன்றது. அது வளர்ந்து கொண்டே போகக் கூடியது. உயர்ந்து கொண்டே செல்லக் கூடியது.

**"நவில் தொறும் நாணயம் போலும் பயில் தொறும் பண்புடையாளர் நட்பு"** என்றார் வள்ளுவர்.

படிக்கப் படிக்கப் இன்பம் தரும் நூலின் சிறப்பைப் போல் பழகப் பழக இன்பம் தரக் கூடியது பண்புடையாளனின் நட்பு. நட்பு என்பது சிரித்துப் பேசி மகிழ்வதற்காக அல்ல. நல்ல வழியில் தவறிச் செல்வோரை திருத்துவதற்காக வரும்.

அறிவுடையோர்கள் கொள்ளும் நட்பு அனைவருக்கும் அரணாகத்தான் வாழ்வில் அமையும். படித்த நூல் நல்ல விடயங்களை பரிமாறவும், செய்யும் தொழில்களை வெற்றிகரமாக மேற்கொள்ளவும் அறிவுடையோர் நட்பு ஏற்படுகின்றது.

நண்பர்கள் வாழ்வில் உறுதுணையாய் நிற்பவர்கள் ஆனால் நட்பையும் தெரிந்து உறவு கொள்வதே நல்லது. தீயோர் நட்பு தீமையே பயக்கும்.

**"சீடங்காணின் எறிதற்குப் பட்டடை நேரா நிரந்தவர் நட்பு"** என்று திருக்குறள் கூறுகின்றது.

மனதார இல்லாமல் வெளியுலகிற்கு நண்பர்களைப் போல் நடிப்பவரின் நட்பானது ஒரு கேடு செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது இரும்பைத் துண்டாக்கத் தாங்கு பலனை போல இருக்கும் பட்டடைக் கல்லுக்கு ஒப்பாகும்.

அறிவுடையோரின் அருநட்பு அணையா விளக்கு போன்றது. அதை நாம் எப்போதும் வளர்த்தெடுக்க வேண்டும். உயர்ந்தோரே உலகோர் எனப்படுவதால் அவர்களுடன் நட்பு கொண்டு நல்வாழ்வு வாழ்வது நிலையான வாழ்வாக எமக்கு அமையும். ஒரு விளைவிற்கு எதிர் விளைவு எப்படி இருக்கும் என ஆழமாக சிந்திப்பவர்கள் அறிவுடையோர்கள். அறிவில்லாதவர்கள் அதனை சிந்திக்கவே மாட்டார்கள். எனவே அறிவுள்ளவர்களுடன் கொள்ளும் நட்பு தூண் போலவே எமக்குத் துணையாக அமையும். அறிவுள்ளவர்கள் நல்ல அறிவுரைகளை தேவையான இடங்களில் தேடித் தரக்கூடியவர்கள் சிறந்த பண்புள்ளம் படைத்தவர்கள். உயரிய வாழ்வுக்கு உறுதுணையானவர்கள் ஆதலால் அறிவுடையாருடன் நட்பு கொள்வதே நன்று.


தேவையான இடங்களில் சாமர்த்தியமாக உதவுவதற்கும் பலவற்றை எழுத்தாற்றல்களால் வடிக்கவும் அறிவுடையோருக்கே முடியும். எனவே அறிவுடையோரின் நட்பு அரணாகவே அமையும்.

தொழில்துறையில் முன்னேறிய நாடுகளில் நாம் வாழ்ந்தாலும் நல்ல அறிவுடையோருடன் நட்புக் கொண்டு வாழ்வது நன்மை பயக்கக் கூடியது. நல்ல நட்புடன் வளர்ந்தவர்கள் நானிலத்தில் அரணாகவே நிலைப்பவர்களாக உள்ளனர். அறிவுடையோர் நட்பு அமைவது அவர்களுக்கு ஆண்டவன் கொடுத்த நல்ல அருள் போன்றது. நாமும் இந்த புலம்பெயர் வாழ்வில் புகழுடன் வாழ்வதற்கு நல்ல நட்புக்களைத் தேடி நன்றாக வாழப்பழக வேண்டும். அதுவும் அறிவுடையோரின் நட்பைத் தேடி வாழ்ந்தால் எங்கள் வாழ்வு என்றும் சிறந்து விளங்கும்.

இ.லோகிதா

தரம் -13 - கலைப்பிரிவு

# கவிதை எழுதவென




கவிதை எழுதவென
ஆயுதமான காகிதம் ஒன்றை எடுத்து
கையில் பேனாவும் தொடுத்து
முற்றத்து மாமரத்து நிழலிலே
முதுமையான சார்மனை மீதினிலே
மெல்லிய தென்றல் வீசி வர
மெதுவாகச் சாய்ந்து கொண்டேன்
கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டேன்
கவிதை என எதை எழுதுவேன்?
அந்த நிலாவைப் பற்றி எழுதவா?
இந்தத் தமிழைப் பற்றி எழுதவா?
ஒரு பெண்ணைப் பற்றி எழுதவா?
என் சோகம் பற்றி எழுதவா??
எதை நான் எழுத..................
கண்ணின் ஓரம் நீர்த்துளிகள்
கண்ணை மூடிக்கொள்கின்றேன்
காலடி ஓசை கேட்டு கண் விளித்தேன்
கட்டவிழ்ந்து கன்று துள்ளிக் குதித்தோடியது
அந்தக் காகிதம் காற்றில் பறந்திருந்தது
ஏளனமாய் எனைப் பார்த்துச் சிரித்தது
கைப்பிடியில் சலித்த பேனாவும்
கவனமற்றுக் கிடந்தது
என் நிலை கண்ட வானம் மட்டும்
விம்மி வெடித்து அழத் தொடங்கியது
வீட்டுக்குள்ளே புகுந்து கொண்டேன்
விடியட்டும் எழுதலாம் என்று
விழிகளை மூடிக்கொள்கின்றேன் - இனி
விடியும் வரை சுகம் தான்

ர.சுபதர்சினி

தரம் 7B

நல்ல சொற்கள் நம்மை சிந்திக்க வைக்கின்றன
நல்ல செயல்கள் நம்மை மௌனமாக்குகின்றன

## புனித தெரேசாவே வாழி நீ

சிங்கார மொட்டுக்களாய்
சிறகடிக்கும் சிட்டுக்களாய் - நாம்
சிறப்புடனே சுற்றிவர
சிறந்த தெரேசாவே வாழி நீ

சீர் நிறைந்த கல்விதனை
சீராக எமக்களிக்கும்
சிற்பமாய் உயர்ந்திருக்கும்
தெரேசாவே வாழி நீ

பண்புடனே பலகலையும்
பாங்குடனே ஒழுக்கமும்
பக்குவமாய் நாம் பயில
வளமான தெரேசாவே வாழி நீ

சுத்தம் தனையே – நாம்
நித்தம் பேணியே வாழ
சுதந்திரமாய் சொல்லித் தரும்
தெரேசாள் அன்னையே வாழி நீ

கல்வித் தரத்தில் உயர்ந்து
கல்வி சாதனைகள் பல படைத்து
காலத்தினால் அழியாத தெரேசாவே
வாழிய நீ ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்
வாழிய நீ! வாழிய வாழியவே


சு.தீபிகா தரம் 3B

## The Crane

The Crane is a very tall water bird
It has long legs
Its body is pale – grey or white
It has a long neck
It's beak is very long too
It preys small fish and water insects
The cranes live loving pairs
They make shrill sounds
They fly together over long distances
They are faithful to each other.

R.Ronald

Grade -04B



# My Self

I am a boy.

My name is Darveen.

I am eight years old.

I live at Atchuvely.

I study at J/.St.Theresa's Girls" College.

I like Ice-cream

My best friend is Adithiyan.

My birthday is on the 30th of July.

My pet is a puppy.

My hobby is drawing.

I have only one sister.

Her name is Rathika.

I want to become a doctor in the future.



S.Darveen

Grade -03B

# Union Is Strength

# தமிழோசையை உலகமெல்லாம் பரவச் செய்தவர் தனிநாயகம் அடிகளார்.

தமிழ் அன்னையின் தவப்புதல்வாரன தனிநாயகம் அடிகளார் ஈழநாட்டுத் தமிழ்ச்சான்றோர் ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர் நிரலில் சிறப்பிடம் பெறுகின்றார்.

இவர் ஈழமணித் திருநாட்டின் வடபால் இயற்கை அழகு நிறைந்த நெய்தல் நிலமாகிய நெடுந்தீவில் ஸ்ரனிஸ்லஸ் கணபதிப்பிள்ளை, சிசில் ராசம்மா ஆகிய பெற்றோருக்கு 02-08-1913ஆம் ஆண்டு அவதரித்தார். ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வியையும் திறமையுடன் கற்று சித்தியெய்தினார்.

யாழ்ப்பாணம் குருத்துவக் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு புனித பேனாட் குருத்துவக் கல்லூரியிலும் ஒப்பியல், சமயம், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் தேறினார்.

புனித பூவியாம் உரோமாபுரியில் குருத்துவப் படிப்பை முடித்து குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு திருமுழுக்கு பெயரான சேவியர் என்ற பெயருடன் நெடுந்தீவு புனித சவேரியார் ஆலயத்தில் முதல் திருப்பலியை நிறைவேற்றினார்.

தமிழின் பெருமையை, சிறப்பை, உயர் பண்பாட்டை அயல் நாடுகளுக்கும் மேல் நாடுகளுக்கும் எடுத்துச் சென்ற பெருமை அவருடையதே. கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார் தோன்றிய தூத்துக்குடி புனித தெரேசாள் கல்லூரியில் நல்லாசிரியராகவும் அதிபராகவும் 1940 – 1945 வரை பணியாற்றினார்.

“மெல்லத் தமிழ் இனிச் சாகும“ என்ற பாரதியின் எச்சரிக்கையை உணர்த்துபவராக செயற்பட்டார். அவருக்கு தமிழ்பாரம்பரியத்தின் மீதும் அதன் கலாசாரத்தின் மீதும் இருந்து வந்த ஆழ்ந்த அறிவும், உணர்வும், ஈடுபாடும் தமிழ் கூறும் நல்லுலகத்தை ஒன்றுபடுத்தி அதன் மூலம் தமிழர்களுக்கு அவர்களது பெருமையையும் பாரம்பரியத்தையும் உணர்த்தி அவர்களை விழிப்புணர்வு பெறத் தூண்டின எனலாம்.

தமிழ்த்தூதின் முதற்படியாக 1950 – 1951 வரை வட தென் அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் விரிவுரையாற்றிய முதற் தமிழர் என்ற பெருமையினையும் தனதாக்கிக் கொண்டார். அடிகளாரின் பேச்சு நடை சேக்கிழார் பேச்சு நடையைத் தழுவியதால் 20ஆம் நூற்றாண்டின் சேக்கிழார் எனவும் அழைக்கப்பட்டார். அகிலமெல்லாம் தமிழ் மொழியின் சிறப்புப் பற்றி பேருரைகளை நிகழ்த்தி பலரையும் கவர்ந்தார்.

தமிழரின் பண்பாட்டை பாரம்பரியங்களை ஐயந்திரிபுறக் கற்றதோடன்றி,

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*

*நிற்க அதற்குத் தக"*

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஒப்பாக வாழ்ந்து காட்டியவர். உலகிலுள்ள பல்வேறு நாடுகளுக்கும் தூதுவராகச் சென்று தமிழ் மொழியின் மாண்பையும், இலக்கியத்தின் இனிமையையும் எடுத்தியம்பினார். தமிழில் இயற்கைக் காவியங்கள், தமிழ்த்தூது என்னும் கட்டுரைக் கொத்து ஒன்றே உலகம், நிலத்தோற்றமும் காவியமும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் பேருரைகள் என்பன இவரது நூற்தொகுப்புக்களும் சொற்பொழிவுகளுமாகும்.

உலகிலுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் உலகத் தமிழ் அறிஞர் நிறுவனமொன்றை 1953இல் நிறுவினார். உலக அரங்கிலே தமிழாராய்ச்சிக்கு சிறப்புமிக்க இடத்தை உருவாக்கியதில் அடிகளாருக்கு பெரும் பங்குண்டு.

அகத்தியர் காலம் தொட்டு இன்று வரை தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்த பெரியார்களில் அடிகளாரும் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றார்.

"மறைவாக நமக்குள்ளே

பழங்கதைகள் சொல்வதிலோர்

மகிமை இல்லை

திறமான புலமையெனில்

வெளிநாட்டார்

அதை அறியச் செய்தல்

வேண்டும்"

என்ற பாரதியின் பாவடிகளுக்கேற்ப வாழ்ந்து காட்டியவர். தமிழன்னைக்குத் தனிச் சிறப்புக் கொடுத்து அரியாசனத்திலிருத்தி அழகு பார்த்து தரணியெங்கும் அவள் தனிச்சிறப்பை அறிய வைத்த பெருமை அவருக்குரியது.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற திரு மூலரின் வாக்கைத் தாரக மந்திரமாகக் கொண்டிருந்தார்.

பாரதி கண்ட கனவை நனவாக்கிய தமிழ்த்தாயின் தவப்புதல்வன் தனிநாயகம் தமிழ்ப் பண்பாட்டின் தனிநாயகமாக சிந்தனையாளரின் தனிநாயகமாக தமிழ் அன்னையின்

கலை நாயகமாகத் திகழ்ந்தவர். 1980ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் இறையடி எய்தினார்.

தமிழ் வாழும் உலகெங்கும் தனிநாயகம் வாழும் என்பது உறுதி

என்றும் தமிழை நேசிக்கும்

கிருஷ்ணவி வேதேஸ்வரன்

A/L – 2014 – கலைப்பிரிவு

# "நவீன உலகினது வேகத்திற்கேற்ப யாழ் மாவட்ட சிறுவர்கள் தயார்படுத்தப்படல்"

இன்று நாம் வாழும் உலகானது புராதன கால நடை முறைகளிலிருந்தும் முன்னேற்றமடைந்து. எமது அத்தியாவசிய தேவைகள் முதல் ஆடம்பர தேவைகள் வரையிலான அனைத்து தேவைகளும் புதிய புதிய முறைகளிலேயே பூர்த்தி செய்யப்படுவதை அறிய முடிகின்றது. அதாவது நாளுக்கு நாள் விஞ்ஞான தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்கள் அவற்றினால் ஏற்படும் மாற்றங்கள் என்பன வியக்கத்தக்கதாகவும் கால மாற்றத்திற்கு ஏற்ப கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் வளர்ச்சி அடைந்து செல்கின்றது. இதனால் பழையவற்றிலிருந்து விடுபட்டு நவீனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து புதுமைகளை ஏற்கும் மனப்பாங்குகளையும் விளங்கிக் கொள்வதற்கான அறிவினையும் பெற்று உலகளாவிய வளர்ச்சி வேகத்திற்கு ஏற்ப நாமும் எம்மைத் தயார்படுத்திக் கொள்ளல் அவசியமாகின்றது. இந் நிலையில் எமது நாடும் உலகளாவிய வளர்ச்சி வேகத்திற்கு முகம் கொடுக்க வேண்டியநிலையிலுள்ளது. எமது நாட்டில் தொடர்ந்த யுத்தம் காரணமாகவும் இடம்பெயர்வுகள் காரணமாகவும் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றின் காரணமாக யாழ் மாவட்டமும் பொருளாதார, சமூக, கலாசார சீர்குலைவுகள் போன்றவற்றில் வீழ்ச்சியடைந்து தற்போது ஓரளவு உயர்வுநிலை ஏற்பட்டாலும் மாறிவரும் நவீன உலகினது வேகத்திற்கு ஏற்ப யாழ் மாவட்டமும் மாற வேண்டுமாயின் கல்வி நிலை உயர்த்தப்பட வேண்டியது அவசியமாகும். அவற்றிலும் சிறுவர்களே முக்கியமாகின்றனர். எதிர்கால முத்துக்களாகிய இன்றைய சிறுவர்களை கல்வி ரீதியாக தயார்படுத்த வேண்டும்.

யாழ் மாவட்ட சிறுவர்களை எடுத்துக் கொண்டால் அவர்களின் கல்வி உலகளாவிய ரீதியில் பின்னடைந்ததாகவே காணப்படுகின்றது. எமது நாடு கட்டாயக் கல்வியை அமுல்படுத்தியிருக்கின்ற வேளையிலும் யாழ்மாவட்டத்தில் இடைவிலகல், சிறுவர்கள் வேலைக்கமர்த்தல் போன்றன முற்றாக மறைந்து விடாத நிலை காணப்படுகின்றது. எனவே சிறுவர்களை கல்வியின் மூலமே எண்ணறிவு, எழுத்தறிவு என்பனவற்றைக் பெற்றுக் கொண்டு நவீன துறைகளிலும் வளர்ச்சியடைந்தவர்களாகவும் உருவாக்கப்பட வேண்டும். சிறுவயதிலேயே கல்வியைப் புகட்டுவதன் மூலம் சிறுவர்களை நற்பண்புடையவர்களாகவும் உருவாக்குதல் வேண்டும்.

சிறுவயதிலிருந்தே தாம் வாழும் சூழலை பதித்தல், சமூகத்தை மதித்தல், தேவைகளை உணர்ந்து கொள்ளுதல் பொய்மை என்றும் தவறாமை, நம்பிக்கையை நிலைநாட்டல் நல்லவற்றை நினைத்தல் சாதிக்கும் தன்மை போன்றவற்றை சிறுவர்களிடையே விருத்தி செய்தல் வேண்டும், இவ்வாறு சிறந்த கல்வியினூடாக சிறுவர்களை கல்வியில் தொடர்ந்து ஈடுபாடுடையவர்களாக்கி வழிப்படுத்துவதன் மூலம் நவீன உலகின் வேகத்திற்கு ஏற்ப யாழ் மாவட்டத்தையும் மாற்றியமைப்பதற்கு சிறுவர்கள் தயார்படுத்த வேண்டும்.

கல்வியின் மூலம் வழங்கப்படும் அடிப்படைத் திறன்கள் எதிர்கால முன்னேற்றகரமான வாழ்விற்கு பெரிதும் பயன்படும். சிறுவர்களின் உள வளர்ச்சியில் பெரும்பகுதி ஆரம்ப வயதுகளில் பதியப்படுவதாக கூறப்படுகின்றது. நவீன உலகில் பிள்ளைகள் தமது வாழ்நாளில் அதிகளவிலான மக்களுடன் கூடி வாழ வேண்டிய நிலையும் ஏற்படும். இவ்வேளைகளில் இசைந்து வாழும் தன்மைகளை இன்றைய சிறுவர்கள் புரிந்து கொண்டால ஒற்றுமையாக வாழ முடியும். ஒற்றுமை மூலம் ஏனைய மக்களின் முன்னேற்றங்களையும், வளர்ச்சிகளையும் அறிந்து தாமும் மேம்பட முடியும். அத்துடன் நவீனத்துவமாக வளர்ந்து வரும் விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவினை எல்லோரும் பெறுவதற்கும் அதனைப் பயன்படுத்தி சமூக, பொருளாதார விருத்திகளை ஏற்படுத்துவதற்கும் புதுமைகளை இனங்காண்பதற்கும் எமது இடத்திற்குப் பொருத்தமானதை தெரிவு செய்வதற்கும் சிறுவர்கள் சிறப்பாற்றல்களைப் பெற்றிருத்தல்

வேண்டும். புதுமைகள் தொடர்பாக எமது இடத்திற்குப் பொருத்தமானவற்றை இனங்காண்பதன் மூலம் ஆபத்துக்களிலிருந்தும் தப்பிக் கொள்ள முடியும். இவற்றுக்கெல்லாம் இன்றைய சிறுவர்களே சிறப்பாக தயார்படல் வேண்டும்.

யாழ் மாவட்டம் பெரிதும் விவசாயத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுவதால் விரைவான உலகளாவிய விவசாயத் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி உற்பத்திகளையும், வெளியீடுகளையும் பெருக்கி பொருளாதார முன்னேற்றமடைவதற்கு ஏற்றதாக சிறுவர்களுக்கு எமது சூழல் தொடர்பான பல்வேறுபட்ட சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்தி தயார்படுத்த வேண்டும். மேலும் மக்களுக்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்புகளை புரிந்து கொண்டு பெருகிவரும் சனத்தொகையினால் ஏற்படக்கூடிய பொருளாதார விளைவுகளையும், சவால்களையும் எதிர்கொண்டு அவற்றிற்கு எதிர்காலத்தில் எவ்வாறு தீர்வு காண வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட திறன்கள் வளர்க்கப்படல் வேண்டும்.

கணினியே வாழ்க்கையாகி விட்ட இக்காலகட்டத்தில் ஒரு நூலை வாசிக்கவோ, எழுத்துக்களை எழுதவோ தெரியாதிருப்பது எந்த இடத்திற்கும பயனற்றதாகி விடும் இவ்வாறானவர்கள் நவீன உலகிற்கு தேவையற்றவர்களாகின்றனர். எனவே அடிப்படைக்கல்வியைக் கட்டாயமாக வழங்குதவன் மூலம் சிறுவர்களை நாளைய உலகில் தலைநிமிர்ந்து நிற்க வைக்கலாம். இந்த வகையில் யாழ் மாவட்ட சிறுவர்கள், சமூகத்திற்கு ஏற்ற நற்பிரஜைகளாகவும் தமது கலாசார விழுமியங்களை எதிர்காலத்திலும் பேணிப் பாதுகாக்கக் கூடியவர்களாகவும் ஒழுக்கங்களை பயின்று இருத்தல் வேண்டும். தத்தமது உரிமைகளையும் மாறிவரும் உலகிலும் பெற்றுக்கொள்ளக் கூடியனவாக இருத்தல் வேண்டும்.

சிறுவர்கள் எவ்வெவ்வழிகளில் சென்று முன்னேற முடியுமோ அவ்வழிகளில் சென்று முன்னேற வழி அமைக்கப்பட வேண்டும். குடும்பம், பாடசாலை, சமூகம் என்பவற்றினூடாகவும் சிறந்த கல்வி முறைகளினூடாகவும் சிறப்பாக்கம் பெற வழி செய்தல் அவசியமாகும். இவை துரிதமாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

எனவே எமது நாளைய தலைமுறையினரை இன்றே நன்றாக உருவாக்குதல் அவசியமாகும். இது யாழ் மாவட்ட ஆசிரியர்கள், கல்விமான்கள், பெரியோர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரினதும் கைகளிலும் பெரும் பொறுப்பாக உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு கவனிக்கப்படல் வேண்டும்.

திருமதி.கௌரி சுபீஸ்கரன்

ஆரம்பக் கல்வி ஆசிரியர்

**இனிய உள்ளத்தின் அடையாளம் மலர்ந்த முகம்.**

**கைவிடப்பட்டோருக்குத் தந்தையாயிரு**
**ஒடுக்கப்பட்டோர்க்குத் தாயாய் இரு.**

**பொன்னையும், முத்துக்களையும் விட, அறிவுள்ள பேச்சே விலையுயர்ந்த அணிகலன்.**

# Bird watching

Birds are beautiful and charming creatures. They are a wonderful creation of Mother Nature.

Bird watching is an interesting hobby of many people all over world.

There are birds of different sizes. Shapes and beautiful colors. Most birds usually fly about in groups numbering from a few to hundreds and thousands. Their feeding habits too, vary from species to species. Birds eat grains, worms and fish.


They make pleasant noises. Some birds like nightingales sing. Parrots and mynas can be trained to talk. I have seen many birds swimming and diving in the water. I had a liking for birds from my very young days. I like to watch them.

It is very interesting to observe birds during the mating season. They build beautiful nests. The female lays eggs in these nests, some of which are very unusual. The colors of eggs vary from bird to bird.

The female broods over the eggs. After the eggs are hatched, the parents feed the young birds until they grow big. The parents also teach the young birds to fly.

Many birds fly across oceans and continents to warmer places during winter. This is called migration.

Tharshana



# என்னைக் கவர்ந்த எனது பாடசாலை

அச்சுவேலி மத்தியில் அமைந்த
அரும் பெரும் கூடம்
அச்சாக அமைந்த அச்சுவேலிப் பதியில்
ஆங்கிலக் கல்லூரியாய் இருந்து அகமகிழ்வானது
சிற்றம்பலத்தின் கைபட்ட காலத்திலிருந்து

மெச்சு தமிழையும் மேன்மை ஆங்கிலத்தையும்
வளப்படுத்த வழிகள் பல சமைத்தது
காலத்தை கடந்த காவியமானது
ஆங்கிலேயர்களால் ஆட்சிப்படுத்தப்பட்டது

முகப்புத் தோற்றம் முழுமதிநிலவு
மத்தியில் அமைந்த மதிபுகழ் விளக்கு
சாற்றிடும் கல்வியை சரியாக ஊட்டுது
ஒழுக்க சீலம் ஓங்கி விளங்குது

மத்தியில் அமைந்த மைதான விளக்கு
மாறில்லா மலர்வை மங்காது தருகிறது
காலை கூட்டத்தை கலை மகிழ்வு ஆக்கிறது
உடற்பயிற்சி என்றும் உயர்வை வளர்கிறது

நல்ல ஆசான்கள் நடமாடும் கூடம்
நல்ல கல்வியை நாள் எல்லாம் தருகிறது
போட்டி நிகழ்வுகள் புகழ் கொடி ஏற்றுது
ஆங்கில நிகழ்வு அழகாய் அமையுது

விளையாட்டு நிகழ்வுகள் வீரம் பதிக்கவே
இல்லங்கள் அமைத்து இனிமை கொள்வர்
பலபல விளையாட்டு பாங்குடன் திகழும்
அணி நடை அமைவு அழகாய் அமையும்

என்னைக் கவர்ந்த இனிய கல்லூரி
என்றும் என் சென்தெரேசாள் கல்லூரி
இன்றும் என்றும் வாழ்க வாழ்க
இதய ஜோதியாய் என்றும் நிலைக்க.

து.சண்சியா தரம் -9B




நாம் நம்முடன் இருக்கும் நண்பர்களிடம் அன்புசெலுத்த முடியாமற் போனால் நம்மாற் பார்க்க முடியாத கடவுளிடத்தில் எப்படி அன்புசெலுத்த முடியும்.

- அன்னை தெரேசா -

# *Our Honoured Guests*


















PURE & TRUE
1947






# மலர்கள்

எங்கள் வீட்டில் வளருது பார்
பூஞ்செடிகள் நண்பா!
வண்ண வண்ண மலர்கள் பூத்து
கண்ணைப் பறிக்குது நண்பா!

பாடிப்பாடி வண்டுவந்து தேன்
அருந்துது
கமகமவென நறுமணம் பரப்பி
நிற்கிறது!
பலவர்ண மலர்கள் கொய்து
மாலை தொடுப்போம்.



இ.சோபிகா
தரம் 2A

தோல்வியடையும் போது துவண்டு விடாதே
தோல்வி ஒன்றும் தொடர் கதையல்ல
தொடர் கதைக்கும் கூட
முற்றுப் புள்ளி உண்டு.

விவேகானந்தர்

*It's better to try and fail than never to have tried at all.*

# My Friend

My Friend is Banuja.

She is very pretty.

Her Father's name is Ravi . He is a doctor.

Her mother's name is Mala. She is a lawyer.

Banuja has two brothers.

My Friend lives in our village.

She is very slim.

She has beautiful eyes.

Her Favourite colour is green.

She is very clever.

Her favourite food is noodles.

Her hobby is gardening.

Her birthday is on the fifth of July.

I like her very much.

Cherin Thusikka

Grade -03[B]

# My Hobby

My Hobby is gardening.

I have a garden in my home.

There are many vegetable plants and flower plants.

I spend my leisure time in my garden.

I water the plants in the evenings.

My mother gets fresh vegetables from my garden daily.

I earn some pocket money too.

My hobby is very useful and profitable.

W.Thulaksiga

Grade -04[B]



## வாழ்வின் பாடங்கள் - அவனுக்கு இனி கனவுகளும் கூட வராது ..............

அந்த ஆஸ்பத்திரி அந்த வாட்டு அதன் சுற்றுப்புற சூழ்நிலைகள் எல்லாமே மௌனமாக இருந்தன. ஜன்னலுக்கருகில் கதவோரமாக போடப்பட்ட ஒரு கட்டிலில் சுமார் பத்தொன்பது வயது மதிக்கத்தக்க இளைஞனான அவன் கண்ணயர்ந்த படி சாய்ந்து இருந்தான். அவன் கண்கள் மூடப்பட்டுக் கிடந்த போதும் ஏனிந்த வாழ்க்கை என்பது போல் அவன் முகம் மிக ஆழமான சோகத்தில் மூழ்கிப் போயிருந்தது போல் தோன்றியது.

அவனது முகம் மட்டும் சோகத்தைப் பறை சாற்றவில்லை. அவனைப் போர்த்தியிருந்த போர்வையை விலக்கி அவன் சரீரத்தைப் பார்த்த போது மனது மேலும் திக்கென்றது. ஆம் அவனது முழங்கால்களுக்குக் கீழ் கால்கள் இரண்டும் துண்டிக்கப்பட்டிருந்தது. வாழ்வின் நுழைவாயிலில் நுழையத் தயாராக இருந்த அவனுக்கு இனிமேல் அதற்கான சந்தர்ப்பம் முற்றாக இல்லாது போகுமா?

அவனை இப்போதைக்கு சாந்தன் என்று அழைப்போம். மன்னாரின் குக் கிராமம் ஒன்றில் இரண்டு தங்கைகளுக்கு அண்ணனாக குடும்பத்திற்கு மூத்தவனாக பிறந்தவன் இவன். நீண்ட காலமாக நிலவிவந்த யுத்தம் இவர்களின் தந்தையை அவர்களிடம் இருந்து நிரந்தரமாகப் பிரித்து விட்டது. சிறுவயதிலேயே தந்தையை இழந்து விட்ட அவர்களுக்குத் தாய் மட்டுமே துணை. அவனது தாய் அவர்களை ஆளாக்க மிகச் சிரமப்பட்டாள். குடும்பப் பாரத்தை சுமக்க முடியாமல் அவன் தாய் சோர்ந்து போய் வானத்தை வெறித்துப் பார்த்து துக்கப்படும் போதெல்லாம் அவன் தன் தாய் படும் வேதனையை நினைத்து கலங்கிக் கண்ணீர் விடுவான்.

அப்போதெல்லாம் சிறுவனான அவனால் தன் தாய்க்கு உதவ முடியவில்லையே என்ற ஆதங்கம் மட்டுமே விஸ்வ ரூபம் எடுக்கும். தான் பெரியவனானதும் இலங்கையின் தலை நகரான கொழும்புக்கு சென்று உழைத்துப் பணம் சம்பாதித்து தன் தங்கைகளையும் அம்மாவையும் நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும் என நினைத்து தன்னை தேற்றிக் கொள்வான். எனினும் அதற்கான பாதை அவனுக்குத் தெரியவில்லை. அவனால் சரியாக படிக்க முடியவில்லை. அவர்களின் வயிற்றுப் பசியைப் போக்குவதற்கே பலரின் கால்களில் மிதிபட வேண்டியிருந்தது.

எனினும் காலம் என்பது எதனையும் நிறுத்தி வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. அது ஒரு கணமும் நில்லாது ஓடிக் கொண்டு தான் இருக்கும். இந்தக் கால கட்டத்திற்கு சாந்தனும் அவனது இரு தங்கைகளும் மாத்திரம் விதிவிலக்கானவர்கள் அல்ல. வேகமான கால ஓட்டத்தில் அவர்களும் உரிய வயதைத் தாண்டி வளர்ந்தார்கள். சாந்தனின் கொழும்புக்குப் போகும் கனவு கூட அவனது வயதுடன் சேர்ந்து வளர்ச்சியடைந்தது. அவன் 15 வயதைத் தாண்டியபோதே பெரிய மனிதர் போல நடந்து கொண்டான். பாரிய பொறுப்பு தனது தலைமேல் சுமத்தப்பட்டு அழுத்திக் கொண்டிருப்பது போல் உணர்ந்தான். தன் தங்கைகளின் பெரு விழிகளை அவன் உற்றுப் பார்த்த போதெல்லாம் வாழ்வில் அவர்கள் காண விரும்பும் வண்ணக் கனவுகளெல்லாம் ஆவியாகிக் கரைந்து போய்க் கொண்டிருப்பதாக அவனுக்கு தோன்றியது. அதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.

அவனுக்கு 18வயது பூர்த்தியாகும் வரை அதற்கான துணிச்சல் ஏற்படவில்லை. அம்மாவையும் தங்கைகளையும் விட்டுப் பிரிந்து நீண்ட நாட்களுக்கு வெளியிடத்தில் இருக்கும் மனோதிடம் அவனுக்கு இன்னமும் ஏற்படவில்லை. நான் கொழும்புக்கு போகப் போகின்றேன் என்று அம்மாவிடம் கூறிய போதெல்லாம் "போதுமடா நீ உழைத்து எங்களுக்கு சோறு போடுறதெல்லாம். ஆம்பிளைப் பிள்ளைன்னு நீ மட்டும் தான் எங்களுக்குத் துணையா இருக்கிறாய், நீயும் போயிட்டா யாருடா எங்களுக்குத் துணை" என்று அம்மா புலம்பியதுடன் அவன் அம்மாவுடன் கரைந்து நெகிழ்ந்து போவான். ஆனால் அவனுக்குள்ளிருந்த ஆதங்கம் போடா போடா என அவன் பிடரியைப் பிடித்துத் தள்ளிக் கொண்டே இருந்தது.

அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் தான் அவன் அம்மாவுக்கு கடிதம் எழுதி வைத்து விட்டு கொழும்பு பஸ்ஸில் ஏறினான். அவன் கொழும்பை பற்றிக் கேள்விப்பட்டிருந்தானே தவிர அது

எத்தனை பூதாகாரமானது என்ற அறிவு அவனுக்கு கொஞ்சம் கூட இருக்கவேயில்லை. கொழும்புக்குச் சென்று விட்டால் வேலை ஒன்றைத் தேடி விடலாம் என்ற எண்ணம் மாத்திரம் அவன் மனதில் வேரோடிப் போய் இருந்தது.

கிராமத்தில் குளம், குட்டை, இலை, குழை என பழகியிருந்த அவனுக்கு பஸ் மற்றும் மோட்டார் எஞ்சின்களின் உறுமல்கள் கூட சிங்கம் கர்ச்சிப்பதைப் போல் பய உணர்வை ஏற்படுத்தின.

இத்தனை வாகனங்களுக்கு மத்தியில் எவ்வாறு எதிர்புறம் செல்வது என்பது கூட அவனுக்கு தெரியவில்லை. ஆனால் பல பேர் அங்கும் இங்குமாக வாகனங்களுக்குள் புகுந்து வீதியைக் கடந்து கொண்டிருந்தார்கள். அப்படி வீதியைத் துணிச்சலுடன் கடப்பவர்கள் கொழும்பு நகரத்தில் வீதிகளை எவ்விதம் கடப்பது என்ற நுட்பத்தினை நன்கு தெரிந்து வைத்திருந்தவர்கள் என்பது சாந்தனுக்குத் தெரியாது.

சாந்தனும் காட்டுத் துணிச்சலுடன் தெரிந்த திசை நோக்கி விரைந்தான். முதலில் வலது புறம் நோக்கிச் செல்லும் வாகனங்களைத் தவிர்த்து, வீதியின் நடுப்புறம் சென்று, அதன்பின் இடது புறம் செல்லும் வாகனங்களை தவிர்த்து, மறுபுறத்தைக் கடப்பது என்பதே பாதையை கடக்கும் நுட்பம். ஆனால் இதனை அறியாத சாந்தன் ஒரே விதத்தில் வேகமாக பாதையைக் கடந்தான். விளைவு, தெரிந்த திசையில் விரைந்து வந்து கொண்டிருந்த டிரக் அவனை மோதி வீசித் தள்ளியது. அடுத்தடுத்து வந்த வாகனங்கள் அவன் கால்கள் மீது ஏறியது. யாரோ கூவினார்கள் "ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவு" அந்த சத்தங்கள் மட்டுமே அவன் இறுதியாகக் கேட்டவை.

அதன் பின் அவனுக்கு ஆஸ்பத்திரியில் நினைவு திரும்பிய போது அவன் முழு வாழ்வுமே மீண்டும் ஒரே தரமே இருண்டு போனது இந்த இருட்டில் அவனுக்குக் கனவுகள் கூட வரவில்லை.

சரண்யா தரம் 11 - B



# உரோம நாடக மரபு

உலக வரலாற்றில் கிரேக்க நாகரித்தின் பின்னர் முக்கியமான இடத்தைப் பெறுவது ரோம நாகரீகமாகும். இங்கும் நாடகம் மிக முக்கியமான இடத்தைப் பெற்றது. இந்நாடக மரபு ரோம சாம்ராஜ்யத்தினுடைய பண்புகளுக்கு இசைவதாக அமைகின்ற அதேவேளை கிரேக்க மரபினுடைய தொடர்ச்சியாக அமைவதைக் காணலாம்.

ரோமாபுரியிலும் கிரேக்கத்தைப் போல் முக்கியமானதொரு அரங்க மரபு காணப்பட்டது. ரோமாபுரியின் பல்வேறு நாடக ஆசிரியர்களினுள் நமக்கு இன்று கிடைத்திருப்பவர்கள் மூன்று முக்கியமான ஆசிரியர்கள் தான் அவர்களில் இருவர் மகிழ்நெறி நாடகங்களை எழுதியோர்களான பிளௌட்டஸ் (Platus) ரெரன்ஸ் (Trerence) என்பவர்கள். (பிளௌட்டஸ் என்பவர் கி.மு 205 – 160 வரை வாழ்ந்தவர்) அடுத்து திறஜெடி பற்றிய நாடகங்களை எழுதிய செனேக்கா என்பவர் இவர் கி.பி 1ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

ரோமாபுரியிலும் நாடகங்கள் விழாக்களின் ஒரு அம்சமாகவே நிகழ்த்தப்பட்டன. இவ் விழாக்களை லூடி (Ludi) என்று சொல்வார்கள். லூடோஸ் என்றால் விளையாட்டு என்பது கருத்து ஒரு லூடோசினுடைய பின்னணியிலே தான் அவர்கள் இந்த நாடகங்களை நடத்தி வந்தார்கள். ரோம நாடக அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்த மகிழ்நெறி என்று குறிப்பிட வேண்டும். இதில் பிளௌட்டகம் ரெரன்சும் முக்கியமானவர்கள் எனப் பார்த்தோம். அவருடைய மெனாக்கமி (Manachmi) என்கிற நாடகம் முக்கியமானதொரு நாடகமாகும். இவரது நாடகங்களில் ஒரு குறிப்பிட்ட தெருக்காட்சி ஒரு மாளிகைக் காட்சி போன்ற காட்சியமைப்புக்கள் இருக்கும் ஊதாரியாக செலவு செய்து கொண்டு திரிகின்ற ஒருவரும் அதனால் இழி நிலைக்கு வருகின்ற ஒருவரும் அவரைச் சுரண்டி ஏமாற்றிச் சீவிக்கின்ற ஒருவனும் கொண்டதாக கதையினுடைய அமைப்பு இருக்கும். இதைவிடக் கதையில் இன்னொர போக்கும் காணப்படும் நீண்டகாலமாக காணப்படாதிருந்த ஒருவரை கண்டு பிடிப்பதாகவும் நாடகத்தின் இறுதி அமையும்.

பொதுவாக இது சுகமான மகிழ்ச்சியை தருவதாக இருக்குமே தவிர அரிஸ்ரோ பெனஸ் காலத்து மகிழ்நெறி போன்று கேலியும் கிண்டலும் நிறைந்ததாக அமையாது. ரோமன் திறஜெடியைப் பொறுத்தவரை செனேக்காவினுடைய நாடகங்கள் மிகவும் வித்தியாசமானவை இவர் நாடகங்களில் வாத விவாதங்கள் அதிகமாக இருக்கும் செனேக்காவின் நாடகங்களை கருத்து மோதல்களை எடுத்துக் காட்டும் நாடகங்களாக நாம் பார்க்கலாம். அவர் நீண்ட உரையாடல்களை எழுதும் தன்மையுடையவராக காணப்பட்டார். தமிழில் அண்ணாத்துரையினுடைய நாடகங்களிலே இப்பண்பை காணலாம்.

மேலும் செனேக்கா அறப் போதனை விடயங்களை எடுத்துப் பேசுபவராக காணப்படுவார். அவரின் நாடகத்திலே பழமொழிகள் அனுபவக் கூற்றுக்கள் நிறைய இருக்கும் செனேக்காவின் நாடகத்திலே மிக வன்மையான விடயங்கள் காணப்படுவது ஒரு புறம் இருக்க மந்திரம் மரணம் போன்றவையும் அதிகம் காணப்படும் செனேக்காவின் நாடகங்களை ஒட்டுமொத்தமாக பார்க்கின்ற பொழுது கிரேக்க திறெஜடியிலிருந்து மாறுபட்ட நிலையை நாங்கள் அங்கே காணலாம். ஈஸ்கலசினது நாடகங்களோ இணைந்து பார்க்கின்ற போது செனேக்காவினுடைய நாடகங்கள் மிகவும் தரமான நிலையினைச் சார்ந்தவரல்ல என்றாலும் கால கட்டத்தில் செனேக்காவினுடைய நாடகங்கள் மிக முக்கியமான நாடகங்களாக இருந்தன.


ரோம அரங்கிலே இவற்றை விட மேலும் சில நாடக ஆட்ட மரபுகள் நிலவின. அவை உளமங்கள் சொல்லப்படுகின்ற மைம் (Mime) போன்ற ஆட்டங்களும் பேண்டோமைம் (Pantomime)

என ஆங்கிலத்தில் சொல்லப்படும் பலபேர் இணைந்து கேலியும் கிண்டலுமாக வேடமுகங்களை போட்டு நின்று சுற்றியாடுகின்ற ஒரு ஆட்டங்களாகும்.

ரோம சாம்ராச்சியத்தில் நாடகத்திற்கு ஒரு முக்கியமான இடம் இருந்தது. கிரேக்க மரபை ஒட்டி வராத நாடகங்களும் ரோம பண்பாட்டிற் காணப்பட்டன.

மு.ஐங்கரன்

நாடகமும் அரங்கியலும் ஆசிரியர்



வெற்றிபெற மூன்று வழிகள் உள்ளது.

ஒன்று - மற்றவர்களை விட அதிகமாகத் தெரிந்துகொள்ளுங்கள்

இரண்டு - மற்றவர்களை விட அதிகமாகப் பணியாற்றுங்கள்

மூன்று - மற்றவர்களை விட குறைவாக எதிர்பாருங்கள்

"வில்லியம்ஸ் ஷேக்ஸ்பியர்"

# முதலுதவிப் பெட்டி (First Aid Box)

நாம் எவ்வளவு தான் கவனமாக செயற்பட்டாலும் சில சமயங்களில் எம்மை மீறி ஏதாவது விபத்துக்களோ! ஆபத்துக்களோ! ஏற்பட்டு விடுகின்றன. அது வீடாக இருக்கலாம் பாடசாலையாக இருக்கலாம் வர்த்தக நிலையம் மற்றும் வீதியாகவும் இருக்கலாம். என்பதை உத்தேசித்து ஒரு முதலுதவிப் பெட்டியை வைத்திருப்பது சம்பந்தப்பட்டவர்களின் கடமை ஆகும். தம்மோடு வைத்திருக்கும் கைப்பை (கான்பாக்)யினுள்ளே முதலுதவிப்பெட்டியை வைத்திருப்பார்கள் இல்லாவிடின் நாம் பயணிக்கும் பஸ்வண்டி (றெயின்) புகையிரத வண்டி போன்றவற்றில் கூட சில வேளைகளில் முதலுதவிப் பெட்டியைப் பார்த்து இருக்கின்றோம். அது பாராட்ட வேண்டிய விடயம் தான். அதைத் தவிர முதலுதவிப் பெட்டியில் என்னவெல்லாம் இருக்க வேண்டும் என்பதே அடுத்த முக்கியமான விடயம் ஆகும்.

- காயத்துக்குக் கட்டுப்போட பெண்டேச், பஞ்சு, பிளாஸ்டர், தொற்று நீக்கி மிகவும் அவசியமாக இருக்க வேண்டும்.
- கத்தரிக்கோல், ஊசி, பென்டோச் போன்றனவும் தேநீர் கரண்டி என்பனவும் இருத்தல் வேண்டும்.
- வலி நிவாரணத்திற்கான அஸ்பிரின், பனடோல், போன்ற வலி மாத்திரைகள் இருத்தல் வேண்டும்.
- இருமலுக்கான சிரப், அமிலத்தைக் கட்டுப்படுத்தும் ஆண்டாசிட் மாத்திரிகைள்
- டெற்றோல் லோஷன், மற்றும் டெற்றோல் சோப் ஏதாவது ஒரு எண்டி செப்ரிக் கிரீம் மற்றும் அண்டி பயோடிக் பவுடர் வைத்திருத்தல்.
- மவுத்வோஷ் (Mouth Wash) கொலோமின் லோசன், வசலின் , டிங்சர் அயோடின்

என்பனவும் அவசியமாக முதலுதவிப் பெட்டியில் இருத்தல் வேண்டும்.

முதலுதவிப் பெட்டியைக் கையாழுதல்:-

காலாவதியான மருந்து வகைகளை அப்புறப்படுத்துதல் அவசியம். வாய் மூலம் உட்கொள்ளும் மருந்துகளை ஒரு அடுக்கில் தனியாகவும் வெளியில் பூசும் மருந்துகளை ஒரு அடுக்கில் தனியாகவும் வைக்க வேண்டும். மாதத்திற்கு ஒரு முறையாவது முதலுதவிப் பெட்டியைச் சரிபார்த்து தயார் நிலையில் வைக்க வேண்டும். சூரியஒளி, ஈரலிப்பு, எறும்பு உள்ளிட்ட பூச்சிகளில் இருந்து பாதுகாப்பான இடத்தில் முதலுதவிப் பெட்டியை பொருத்த வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக எவரும் பார்க்கக் கூடிய இடத்தில் முதலுதவிப் பெட்டியை பொருத்த வேண்டும்.

எனினும் குழந்தைகளின் கைகளில் எட்டாத இடத்தில் அது இருக்க வேண்டும். பயன்படுத்தும் நேரத்தைத் தவிர ஏனைய சமயங்களில் முதலுதவிப் பெட்டி மூடியே இருக்க வேண்டும்.

அ.திருசாளினி 11 B

-யாரிடம் கற்கின்றோமோ அவரே ஆசிரியர். கற்றுக் கொடுப்பவர் எல்லாம் ஆசிரியர் அல்லர்-

## ஆசானின் ஆசி வேண்டி

கல்விப் பெருங்கடலை தேனமுதாய் ஊட்டிடுவார்
நம் வாழ்வில் இன்றியமையா தொன்றாம் கண்கள்
அக் கண்களுக்கு ஒளி போன்றவர் நம் குரு
கஸ்ரமான பல பாடங்கள் என நாம் முகம் சுழித்திட்டால்
தம் திறனால் இஸ்ரமாய் கற்க வழி செய்திடுவார்
கல் நெஞ்சாயினும் இளகச் செய்து பாறையையும் சாய்த்திடுவார்
செய்யும் செயல்கள் மூலம் தெய்வத்தை கூட உணர வைத்திடுவார்.
கருவறையிலே உருக்கொடுத்து உயிர்தந்தார் அம்மா
நமக்கு கல்வி அறிவு ஊட்டிட அயராது உழைப்பவர் அப்பா
அவ்வாறாய் ஆய கலைகளுக்கு அதிபதியானவளின் இன்னோர் வடிவமே நம் ஆசான்
ஆசானை பணிந்து ஏற்றுக்கொண்டால் ஆயகலைகளும் பெற்றிடலாம்
ஒழுக்கம் உயர்வு தரும் என்று புகட்டிட ஆசானுக்கு
ஒழுக்க சீலராய் நாம் சமூகத்தில் வாழ்ந்து காட்டிட்டால்
நமது ஆசானுக்கும் நாம் கற்ற கல்விக்கும் மகிமை
தாயானவள் தனது இரத்தத்தை பாலாக்கி குழந்தைக்கு ஊட்டிடுவாளே
நம் ஆசான் தம் வியர்வையை சிந்திப் மாணாக்கர்கள் பலரை
நற்பிரஜையாக நம் தாய் நாட்டிற்கு ஆக்கிடுவார் நன்றாய்
நம் பெற்றோர்க்கு அடுத்தபடியாய் நம் ஆசானை வணங்கி ஆசி பெற்றிடுவோம்.
ஆசானின் ஆசி ஒருவனை நல்ல நிலையில் வாழவைக்கும்
மாதா, பிதா, குரு, தெய்வம் என மொழிந்தனர் சான்றோர்
அதற்கமைவாக ஆசானின் ஆசியிருந்தால் நிச்சயம் வெற்றிக்கனி உங்கள் கையில்.

சி.சிவதர்சினி

A/L - 2013

## மாற்று வலு தந்தெமக்கு வளமூட்டும் ஜெய்ப்பூர்

விழிகள் இருந்தும் பார்வையில்லாத வாழ்வு
விழிகள் தெரியாது வார்த்தை மட்டும்
வழியாக விழியாக கொண்ட நடைகள்
அறியாத முன்வினைப் பாவங்கள் என அழும்
வார்த்தைகளை புரியாத மக்கள் கூட்டத்தில்
யார் புரிவார் என எண்ணி அழுது கொண்ட நாட்கள்
நேரெதிரான வாழ்க்கைக் கோலங்களில் வாழும்
பார்வையற்ற மனிதர்கள் எம்மைப் பண்போடு
ஆற்றலுள்ள மனிதர்களாய் மாற்றியமைத்து தினம்
போற்றும் வல்லமை தந்து வளமூட்டிய நல்ல
மாற்றம் தந்த ஜெய்ப்பூர் நிறுவனத்தை போற்றுவோம்
உயிருள்ளவரையது வலுவாக வாழட்டும்
கண்ணிழந்தும் கணினியை இயக்கக் கற்றுக் கொண்டோம்
மண்மீதில் மகத்தான இசையமைக்கக் கற்றுக்கொண்டோம்
விண்ணைத் தொடும் புகழைப் பெற்றுக் கொண்டோம்
எண்ணங்களை செயல்களாக வாழ வழிகாட்டிய
மாற்றுவலு தந்த ஜெயப்பூர் நிறுவனம் வாழ்க
மாறாதா என ஏங்கிய நாட்களை மாற்றியமைத்து
காற்றிலும் எம் காவியம் வாழ வழிகாட்டிய
ஆற்றலுள்ள நிறுவனமே நீ நீடுவழி வாழ்க

கு.பிரவிணா
தரம் 12



# எனது செல்லப் பிராணி கிளி



- கிளி ஒரு அழகான பறவை.
- கிளி பழம் தின்னும்.
- கிளி கீக்கீ எனக் கத்தும்.
- கிளி பேசும்.
- கிளி பச்சை நிறம்.
- கிளியின் சொண்டு சிவப்பு நிறம்.
- கிளி மரப்பொந்தில் வாழும்.
- கிளியின் கழுத்தில் ஆரம் உள்ளது.
- கிளி முட்டை இட்டு குஞ்சு பொரிக்கும்

மோ.கவிந்நயா

தரம் -1C




**எல்லோருமே உலகத்தை மாற்றவேண்டும் என்றுதான் எண்ணுகிறார்களே தவிர ஒருவரும் தன்னை எப்படி மாற்றிக்கொள்ளவேண்டும் என்று எண்ணுவதில்லை.**

"லியோ டோல்ஸ்டோய்"

"ஓடுவதில் பயனில்லை. நேரத்திற்கே புறப்படுங்கள்"

## அவசர உலகில் ஆங்கில மொழியின் அவசியங்கள்

நீர் வளம், நில வளம் நிறைந்த பூமியிலே கல்வி வளம் இன்று நாளுக்கு நாள் வளருகின்ற அதியசத்தை அறிய வைக்கும் பூமி இது.

இந்த பூமியிலே நாம் மனிதராய்ப் பிறந்தது நாம் செய்த புண்ணியமாகும். இன்றைய உலகில் பல தரப்பட்ட மொழிகள் உள்ளன. எல்லோராலும் எல்லா மொழியையும் பேச முடியாது ஆனால் எல்லோராலும் குறைந்த பட்சம் ஆங்கில மொழி பேச முடியும். எல்லா நாட்டிலும் இன மத வேறுபாடு இன்றி, ஒவ்வொரு நாட்டின் மூலை முடுக்கிலும் சிறுவர் முதல் முதியோர் வரை ஆங்கிலம் பேசுகின்றார்கள்.

எமது முன்னோர் ஆகிய திருவள்ளுவர் கூறிய திருக்குறள் ஆரம்பத்தில் தமிழில் கூறி எழுதப்பட்ட நூலாகும். இன்று அது ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்டதை எல்லோரும் நம்பக் கூடிய ஒன்றாகும். எமது கிராமத்தில் எம் போன்ற ஒவ்வொரு மாணவர்களும் ஆங்கில மொழியை நிச்சயமாக இரண்டாவது மொழியாக நேசிக்க வேண்டும் என்று நினைக்கின்றேன்.

இந்த வகையில் எமது பாடசாலையில் உள்ள ஒவ்வொரு ஆசிரியர்களும் எம்மை ஆங்கில மொழியில் தலைநிமிர வைக்க வேண்டும் என்று அரும்பாடுபடுகிறார்கள். இந்த இடத்தில் அவர்களுக்கும் நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்.




சி.வசீகரன்

தரம் -03 A

# தாய்



அன்பின் திருவுருவாய்

கருணையின் அடைக்கலமே!

பத்து மாதம் சுமந்தென்னை

பாரினிலே பெற்றெடுத்தீர்

உம் உதிரத்தை பாலாக

எனக்கருளி என்னை உயிர்ப்பித்தீர்

அன்போடும் பண்போடும் அரவணைத்து

பலகலைகள் நான் கற்றிடவே

பள்ளிக்கு அன்புடனே அனுப்பிடுவீர்

பலகலைகளை நான் கற்று

இப்புவியில் நான் உயர்ந்திடவே

நீர் பட்ட துன்பங்கள் பலகோடி

சொல்வதற்கு வார்த்தையில்லையம்மா

ஏழேழு ஜென்மங்கள் நான் எடுத்தாலும்

உன் வதனமதை மறவேன் அம்மா!

என்றென்றும் உன் அன்பு

என் வாழ்வில் நிலைத்திட வேண்டுமம்மா!

மறுஜென்மம் நான் எடுத்தாலும்

உனது மகளாக உதித்திட வேண்டுமம்மா

ஜெ.நிவேதா

தரம் -07 A

# New Building of Primary Section



# New Office Room



# Pronunciation

Sounds of English and International phonetic Alphabet (IPA)

Standard British English operates with 44 distinctive sounds of which 24 are consonant sounds, and 20 vowel sounds. However the traditional English Alphabet has only 26 letter to represent these 44 sounds. This gives rise to most problems in English pronunciation because there is one-to-one correspondence between sounds and letters.

English is an international language. As such it is spoken by people all over the world and the sounds of English are now enriched by the many different accents of these speakers.

## English consonants

Standard British English has 24 consonant sounds.

(P) as in pack : {$p^h$ } aspirated as in pack

{p} un aspirated as in space

(b) as in back

(t) as in tie, try : {$t^h$} aspirated, as in tie, {t} un aspirated as in stand

/d/ as in die, dry

/k/ as in coat: {$K^h$} aspirated as in coat; {K} un aspirated as in scale

/g/ as in goat

/tʃ / as in chain

/f/ as in face

/v/ as in vain

/θ/ as in thank

/ ž" / as in that

/s/ as in sad

/z/ as in zero

/ʃ/ as in shad



/á/ as in measure

/h/ as in hair

/m/ as in mail

/n/ as in nail

/ ž / as in bring

/l/ as in late

/r/ as in red

/j/ as in yard

/w/ as in wage




## Consonants

Consonants are categorized as follows according to the manner of articulation.

plosives /p, b/ / t, d/ /k, g/

Affricates /tƒ , dy"/

Fricatives /f, v / /θ / / s,z / /ƒ ,á/ /h /

Nasals /m/ /n/ / /

Lateral /l /

Frictionless continuant /r/

Semi vowels /j/ /w/

## English vowels

English has 20 vowel sounds. These are of two kinds. 12 pure vowels (Mono pythons) and 8 Diphthongs.

N.B

1. /p/ , /t/ and /k/


When we Sri lanka speak English we usually do not aspirate these consonant sounds. This is not c onsidered an error , but an accepted feature of How SriLankans speak English.

2. /θ/ and / /

these two sounds which are fricatives are rarely used by proficient SriLankan speakers. It is perfectly acceptable to use the sounds that correspond with "W" AND "q" in Sinhala and "g"and "L" in tamil, in their place. These are plosive sounds

*Mrs.J.Vijaayashankar*

# The Cow



The cow is a very gentle animal.

It has four legs and a long tail.

It also has two horns on its head.

It eats grass and fodder.

It gives us milk.

Its milk is healthy for our body.

The milk is used to make butter, cheese,

butter milk, curd and condensed milk.

These are called milk products.

The cow is a useful animal.

So, some people respect and worship it.


M.Vithiya Grade -04^

# Our School

Full of buildings – with
Full of joys
We go and come
Study and play.
Lovely teacher
Strict principal
Blaming prefects – But
Enjoyable friends.
We can't get a place
Like our school
and our classroom
and our friends
We can develop
Our wonderful school
In our future
With care.
St.Theresa can make
A lot of good citizens
To Sri Lanka and
To world.

N.Tharun Grade -04^

# My Class




My class is grade three – B

It is the best class in our school

There are thirty five pupils

Twenty are girls and fifteen are boys.

All my class mates are good in studies.

Our classroom is big.

Our class teacher is Miss.A.Sangeetha.

She is very kind with us.

S.Athithyan

Grade -03B

## கல்லூரி நட்பு

நாட்கள் நகர்ந்தது வருடங்கள்
கடக்கும் நம் வாழ்க்கைப் பாதையில்
என் றென்றும் நிழலாய் தொடரும்.......
நம் நட்பின் பெருமை.
கண் சிமிட்டி ஒரப் பார்வை
பார்க்கும் போது - இந்த
விண்மின் கூட்டம் கதை கதையாய் சொல்லும்
அதன் காலம் முடியும் வரை.
சிறு பிள்ளைச் சண்டையாய்
சில நேரம் சிலிர்த்துக் கொண்டலும்.
அன் பெனும் பாசத்தால்
காத்துக் கொண்டு – நம்
ஒரே பிரசவத்தில் எண்ணற்ற
மலர்களை தந்த - இந்த
கல்லூரித் தாயை
நினைத்தாலே இனிக்கும்
நம் நட்பின் பெருமை
கடலடி வானம் வரை செல்லும்.

த.சிந்துஜா

தவறு என்பது வாழ்க்கையின்
ஒரு பக்கம் - ஆனால்
நட்பு என்பது ஒரு புத்தகம் -
அதனால் ஒரு பக்கத்திற்காக
புத்தகத்தை இழக்காதீர்கள்.

## பாடல்
## பொம்மை

பொம்மை பொம்மை பொம்மை பார்

புதிய புதிய பொம்மை பார்

தலையை ஆட்டும் பொம்மை பார்

கையை வீசும் பொம்மை பார்

கண்ணைச் சிமிட்டும் பொம்மை பார்

தாளம் போடும் பொம்மை பார்

க.யக்ஷிகா



## முதற் கவிதை

*கவிதை எழுத முயற்சித்தேன்*

*பல வார்த்தைகள் கிடைத்ததும் - ஏனோ*

*மனதில் ஒரு தயக்கம்*

*எதைப்பற்றி எழுதுவது*

*நட்பு, கல்வி, இயற்கை என மாறி மாறி*

*மனம் குழம்பிக் கொண்டிருக்க*

*பேனாமையில் ஈரம் சாய்ந்தது – ஆனால்*

*வார்த்தைகள் வரவில்லை*

*சில நேரம் தளம்பல் இறுதியில்*

*என்கைகள் எதையோ எழுதத்தொடங்கியது*

*பின்னர் பார்த்தேன் கைகளில் ஈரம்*

*அந்த வார்த்தை அம்மா!*


த.டிலக்ஷா

O/L 2012




# நட்பு பிரியும் தருணம்

காலையில் பூத்து மாலையில்
மடியும் பூக்களுக்குக் கூட
ஒரு நாள் தான் மரணம்......
ஆனால் ஒன்றாய் பேசி
ஒன்றாய் பழகி
ஒன்றாய் கூடி மகிழ்ந்த நட்பு
பிரிகின்ற தருணம்
வருகின்ற போது
பிரிவுக்கு விடை சொல்ல முடியாமல்
கண்ணீருடன் பிரிகின்ற கணங்கள்
ஒவ்வொன்றும்
மரணம் தான்...................




யதுசா

தரம்- 02B



நாம் ஒருவருக்கொருவர் ஒரு ரூபாய் கொடுத்தால் இருவரிடமும் ஒவ்வொரு ரூபாய்தான் இருக்கும். ஆனால் ஒருவருக்கொருவர் நாம் நல்ல எண்ணத்தைப் பகிர்ந்துகொண்டால் இருவரிடமும் இரு நல்ல எண்ணங்கள் இருக்கும்

-ஆபிரகாம் லிங்கன்-

# பாதுகாவலர் புனிதர்கள்

கத்தோலிக்க திருச்சபையில் தூய்மையான வாழ்வும் தியாக உள்ளமும் அர்ப்பணிப்பும் தன்னகத்தே கொண்டு கற்பு நெறியுடன் வாழ்ந்து சோதனைகளிலும் துன்பங்களிலும் தளராத இறைநம்பிக்கையுடன் திகழ்ந்தவர்களை திருச்சபை புனிதர்களாக உயர்த்துகிறது.

புனித யூவ்ஸ் (St.Yves)



இவர் சட்ட நிபுணர்களுக்கான பாதுகாவலர். இவரது நினைவு மற்றும் திருவிழா நாள் மே மாதம் 19ம் திகதி இவர் இயேசுவுக்காக வாழ்ந்து கி.பி 1303ம் ஆண்டு மறைந்தார்.

புனித விதுஸ் (St.Vtus)



இவர் நடனக் கலைஞர்களுக்கான பாதுகாவலர். இவரது நினைவு மற்றும் திருவிழா நாள் யூன் மாதம் 15ம் திகதி இவர் இயேசுவுக்காக வாழ்ந்து கி.பி 303ம் ஆண்டு கொதிக்கும் எண்ணெயில் வேகவைக்கப்பட்டு வேதசாட்சியாக கொல்லப்பட்டார்.

புனித ரோச் ( St. Roch)



இவர் வீட்டு வளர்ப்பு பிராணிகளுக்கான பாதுகாவலர். குறிப்பாக நாய்களுக்கான பாதுகாவலர். இவரது நினைவு மற்றும் திருவிழா நாள் ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி இவர் இயேசுவுக்காக வாழ்ந்து இறை வாழ்வையேற்று சிறையிலேயே கி.பி 1327ம் ஆண்டு மறைந்தார்.

புனித ஆசிர்வாதப்பர் (St. Benedict)



இவர் சிறுநீரகங்களுக்கான மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான பாதுகாவலர் இவரது நினைவு மற்றும் திருவிழா மார்ச் 21ம் திகதி இவர் கி.பி 543ம் ஆண்டு மறைந்தார்.

புனித சின்னப்பர் (St. Paul)




இவர் புற இனர்த்தவரான அப்போஸ்தலர். எழுத்தாளர்களுக்கான பாதுகாவலர். இவரது நினைவுத்திருவிழா ஆனி மாதம் 29ம் திகதி. கி.பி 64ம் ஆண்டு தலை வெட்டிக் கொலைசெய்யப்பட்டார்.

புனித பங்ராஸ் ( St. Pancras)



இவர் குழந்தைகளுக்கான பாதுகாவலர். இவரது நினைவுத் திருநாள் மே 12. இவர் கி.பி 304ம் ஆண்டு தலை வெட்டிக் கொல்லப்பட்டார்.

புனித பத்திரீசியார் (St. Patrick)




இவர் அயர்லாந்து நாட்டிற்கான பாதுகாவலர். மற்றும் கட்டிடக்கலை நிபுணர்களுக்கும் பாதுகாவலர். இவரது நினைவுத் திருவிழா மார்ச் மாதம் 17ம் திகதி இவர் கி.பி 464ம் ஆண்டு மறைந்தார்.

பி.மொறின்

ஆரம்பப் பிரிவு ஆசிரியர்

# பாடசாலையில் இசைக்கல்வியின் முக்கியத்துவம்

செல்வத்திற் செல்வமாக விளங்குவது இசை என்கிறது உலகப் பொது மறை இவ்வாறு பல்வேறு இலக்கியங்கள் இசையினுடைய மகத்துவங்களைப் பலவாறாகச் சிறப்பித்துக் கூறியிருப்பதை நம்மால் அறிய முடிகின்றது. இசைக் கலையின் பயன்களை நோக்குவோமாயின் இக்கலையைக் கற்பதன் மூலம் நல்ல மனப்பாங்கு விருத்தி பெற்ற ஒரு சமூகத்தை உருவாக்க வாய்ப்பு ஏற்படுகிறது. குறிப்பிட்ட ஒரு சமூகமானது அப்பிரதேசத்தின் பாடசாலைகளினாலேயே கட்டியெழுப்பப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் இசையினைக் கற்பதனால் மாணவர்கள் மத்தியில் உடல் உள ரீதியான விருத்திகள் ஏற்படுகின்றதென்பதனை ஆராய்ந்தறிந்த பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களின் அயராத முயற்சியினால் பாடசாலைக் கல்வித் திட்டத்தில் 1972ஆம் ஆண்டு இசைக் கல்வியும் சேர்க்கப்பட்டது.

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருப்பதோ இயந்திரமயமான அவரச வாழ்க்கை இதனூடே ஆன்ம திருப்தி என்பது எங்கே கிடைக்கிறது.? இதைப்போன்றே இன்றைய பாடசாலைக் கல்வித்திட்டமும் மாணவர்கள் மனதில் தாங்கமுடியாத சுமையாக இருப்பதும் நாம் அறிந்த விடயம். இச் சுமையான மனப்பாங்கினை நீக்கி புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதில் இசை பெரிதும் பயன்படுகின்றது. இதனால் முன்னிலும் பார்க்கத் தற்காலக் கல்வித் திட்டத்திற்கு இசையினுடைய பங்களிப்பு மிகவும் அவசியமாகின்றது.

இது தவிர இசையினைக் கற்பதன் மூலம் மாணவர்களுக்கு கிரகித்தற் பயிற்சியும் மனனம் செய்யும் தன்மையும் ஏற்படுகின்றது. இன்று சிறந்த உடற்பயிற்சியாகவும் இசை அமைகிறது. முள்ளந்தண்டினை நிமிர்த்தி நிலத்தில் நேராக அமர்ந்து பாடல்கள் பாடும் போது ஒரு ஒழுங்கான சுவாசப் பயிற்சி ஏற்படுகின்றது. நீண்ட நேரம் மூச்சினை அடக்கி பின் விடுவித்தலாகிய பிரணாயாமம் எனப்படுகின்ற சுவாசப் பயிற்சி பாடும் போது இயல்பாக நடைபெறுகின்றது இதன் காரணமாகச் சுவாச நோய்களில் இருந்து விடுபடக் கூடிய சந்தர்ப்பத்தினையும் இசை வழங்குகின்றது.

மேலும் பல வரலாற்றுக் கதைகளையும், அவற்றினூடே புகுத்தப்பட்டிருக்கும் தத்துவக் கருத்துக்களையும் இசை மூலமாகப் புகுத்தும் போது மாணவர்கள் மனதில் இலகுவாகப் பதிய வைக்கப்படுகின்றது. உதாரணமாகத் தமிழ் பாடநூல்களில் இடம் பெறும் செய்யுட் பகுதியை இசை ஆசிரியரின் உதவியைக் கொண்டே கற்பிக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிபந்தனை தமிழ்பாடத் திட்டத்தில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் கற்பிக்கப்படும் போது இலகுவாக மாணவர்கள் மனதில் பதியப்படுகின்றது. அதேவேளை மாணவர்கள் சிறந்த இரசிகர்களாகவும் விமர்சகர்களாகவும் உருவாகும் வாய்ப்பு ஏற்படுகின்றது. பல இதிகாச புராணக் கதைகள் இசைநாடக வடிவில் இயற்றப்பட்டுள்ளன. உதாரணமாக அருணாச்சலக் கவியரசின் இராம நாடகம் கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த வகையில் சில விடயங்களை மாணவர்கள் சூத்திரங்களாக அமைத்து அச்சூத்திரங்களை ஓசையுடனும் சந்தத்துடனும் பாடி மனனம் செய்யும் தன்மையினை நாம் காண முடிகின்றது.

கலைக்கல்வியினைக் கற்கும் மாணவர்களிடையே சிறந்த பண்புகள் மிகையாகக் காணப்படுகின்றன. இரக்கமுள்ளவர்களாக, அடக்கமுள்ளவர்களாக, மனிதாபிமானமுள்ளவர்களாக மனிதர்களை ஆக்கும் தன்மை இசைக்கலைக்கே உள்ள சிறப்பாகும்.

குருபக்தி என்றும் பண்பானது கலையினைப் பயிலும் மாணவர்களுக்கேயுரிய தனித்துவமான பண்பாகும். ஏனைய ஆசிரியர்களைப் பார்க்கிலும் இசை ஆசிரியரிடம் மாணவர்கள் அன்பாகவுமம் பக்தியுள்ளவர்கனாகவும் நடந்து கொள்கின்றமையினை வெளிப்படையாக நம்மால் உணர முடிகின்றது.

கலாசார அம்சங்களைப் பேணும் ஒரு சிறந்த சாதனமாக இருப்பதும் இசைக்கலையின் மற்றுமொரு பண்பாகும். ஒரு சமூகத்தில் எந்த ஒரு கலாசார நிகழ்வாயினும் அல்லது ஒரு மதவழிபாடாயினும் இசையுடனேயே ஆரம்பித்து இசையுடனேயே நிறைவு செய்யப்படுகின்றது. ஏன் பாடசாலைகளும் காலை ஆராதனையுடனும் பாடசாலைக் கீதத்துடனும் ஆரம்பித்து வாழ்த்துப் பாடலுடனே தான் மூடப்படுகின்றது. எனவே சமூகத்திலிருந்து பிரிக்கமுடியாத ஒன்றாகவும் இசைக்கலை விளங்குவதில் பாடசாலைகளில் இசை கற்பிக்கப்படுதல் வரவேற்கத்தக்காவே உள்ளது.

இசையினைக் கற்பதன் மூலம் இனிமையான கம்பீரமான வளமான சாரீரத்தைப் பெறுவதோடு ஸ்வரங்களைத் துரித காலத்தில் உச்சரித்துப் பயிற்சி பெறுவதனால் தெளிவான உச்சரிப்புடன் கவரும்படியாகப் பேசும் தன்மையினையும் பெறுகின்றார்கள். எனவே பாடசாலையில் இசைக்கல்வி கற்பிக்கப்படுவதால் சிறுவயதிலேயே இசைப்பயிற்சியைப் பெற்று பிசிறில்லாத தெளிவான சாரீரம் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது.

மேலும் பல பாடல்களைக் கற்று அவற்றின் இலக்கான இலக்கிய நயம் உணர்ந்து ரசம் உணர்ந்து பாடும் போது பாடுபவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் மனநிறைவினை ஏற்படுத்துவதோடு அவ்வாறான பாடல்களை எழுதுவதற்குரிய கற்பனா சக்தியும் உண்டாகிறது மட்டுமன்றி மனிதனாக வாழவும் இசை வழிகாட்டியாக அமைகிறது.

தற்பொழுது பாடசாலை மட்டத்திலிருந்து தேசியமட்டம் வரையிலான இசைப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. கலைவிழாக்கள் சாகித்திய விழாக்கள் இலக்கிய விழாக்கள் என்று அனேகமான நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் பங்கேற்கிறார்கள். இதன் மூலம் அவர்களுடைய ஆளுமைப் பண்பு விருத்தியடைந்திருக்கின்றதென்றால் மறுப்பதற்கில்லை

இதுவரை மேலே ஆராயப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நோக்கும் போது மனித வாழ்க்கையில் பல்வேறு அம்சங்களுடன் இசை சேர்ந்திருந்து அவனை நல்வழிப்படுத்தி நிறைவான மனிதனாக வாழ வைக்கப் பெரிதும் பயன்படுகின்றது என்பது வெளிப்படை உண்மையாகும். எனவே பாடசாலைக் கல்வித் திட்டத்தில் இசைக்கல்வி புகுத்தப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயம் என்றால் அது மிகையில்லை.

இசை ஆசிரியர்

திருமதி.ச.தயாபரன்



# கல்வி

பெற்றெடு பிள்ளை தனை
பெற்றிடு கல்வி தனை
மதித்திடு ஆசானை
வளர்த்திடு அறிவினை

விஞ்ஞானம் தந்தது விந்தைகள்
மெஞ்ஞானம் தந்தது மனிதர்கள்
விதியால் வென்றிடலாம் மதியை
கல்வியால் வென்றிடலாம் வாழ்வை

கல்வி என்ற பம்பரத்தை
சட்டென்று சுழற்றிடவே மனிதன்
கணினி எனும் கருவிதனை
கணப்பொழுதில் இயக்கினான்

கள்ளம் கபடம் அகன்றிடும்
கள்ளமில்லாக் கல்வி வளர்ந்திடும்
சோம்பலை நீக்கிடும் - நித்தம்
சுறுசுறுப்பாக்கிடும்

சிறுவர் முதல் பெரியவர் வரை
சிரித்து வாழ வழி வகுக்கும்
பாரம் பரிய ஞானத்தை கொண்டது
பத்தியமானதோர் கல்வித்துறை

K.வதுர்ஜனா - தரம் 09 A

# நீர் வளம்

நீர் வளம் எமது நல் வளமாம்
நிறைந்த நல்வாழ்வு தந்திடுமாம்
நெற்பயிர் விளைய உதவிடுமாம்
நெஞ்சினில் களிப்பைத் தந்திடுமாம்
ஆற்றினில் குப்பை போடுவதானல்
அதனில் மாசு சேர்கிறதே!
ஆசையாம் நீரைப் பேணி நின்றால்
அவலம் முழுதும் மறைந்திடுமே!
கைத்தொழில் கழிவுகள் சேர்வதனால்
கேடுகள் நீரில் கலக்கிறதே
கழிவுகள் சேர்வதைத் தடுத்து விட்டால்
கடலுயிர் இனிதாய் வாழ்ந்திடுமே
களை கொல்லி நீரில் சேர்வதனால்
கெடுதிகள் யாவும் தோன்றிடுதே
கவனமாய் நாசினி பாவித்தால்
கேடுகள் எதுவும் தோன்றாதே

ஜெ.கஜானி
தரம் -02 A



# பிள்ளையை அறிவோம்

பிள்ளைகள் பாடசாலைக்குப் பல்வேறுபட்ட சூழல்களிலிருந்து வருகின்றார்கள். அவர்கள் வெவ்வேறு இயல்புகளையும், ஆற்றல்களையும் கொண்டுள்ளனர். ஒவ்வொரு தனித்தன்மை வாய்ந்தவர்கள். அவர்களை வழிநடத்திச் செல்லும் பொறுப்பு ஆசிரியர்களுடையது. எனவே பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பற்றித் தனித்தனியாக இனங்காணலும் வழிகாட்டலும் அவசியமாகும்.

ஒவ்வொரு பிள்ளையினதும் அபிவிருத்தியை மட்டுமல்ல உடல் விருத்தி, உள விருத்தி, மனப்பாங்கு விருத்தி, சமூக விருத்தி போன்றவற்றையும் மேம்படுத்தல் ஆசிரியர்களின் பிரதான பொறுப்பாகும். எனவே பிள்ளைகளது இயல்பான ஆற்றல்களை அறிந்து அவற்றை ஆக்கபூர்வமாக வெளிக்கொணரத்தக்கவாறு கற்றற் செயற்பாடுகளை நெறிப்படுத்த வேண்டியதும் அவர்களது பல்வேறு நடத்தைக் கோலங்களை சீர்படச் செய்ய வேண்டியதும் ஆசிரியர்களது பணியே ஆகும்.

இக் கருமங்களுக்காக ஒவ்வொரு பிள்ளையினது இயல்புகளையும் தனி ஆற்றல்களையும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

இதனால் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் பிள்ளைகளைப் பற்றி பின்வரும் விடயங்களை அறிந்திருத்தல் வேண்டும்.

1. **பிள்ளைகளின் பொதுவான இயல்புகளை அறிதல்**
2. **பிள்ளைகளிடம் காணப்படும் சிறப்பான ஆற்றல்களை இனங்காணுதல்**
3. **பிள்ளைகள் வதியும் வெவ்வேறுபட்ட சூழல்களையும் குடும்ப பின்னணிகளையும் விளங்கிக் கொள்ளல்.**
4. **பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றார்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.**

பிள்ளை பாடசாலைக்கு தரம் ஒன்றில் கற்க வரும் போது அவர்களுக்கு "பிள்ளையை அறிவோம் செயற்பாடு" செய்யப்படுகின்றது.

இச் செயற்பாட்டை செய்யும் பொழுது மனதில் கொள்ள வேண்டிய விடயங்கள் பிள்ளைகளிடம் பல ஆற்றல்கள் உண்டு. அவை பிள்ளைகளுக்குப் பிள்ளைகள் வேறுபடுகின்றன. குடும்பப் பின்னணி, வீட்டுச் சூழல், சமூகச் சூழல் என்பன இவற்றை தீர்மானிக்கும் என்பதை அறிதல் வேண்டும்.

பிள்ளைகளின் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவற்றை விருத்தி செய்வதே ஆசிரியர் பணியாகும்.

திருமதி.சி.தங்கராசா

ஆரம்பக்கல்வி

- எங்கே விழுந்தாயெனப் பார்க்காதே எங்கே வழுக்கினாயெனப் பார் -

# Head Girls Of St.Theresa's Girls' College From Year 2008



T.Gowsika
(2008)



H.Mary Nireka
(2009)



A.Anat Roisy
(2010)



H.Joisilin Nivetha
(2011)



R.Logitha
(2012)

# Asst.Head Girls Of St.Theresa's Girls' College From Year 2008



T.Serin Kalista
(2008)



N.Thakshany
(2011)



M.Mary Dayana
(2012)

# நோய் எதிர்ப்பு சக்தி (நீர்ப் பீடனம்)

## (Immunity)

எம்மைச் சூழவுள்ள வளி, நீர் உண்ணும் உணவு, காயங்கள் என்பவற்றினூடாக நோயை விளைவிக்கும் நுண்ணங்கிகளான பற்றீரியா, வைரசுக்கள், நுண்கிருமிகள் போன்றவை எமது உடலுக்குள் நுழைவதற்கு எப்போதும் தயாராகவே உள்ளன. ஆனால் இவை அனைத்தையும் நம் உடலுக்குள் புகவிடாமல் தடுக்கும் அற்புதமான சக்தி ஒன்று நம் உடலுக்கு உண்டு. அதனையே நோய் எதிர்ப்பு சக்தி (நீர்ப்பீடனம்) என்கின்றோம்.

எமது உடலுக்கு மூவகையான எதிர்ப்பு சக்திகள் கிடைக்கின்றன. அவையாவன

1. இயற்கையான எதிர்ப்பு சக்திகள்(Innate immunity)
2. தகவமைக்கப்படும் எதிர்ப்பு சக்தி (Adaptive immunity)
3. உடன்பாட்டு எதிர்ப்பு சக்தி (Passive immunity)

- **இயற்கையான எதிர்ப்புச் சக்தி** (Innate immunity)

பிறக்கும் போதே ஒருவரது உடலில் பாதுகாப்புக் கவசங்களாக அமைந்துள்ளன. அவையாவன உடலுக்கு பாதுகாப்பாக உள்ள தோல், அகத்தே உள்ள மூக்கு, தொண்டை, மற்றும் உணவுப்பாதை போன்ற பகுதிகளில் உள்ள சவ்வுகளும் தடுப்புக் கவசங்களாக நம்மை நோய் கிருமிகளிடமிருந்து காப்பாற்றுகின்றன.

மேலும் உடலுக்குள் புகும் நோய்த் தொற்றுக் கிருமிகளைத் தாக்கி அழிக்கக் கூடிய வெண்குழியங்களான நடுநிலைநாடி (Neutrophil), மூல நாடி, (Basophil), அமிலநாடி (Eosinophil) என்பன படைவீரனைப் போலச் செயற்படுகின்றன.

- **தகவமைக்கப்படும் எதிர்ப்புச் சக்தி** (Adaptive immunity)

உடல் தன்னை நோய்க்கிருமிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக தாக்கும் நோய்களுக்குக் காரணமான ஒவ்வொரு பற்றீரியாக்களுக்கும் ஏற்றவாறு வேறுபட்ட பிறபொருளெதிரிகளை உருவாக்கி நோய் எதிர்ப்புத் தன்மையை ஏற்படுத்துகின்றன. இதற்கு குருதியிலுள்ள நிணநீர்க்குழியம் (Lymphocytes) என்கின்ற வெண்குழியம் உதவுகின்றது.

- உடன்பாட்டு எதிர்ப்புச் சக்தி ((Passive immunity)

தேவைப்படும் சந்தர்ப்பத்தில் இன்னொரு இடத்திலிருந்து நோய் எதிர்ப்புச் சக்தியைத் தற்காலிகமாகப் பெற்றுக்கொள்ளுதலாகும். குழந்தைகள் தாய்ப்பாலில் இருந்து பெற்றுக்கொள்ளுகின்றன. ஒரு குறித்த நோய் தொற்றும் ஆபத்துள்ள ஒருவர் அந்நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவது தடுப்பு மருந்துகளில் உள்ள

1. செயலற்ற நோய்க்காரணி
2. நோய்தாக்கப்பட்ட உயிருள்ள நோய்க்காரணி

3. இரசாயனரீதியில் செயலிழக்கப்பட்ட நோயாக்கியின் நச்சுப் பதார்த்தம்

4. பரம்பரை அலகுப் பொறியியலைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட நோய்க்காரணியின் கலங்கள் அல்லது பகுதிகள் என்பன உடலெதிரியாக்கிகள் (Antigen) பயன்படுத்தப்படுகின்றன.

எமது உடலில் நோய் எதிர்ப்புசக்தி குறையும் போது நோய்க் கிருமிகள் எளிதில் தொற்றிக் கொள்கின்றன. நோயில்லாப் பெருவாழ்வுக்கு எமது உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியை வலுவாக்க வேண்டும் அதற்கு சரியான நேரத்தில் சமச்சீர் உணவு (Balance Diet) உட்கொள்வதோடு நல்ல வாழ்வியல் பழக்கங்களோடு (Healthy lifestyle) வாழ்வதே சிறப்பாகும்.

கு.இந்திராணி விஞ்ஞான ஆசிரியர்

# ஓசோன் படை

பூமியில் வயது தற்போது 4500 பில்லியன் வருடங்களாகும். ஆயினும் பூமியில் உயிரினங்கள் தோன்றி தற்போது 800 மில்லியன் வருடங்களாகும். இதற்கு காரணம் பூமியினை சூரியனில் இருந்து வந்த கதிர்கள் தாக்கியமையே ஆகும். முன்பு பாரிய மழை ஒன்று பெய்ததனால் பூமியானது நீர் நிரம்பிய பாரிய சமுத்திரமாகவே காணப்பட்டது.

உலகிலே முதல் தோன்றிய அங்கி சயனோ பக்றீறியா எனப்படும் இரசாயன தொகுப்பு பக்றீறியா ஆகும். இவை தாமாகவே ஒளித்தொகுப்பு செய்யக்கூடியவை. இதனால் இவை வெளிவிடும் ஒட்சிசன் வாயுத்துணிக்கைகள் மூலமாகவே ஓசோன் படை உருவானது. இவ் ஓசோன் படை மூன்று ஒட்சிசன் அணுக்களை கொண்டு காணப்படுகின்றன.

ஓசோன் படையானது படைமண்டலத்தில் காணப்படுகின்றது. இது சூரியனில் இருந்து வரும் கழியூதாக்கதிர்களை பூமிக்கு வரவிடாது தடுக்கின்றது. ஆயினும் இவ் ஓசோன் படையானது தற்போது அழிவடைந்து வருகின்றது. முதன் முதலில் ஓசோன்படையில் துவாரம் இருப்பது அந்தாட்டிக்கா பகுதியிலே என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். அத்துவாரம் கிட்டத்தட்ட அமெரிக்காவின் நிலப்பரப்பிற்கு சமனாகும்.

ஓசோன் படையில் துவாரம் ஏற்படக் காரணம் நச்சு வாயுக்களான குளோரோபுரோகாபன், மெதையில்புரோமைட், ஐதரோபுளோரோகாபன் போன்ற வாயுக்கள் அடைக்கப்பட்ட பொருட்களை பாவிப்பதாகும். நாம் இப்பொருட்களை தொடர்ந்து பாவிப்பதாயின் ஓசோன் படையின் துவாரம் பெரிதாகி சூரியனின் நச்சுக்கதிர்கள் நம்மை தாக்கி நாம் பல நோய்களை எதிர்நோக்க வேண்டிவரும். அந்நோய்களாவன கண்புற்றுநோய், தோல்புற்றநோய், மூளைப்புற்றுநோய் போன்றவற்றை குறிப்பிடலாம்.

எனவே மாணவர்களாகிய நாம் எதிர்கால சந்ததியினரை பாதுகாக்க வேண்டுமாயின் இயன்றளவு இவ் நச்சு வாயுக்களின் பயன்பாட்டைக் குறைத்து ஓசோன் படையின் அரிப்பை குறைத்து வளமாக வாழுவோம்.

குயின்சா சிவகுமார்

தரம்- $10^B$

# பிழையின்றி எழுதிடச் சில விதிகளும் விளக்கங்களும்

தமிழ்மொழியானது இன்று தனது கட்டமைப்புச் சிதைந்து போவதற்கு மாணவர்கள் மத்தியில் காணப்படும் மொழிபற்றிய தெளிவின்மையும் ஒரு காரணியாக அமைந்திருக்கிறது . அவர்கள் இலக்கணத் தமிழை நன்கு அறிந்து கொள்ளவும் மொழிப் பயிற்சி பெறவும் சில அடிப்படை விதிகள் அறிதல் நலம்.

வல்லின மெய்கள் அல்லது ஒற்றெழுத்துக்கள் மிகுமிடங்கள், மிகா இடங்களை அறிந்து கொள்வதால் பிழையின்றித் தமிழை எழுதிட இயலும்.

எளிமையான சில இலக்கண விதிகளை விளக்கிக் கூறுதால் அவர்கட்கு மொழிப் பயிற்சி இலகுவாகலாம்.

கல்விகேள்வியா? கல்வித் கேள்வியா?

பத்து பதினைந்தா? பத்துப் பதினைந்தா?

பாடா பெண்ணா? பாடாப் பெண்ணா?

எழுத தெரியுமா? எழுதத் தெரியுமா?

இவை போல்வன குழப்பம் தரும் சில சான்றுகள். இவற்றில் அடிகோடிட்ட எழுத்துக்கள் ஒற்று/ புள்ளி எழுத்துக்கள். இவை தொடரில் மிகுந்து வருதலே 'ஒற்று மிகுதல்' அல்லது 'வல்லினம் மிகுதல்' ஆகும்.

வேலை செய்தான்

வேலைச் செய்தான்

'வேலை செய்தான்' என்பதில் ஒற்று மிகவில்லை. இது பணியைச் செய்தான் என்ற பொருள்பட அமைந்தது. 'வேலைச் செய்தான்' என்பதில் ஒற்று (ச்) மிகுந்தது. 'வேல்' எனும் கருவியைச் (வேல் + ஐ) செய்தான் என்ற பொருள் பெற்றது.

இவ்விரு தொடர்களும் ஒற்று மிகுந்தலாகும். ஒற்று மிகமாலும் இரு வேறு பொருள்பட்டன.

இரு சொற்கள் இணையுமிடத்தில் 'ஒற்று மிகுதல்' உண்டாகும் சொற்கள் இணைவதைப் 'புணர்ச்சி' என்பர்.

## புணர்ச்சி என்பதன் விளக்கம்

மெய், உயிர் ஆகியவற்றை முதலும் இறுதியுமாகக் கொண்ட பகாப்பதம் (பிரிக்க முடியாத சொல்) பகுபதம் (பிரிக்கக் கூடிய சொல்) ஆகிய இரு பதங்களும் தன்னொடுதானும் பிறிதொடு பிறிதுமாய் அல்வழிப் பொருள் அல்லது வேற்றுமைப் பொருளினால் பொருந்துமிடத்து நிலைமொழியும் வருமொழியும் இயல்பாகவோ, விகாரமாகவோ புணருவது 'புணர்ச்சி' எனப்படும் (நன்னூல் சூத்)

பூ +கூட்டம் = பூக்கூட்டம்

'பூ' என்பது - நிலைமொழி (நின்ற சொல்)

'கூட்டம்' என்பது - வருமொழி (வருகின்ற சொல்)

'க்' என்ற ஒற்று / மெய்/ புள்ளியெழுத்து இவ்விரண்டின் இடையே மிக்கு நின்றது.

வல்லினம் - க் ச் ட் த் ப் ற், மெல்லினம் - ங் ஞ் ண் ந் ம் ன், இடையினம் - ய் ர் ல் வ் ழ் ள் (18 மெய்கள்) என 3 வகையாக மெய்யெழுத்துக்களமையும் வல்லின மெய்களுடன் ட், ற் நீங்கிய பிற நான்கும் (க், ச், த், ப்) 12 உயிரெழுத்துக்களுடன் சேருகின்றன. உயிர் மெய்யாக மாறிச் சொல்லின் முதலில் வருகின்றன. (ட், ற் என்பன மொழி முதலில் வாரா) வருமொழியில் க், ச் ,த், ப் வரும்பொழுது எந்த மெய் வருகிறதோ அந்த மெய்க்கு ஏற்ற மெய்யெழுத்து புணர்ச்சியில் மிகுதலை ''வல்லினம் மிகுதல்' என்பர்.

1.1 புணர்ச்சியின் மாற்றங்கள்

இரு சொற்கள் (நிலை மொழி +வருமொழி) சேருமிடத்துப் புணர்ச்சி மாற்றங்கள் நிகழும் அவ்விடத்து சொற்கள் இயல்பாகப் புணருதலை "இயல்புப் புணர்ச்சி" என்றும் விகாரமாக/ மாற்றங்களுடன் புணருதலை "விகாரப் புணர்ச்சி" என்றும் இரு வகைப்படுத்துவர்.

1.1.1 இயல்புப் புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இல்லாது சேருவது இயல்புப் புணர்ச்சி

உ-ம் வாழை +மரம் = வாழைமரம்

ஆண் + அழகன் = ஆணழகன்

1.1.2 விகாரப் புணர்ச்சி

புணர்ச்சியில் ஓர் (1) எழுத்தோ, சாரியையோ புதிதாகத் தோன்றுதல் (2) வேறுபடுதல் (3) கெடுதல் - என்ற மூன்று நிலைகளில் மாற்றம் பெறலாம். அம்மாற்றம், நிலைமொழி, வருமொழிகளின் முதல், இடை, கடை எனும் மூன்று இடங்களிலும் நிகழலாம். இத்தகைய புணர்ச்சியை 'விகாரப் புணர்ச்சி' என்பர்.

அ. தோன்றல் விகாரம்

நிலைமொழி, வருமொழிகட்கிடையே புதிதாக ஓர் எழுத்து தோன்றுவது 'தோன்றல் விகாரம்' ஆகும்.

உ-ம் வாழை +பழம் =வாழைப்பழம்

("ப்" - புதிதாகத் தோன்றியது)

ஆ. திரிதல் விகாரம்

இரு மொழிகளிலும் உள்ள எழுத்துக்கள் மாறி வருவது "திரிதல் விகாரம்"

உ-ம் மண் + குடம் = மட்குடம்

'ண்', 'ட்' ஆகத் திரிந்தது.

இ. கெடுதல் விகாரம்

இரு மொழிகளுக்கிடையேயான எழுத்துக் கெட்டுப் பின் சேருவது

உ-ம் மரம் + வேர் = மரவேர்

'ம்' கெட்டது பின் சேர்ந்தது.

மேற்சுட்டிய புணர்ச்சி மாற்றங்களில் ஒன்றான தோன்றல் விகாரம் என்பதனை ஒட்டியே நாம் காண இருக்கும் "வல்லினம் மிகுதல்" அல்லது "ஒற்று மிகுதல்" அமைகிறது.

வல்லினம் மிகுதலின் விதிகள்

1. "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்

கசபத மிகும்வித வாதன மன்னே" (நன்.சூத் 165)

என்பது இலக்கணவிதி அதாவது நிலைமொழியில் உயிர் எழுத்துக்கள் இறுதியாக நிற்க வருமொழி முதலில் கசதப வரின் அவ்விடத்து வந்த வல்லின மெய்கள் மிகுந்து வரும் சிறுபான்மை மிகாமலும் வரும் என்பது பொதுவிதி.

உ- ம் ஆடூஉ + குறியன் = ஆடூஉக் குறியன்

நிலைமொழி ஆடூஉ (ஆண்மகன்)

'உ' கரம் என்பது இதன் இறுதி எழுத்து அதாவது உயிரீறு

வருமொழி குறியன் (சிறியவன்)

(க்+ உ = கு)

வருமொழி "க்" என்ற மெய்யே இரு சொற்களின் இடையில் மிகுந்து வந்த வல்லின மெய்யாகும். எனவே "ஆடூஉக்குறியன்" என்றானது இதனை அல்வழிப்புணர்ச்சியில் அடக்குவர்.

உ-ம் செட்டி + தெரு = செட்டித்தெரு

(ட் + இ) (த் + எ)

நிலைமொழியில் "இ" என்ற உயிரீறு நிற்க, வருமொழியில் "த்" என்ற மெய்முதல் சேருமிடத்து "த்" என்ற மெய், இடைமிகுந்தது. 'செட்டித்தெரு' என்றானது இதனை வேற்றுமைப் புணர்ச்சி என்பர்.

இவ்வல்லின மெய்கள் உயிரீற்றின் முன் இவ்வாறு புணரும் இனி, வேற்றுமைப் புணர்ச்சி அல் வழிப்புணர்ச்சி என்பதன் விளக்கம் காணலாம்.

கரம், காரம் - என்பன சரியைகள்

கரம் குறில் எழுத்தையும் ("எ" கரம்), ("உ" கரம்)

காரம் நெடில் எழுத்தையும் ("ஏ" காரம்), ("ஐ" காரம்) சுட்டுவன.

1.1 புணர்ச்சி வகைகள்

வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இருவகையாகப் புணர்ச்சியைக் குறிப்பர்.

உ -ம் "கடவுட் கருணை" வேற்றுமைப் புணர்ச்சி

'கடவுள் கருணை செய்தார' . அல்வழிப் புணர்ச்சி

இவை எவ்விதம் வேறுபட்டன?

"ஐ" முதல் "கண்" வரை உள்ள வேற்றுமை உருபுகள் மறைந்தோ அல்லது வெளிப்பட்டோ வருமாறு சொற்கள் புணருதல் "வேற்றுமைப் புணர்ச்சி"

வேற்றுமை அல்லாத வழியில் சொற்கள் புணருதல் "அல்வழிப் புணர்ச்சி"

1.2 தொகையும் விரியும்

வேற்றுமை உருபுகள் மறைந்து வந்தால் "வேற்றுமைத் தொகை" என்றும் மறையாமல் வெளிப்படையாக வந்தால் "வேற்றுமை விரி" என்றும் கூறுவர்.

வேற்றுமைத் தொகை

வேற்றுமை விரி

நிலங்கடந்தான் ("ஐ" மறைந்தது)

"நிலத்தைக் கடந்தான்"

("ஐ" வெளிப்படை / விரிந்தது)

கல்லெறிந்தான் ("ஆல்" மறைந்தது)

"கல்லால் எறிந்தான்"

("ஆல்" வெளிப்பட்டது / விரிந்தது)

தசரதன் மகன் ("கு" மறைந்தது)

"தசரதனுக்கு மகன்"

("கு" வெளிப்படை)

மலை வீழருவி ( " இன்" மறைந்தது)

மலையின் வீழருவி

(" இன்" வெளிப்படை)

சாந்தன் கை (" அது" மறைந்தது)

சாந்தனது கை

("அது" வெளிப்படை)

குறைக்குகை ("கண்" மறைந்தது)

குன்றத்தின் கண் குகை

(" கண்" வெளிப்படை)

1..3 வேற்றுமையாவது யாது?

பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாம் அல்லது எழுவாயின் இலக்கணத் தொழிற்பாட்டில் ஏற்படும் மாற்றமே வேற்றுமை எனலாம்.

உ -ம் " பாரதி கொடுத்தான்" - எம்மாற்றமும் இல்லாத எழுவாய்த்தொடர்

" அமுதனுக்குக் கொடுத்தான்" மாற்றமுள்ள தொடர் பொருள் மாற்றம் தரும் எழுத்தான " கு" என்பது வேற்றுமை உருபாகும் எனவே மாணவர்கள் இத்தகைய புணர்ச்சி விதிகளை நன்கு அறிந்து பயன்பெற முயல்வார்களாக.

கு.துஸ்யந்தன்

தமிழ்மொழி ஆசிரியர்

# 2011 - Non - Formal - Unit



# 2012 - Non - Formal - Unit






# தெரிந்து கொள்ளுங்கள்

1941 - ரஷ்யா மீது ஜேர்மனி படையெடுப்பு

1942 - சிங்கப்பூரை ஜப்பான் கைப்பற்றியது

1945 - உலகப்போர் முடிந்தது, முசோலின் கொலை

1946 - ஐ.நா. சபை தொடக்கம்

1948 - மகாத்மாகாந்தி சுட்டுக்கொலை

1951 - சேர்ச்சில் மீண்டும் இங்கிலாந்து பிரதமர்

1953 - ஜான் கென்னடி ஜாக்குலின் திருமணம்

1955 - பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீன் மரணம்

1957 - மலேசியாவுக்கு சுதந்திரம்

1958 - ரஷ்யாவை தொடர்ந்து அமெரிக்காவின் முதல் ரொக்கட் விண்ணில் பறந்தது

1961 - 400 ஆண்டுகளுக்கு பிறகு கோவா மீண்டும் இந்தியாவுடன் இணைப்பு

1963 - ரஷ்யா முதன்முதலாக வாலண்டினா என்ற பெண்ணை விண்வெளிக்கு அனுப்பியது.

1965 - இங்கிலாந்து முன்னாள் பிரதமர் சர்ச்சில் மரணம்

1970 - இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் திறப்பு

1971 - இந்தியா பாகிஸ்தான் போர் 2 வார சண்டையில் இந்தியா வெற்றி வங்கதேசத்து விடுதலை

1979 – அன்னை தெரேசாவுக்கு நோபல் பரிசு

1981 – சாள்ஸ் டயானா திருமணம்

1991 – ராஜீவ் காந்தி படுகொலை


1993 - இன்ரநெற் அறிமுகம்

1999 - ஒரிசா புயலில் 10 ஆயிரம் பேர்பலி

சங்கீதா தியாகராஜா

தரம் $10^B$

"தோல்வி என்பது அடுத்த செயலைச் சரியாகச்செய் என்பதற்கான எச்சரிக்கை"



# மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்.

மாணவர்களிடம் மட்டுமல்ல இன்று பொதுவாகவே அனைவரிடத்திலும் அருகிக்கொண்டு வரும் ஒரு பழக்கம் வாசித்தல் ஆகும். அதற்கு இன்றைய நவீன இலத்திரனியல் சாதனங்களின் பெருக்கத்தினை பிரதான காரணமாகப் பலர் குறிப்பிடுகின்றபோதும் இலத்திரனியல் சாதனங்களின் பெருக்கம் மட்டுமே மனிதரிடத்தில் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து செல்வதற்கான காரணமாகிவிடாது. இயந்திரமயமான வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டுவிட்ட மனிதனுக்கு நிதானமாக இருந்து வாசிப்பதற்கான அடிப்படை மனநிலை இல்லாது போய்விட்டதே இன்றைய இந்நிலைக்கான பிரதான காரணமாகும்.

உண்மையிலே வாசிப்பது என்பதும் தொடர்ந்து அது குறித் விவாதிப்பது என்பதும் மனதுக்கு உவகையூட்டும் ஒரு செயலாகும். மனிதன் ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் கற்கின்ற ஒரு பிராணியாவான். இந்த கற்றல் செயற்பாட்டிற்கு ஆதாரமாக அமைவது மனிதனது வாசிப்புப் பழக்கமே ஆகும். சிந்தனை சிறக்கவும் கற்றலுக்கு அடிப்படையாகவும் அமைவது வாசிப்புப்பழக்கமாகும். வாசிப்பானது மூளைக்கான பயிற்சியாகவும் அமைவதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். படிப்பவற்றிலிருந்து நாம் உள்வாங்கும் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி எமது உள இயக்கத்துடன் கலக்கச்செய்யும்போது தியான மனநிலை உருவாகின்றது. இவ்வாறான நிலையில் எம் எண்ணங்கள் நேராகவும் சிந்தனை சிறக்கவும் ஏதுவாகின்றது.

இப்போது மனிதனது சிந்தனை செயற்பாடுகள் கூட இணையத்துடன் இணைந்துவிட்ட நிலையில் வாசிப்பு என்பது களிப்பூட்டும் ஒன்றாக அல்லாது தரவுகள் சேகரிக்க உதவும் ஊடகமாகவே அமைகின்றது. ஒரு ஊடகத்திலிருந்து தரவுகளைச் சேகரித்து இன்னொரு ஊடகத்தில் பயன்படுத்துகின்ற வெட்டி ஒட்டும் கலாசாரம் மலிந்துவிட்ட இன்றைய நிலையில் வாசிப்பின் பல முனைகளும் மழுங்கடிக்கப்பட்ட சிந்தனைச்செறிவற்ற தரவுகளின் தொகுப்பால் ஆன ஒரு சமுதாயத்தினையே உருவாக்கியுள்ளது. தகவல் வளங்களைத் தேடுகின்ற அவசியத்திலும் அவசரத்திலும் அறிவாற்றலையும் மெய்யறிவையும் தேடும் சாத்தியத்தை இழந்துவிடுவதை நாம் பொருட்படுத்துவதில்லை.

எமது கல்விக் கொள்கையானது வாசிப்பின் அவசியத்தை உணர்ந்த ஒன்றாக உள்ளபோதிலும் செயற்பாட்டில் பல குறைகளும் தொடர் முயற்சிகளும் கொண்டிராத ஒன்றாகவே இருந்து வருகின்றது. பரீட்சைகளும் பரீட்சை முடிவுகளும் மாணவர்களின் தரத்தினை தீர்மானிக்கின்ற அளவுகோலாகக் கருதப்பட்டு பொது வாசிப்பு என்பது அனாவசியமானது என்ற முடிவுக்கு மாணவர்களைத் தள்ளி விட்டுள்ளது.

மனதிற்கு நெருக்கமான உள்ளடக்கங்களை தேடிக் கற்கும் தேவையும் கால அவகாசமும் மறுதலிக்கப்பட்ட கல்விக் கலாசாரம் மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை மழுங்கடித்துவிட்டது. தேர்வுக்கு நேரடியாகத் தொடர்பில்லாத எந்த ஒரு வாசிப்பும் பயனற்றது என்ற எண்ணப்பாங்கு மாணவர் மத்தியில் விதைக்கப்பட்டுவிட்டது. பிள்ளைகளின் சமூக பொருளாதார மதிப்பு எதிர்காலத்தில் தேர்வு ஒன்றினால் மட்டுமே நிர்ணயிக்கப்படும் என்ற நம்பிக்கையால் வாழ்க்கைக் கல்வியன் முக்கியத்துவத்தை உணராத்தவறிய எதிர்கால சந்ததியினரை உற்பத்திசெய்கின்றோம் என்பதை நாம் உணர்வதில்லை.



மாணவர் ஒருவரின் குடும்பப் பின்னணி எவ்வாறு அம் மாணவரின் வாசிப்புப் பழக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது ஒரு குடும்பத்தின் பின்வரும் நான்கு முதல்களினூடு ஆய்வுசெய்யப்பட்டது.



1. பொருளாதார முதல்
2. சமூக முதல்
3. கலாசார முதல்
4. உணர்ச்சி முதல்

பொருளாதார முதல் என்பது ஒரு குடும்பத்தின் வருவாய், சேமிப்பு, சொத்து போன்றவற்றை உள்ளடக்கியதாகும். ஒரு குடும்பத்தின் வாங்கும் சக்தியை நிர்ணயிக்கும் முதல் இதுவாகும். வாசிப்பனுபவத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பணம் ஆதாரமாகின்றது. இருந்த போதிலும் பணம் தான் வாசிப்பனுபவத்தினை வழங்குகின்ற முக்கிய முதல் ஆவதில்லை.

சமூக முதல் என்பது பெற்றோர் சமூகத்தில் வகிக்கும் பொறுப்புக்கள் சக மனிதர்களுடனான அவர்களின் உறவுகள் வெளியுலகத் தொடர்புகள் என்பவற்றைச் சார்ந்ததாகும். பெற்றோரின் வாழ்க்கை நோக்கு அவர்களின் சமூகப் பின்னணி என்பன பிள்ளைகளின் வாசிப்பு விருப்பு, வெறுப்புகளில் மிகவும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

கலாசார முதல் என்பது மிகவும் நுணுக்கமாக ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். ஒரு குழந்தையின் வளர்ப்பில் முழுவதுமாகப் பிணைந்திருக்கும் தேவையும் இதுவாகும். பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தித் தரும் வாசிப்பு வாய்ப்புக்கள் அதன் தொடர்ச்சியாக உள்ள கல்வி நிலையங்கள், நூலகங்கள் பற்றிய அறிவு தெளிவு என்பவற்றை இது உள்ளடக்குகின்றது. பெற்றோரின் கல்வித் தகுதியும் இதில் அடங்கும். இந்த முதல் முறையாக அமையப்பெற்ற குடும்பப் பின்னணியில் இருந்துவரும் குழந்தைகள் இயற்கையிலேயே முனைப்பும் ஊக்கமும் கொண்ட குழந்தைகளாக விளங்க வாய்ப்புள்ளது.

உணர்ச்சி முதல் என்பது குடும்பத்தின் மூலமாகக் கிட்டும் அன்பு, அரவணைப்பு போன்ற மனத் தேவைகள் எவ்வளவு நிறைவாக அமைகின்றன என்பது பற்றியதாகும். 80 வீதத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் தங்கள் தாயாரிடமிருந்தே வாசிப்புப் பழக்கத்தைக் கற்கின்றனர் என்பது பெரும்பாலான ஆய்வாளர்களின் முடிவாகும்.

நவீன உலகிலே மனிதன் இயந்திரமாக வாழவேண்டிய தேவையுள்ளது. இவ்வியந்திர வாழ்க்கையிலிருந்து மீண்டு சற்று நேரமாவது மனமகிழ்வுடன் இருக்க வாசிப்புப் பழக்கமானது வழிசமைக்கும். அத்தோடு மாணவர்கள் வெறும் புத்தகக் கல்வியிலிருந்து விலகி உலகியல் சார் சிந்தனையாற்றலை வளர்க்கும் களமாக வாசிப்பு பழக்கம் அமைகின்றது. எனவே சிறுவயதிலிருந்தே மாணவர்கள் தமது வாசிப்பு பழக்கத்தை விருத்தி செய்வதன்மூலம் சிறந்த அறிவைப் பெற்றுக்கொள்வதோடு நற்பண்புகளையும் விருத்தி செய்து கொள்ளலாம்.

திரு.தெய்வேந்திரம் ஈஸ்வரன்.
நூலக ஆசிரியர்

"புத்தகங்களை யாருக்கும் இரவல் தராதீர்கள் அது உங்களுக்குத் திரும்ப வராது. என்னிடம் உள்ள புத்தகங்கள் யாவும் என் நண்பர்கள் எனக்கு இரவல் தந்தவைதான்"

-பிரெஞ்சு நாவலாசிரியர் அனடோல்-

# The Role of sports in Human life

## Introduction

Life is mystery. A man spends all life solving it. Games are synthesis of our efforts to solveing it. Games are synthesis of our efforts to slove life. For many people a favortr way of spending their free time is lying on the beach,fishing, and knitting, watching TV or readind. Others quickly get bored with such passive entertainment and prefer more active ways of spending their leisure hours. They go in for swimming,skiing,cycling or jogging. From ancient time to the 21th century,people try to extract important aspects and life to impants it in games. The importance of sports and games is being increasingly recognized in present world, from both the educational and social points of view. More and more funds are being allocated for encouraging sports in schools,colleages and universities; in fact, sports have become an essential part of the curricula. Educationists and others have come to the conclusion that it is in the interest of society as a whole that adequate facilities should be provided, depending, of course, upon the availability of funds, for games and sports for the country's youth, both boys and girls.

## How do sports make an impact on students in therir studies?

Sports foster friendship and harmony. Nor does the belief hold well any more that those who take part in sports or games would be no good at studies, and that each year their absence from the class or shortage of lectures would be excused because they can either attend to their studies or be on the playing field for some game or the other. It is felt that apart from some exceptional cases of students showing extraordinary talent and skill in certain games, or students who are expected to be high on the merit list in university examinations,most other students should play one game or other, not necessarily for achieving distinctions, but for the sake of sport. We may feel that, if we spend our time in playing, when should we study?here is a solution – study in the morning as the mind is fresh. After you return home from school, play for about one to two hours as the mind is tired. Then you can study again. The statement that " the battle of waterloo was won on the playfields of Eton", implying that playing games and the spirit of sportsmanship help to inculcate lasting values, which make for good soldiers, good fighters and good discipline, apart from promoting 100 per cent physical firness. In British schools and colleages, the fullest importance is given to sports,especially cricket and foorball. SO, always we can remember the proverb, "All study and no play markes jack a dull boy." This proverb not only applies to jack but for all of us.

## How do sports help us to maintain a healthy life?

"Healthy is wealthy." Those who have understood its importance will try to keep themselves fit. Let's see how far it is practical. Apart from a balanced siet, sports are necessary to maintain our healthy. If we do not play regularly, our body does not develop. Our body becomes weak. We may become a target for many of the diseases. Sports are necessary for maintaining our health and physical fitness. It's generally known that who do physical exercises keep fit and healthy. Sports and games can be of great value to people who work with their brains; to people who lead an inactive lifestyle. Moreover taking up a sport has also many psychological benefits. Firstly, it relieves the stresses of everyday life and secondly, it helps individuals identify with a group and replace their loneliness with the security of belonging. Several factors need to be taken into accounting this connection. First, physical fitness is essential for proficiency in studies and for winning distinctions in examinations. Ailing bodies do not make for sharp brains. Exercise in some form or another is necessary, and sports provide an easy method to ensure such fitness.

## The psychological aspects of sports

Sport and exercise psychology is a compulsory aspect of the sport science discipline. This discipline contributes to the various professional practices associated with physical activities such as – teaching of physical education, recreation and helthy promotion, and kinesiology related professions – because it plays a menteal role for the participants. Sport and exercise psychologists view physical activity in several different ways :physical activity as a tool for human potential, physical activity as a tool for social change. This aspect of psychology may be tha most important aspect of physical activity, because of the contributions of exercise and sport psychology to helthy, human potential and social change.

## The 4C's

Concentration, Confidence, control and commitment (The 4C's) are generally considered the main mental qualities that are important for successful performance in most sports.

- ✓ Concentration- ability to maintain focus
- ✓ Confidence- believe in one's abilities
- ✓ Control - ability to maintain emotional control regardless of distraction
- ✓ Commitment- ability to continue working to agreed goals

The techniques of relaxation, centering and mental imagery can assist sportsperson to achieve the 4C's.

Sr. Antoinette A.C

# To Concentrate in your Studies

- Drink more water ,Eat on time and sleep on time, We are all humans. We need food and sleep to live a healthy life. Important about concentration is your healthy. You need to keep your mind and body healthy in order to increase the concentration.

- Walk up early in the morning, it is always better to wake before 6Am, I know it will be a difficult Nevertheless, You should member this proverb " want to gain some think, you need to lose something" just plan yourself everyday be sleeping early in the night it is always possible for you to wake up in the morning.

- Do at least twenty minutes of meditation, try to concentrate on one particular thing and meditate. After you complete the meditation it is very important to do some excises, if you know some floor excises and stretchers do it, and also you try to you yoga, the pranayama (breathing practice) which will give more power to brain and do some yoga with guidance witch will keep you fit all the day.

- Take the book and study at the early morning, your time will be tripled. I mean if you study for two hours in the early morning after following the above things your concentration will be on sky high. Two hours equals six hours of learning, and your mind and body will act really swift and the learning process will become much easier.

- Try to avoid disturbances while you are learning, if you cannot find peace, take a membership in a library go there and read. Slowly, when you do meditation your mind will become tamed, and you will not bother about things that distract you while you are studying.

- Switch off mobile phones while you are concentration on your studies, sometimes an unnecessary call distract you which will spoil the study for the whole day.

- You can sit crossed legged on the floor if you can or in a chair, as long as you're comfortable in order to improve your concentration.

Sr.Harriet A.C

# சோழர் காலம்

## சோழர் கால இலக்கிய பண்புகள்

சோழச் சக்கரவர்த்திகள் தனிப்பேரரசு அமைத்து தமிழ்நாட்டை ஆண்ட காலத்தில் தமிழர் சமுதாயம் அடைந்த கல்வி அபிவிருத்தி, கலை வளப்பெருக்கு, பொருளாதார வளம், செல்வச்செழிப்பு என்பவற்றில் உலகியல் வாழ்க்கை உயிர்த்துடிப்புடையதாயிற்று. இக் காலத்தில் தோன்றிய காவியங்களிலும் சரி இலக்கியங்களாயினும் சரி அறம், பொருள், இன்பம் எனும் மூன்றில் ஒன்றையோ பலவற்றையோ தம்முள் கொண்டிருக்கின்ற இக் கால இலக்கியங்களில் உலக வாழ்க்கை எவ்வாறு அடம்பிடித்திருக்கின்றது என்பது புலனாகிறது. எடுத்துக்காட்டாக கம்பராமாயணத்தில் இராமனும் சீதையும் ஒருவரிடம் ஒருவர் உள்ளத்தைப் பறி கொடுத்து இதயம் கலந்து நிற்கும் உலக வாழ்க்கை அனுபவம் சித்திரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகியலோடு ஆன்மீக கருத்துக்களை கூறுவனவாகவும் இக்கால இலக்கியங்கள் விளங்குகின்றன. மக்களின் வாழ்க்கை முறையினூடே சமயக் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன. கந்தபுராணத்தை எடுத்துக் கொள்வேமேயானால் முருக பக்தியினூடாக சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களை அது விளக்குகின்றது. முருகனின் தோற்றம், வளர்ச்சி, சூரனுடன் போர் செய்தல், இந்திரன் மகளோடு நிச்சயித்த மணம் புரிதல் என்பன விபரிக்கப்படுகின்றன.

சோழ வேந்தர்கள் சக்கரவர்த்திகளாக விளங்கியமையால் தமிழ் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தினர். பல்லவர்களைப் போலல்லாது நாட்டு நலன் கருதிய இவர்களது செங்கோன்மையால் பகை, பிணி, வறுமை என்பன நாட்டை விட்டு அகன்றன. செல்வமும், கல்வியும், கலையும் ததும்பிக் கூத்தாடியது. இதனால் இக்கால இலக்கியங்கள் மன்னர் புகழ் பாடுவதாகவும் அவர்கள் கைப்பட்ட சமுதாயத்தை விளம்புவதாகவும் அமைந்திருக்கின்றன. உலா, பிள்ளைத்தமிழ், பரணி, காவியம் போன்ற இலக்கிய வடிவம் முழுவதும் மன்னர் புகழே பாடுகின்றன.

சோழர்காலக் காவியங்களுக்கெல்லாம் இலக்கணம் தந்த நூலாகத் திகழ்வது தண்டி அலங்காரமாகும். இந்நூல் காவிய இலக்கணமாக நாடு, நகர, மலை, கடல் வர்ணனைகள் என்பவற்றை கூறிநிற்கிறது. இவற்றின் வர்ணனைப் பாங்கு சங்ககாலத்து ஆற்றுப்படை இலக்கியங்களில் கலை அம்சத்தோடு பெருவாரியாக அமைந்துள்ளன. இங்கு சீவகசிந்தாமணியை திருத்தக்கதேவர் கையாண்ட வர்ணனைச் செழுமைக்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம்.

இக்கால இலக்கியங்கள் சில தத்துவ சாஸ்த்திரம் சம்பந்தமானவையாக காணப்படுகின்றன. இப்பண்பினையும் சோழர்கால இலக்கிய பண்பினுள் அடக்கி நோக்கலாம்.

காவியம் என்பது தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனது வாழ்க்கையை புனைந்துரைப்பதனூடாக மக்களின் நல் வாழ்விற்கு வேண்டுவனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருடார்த்தங்களையும் கூறும் இலக்கியம் எனப்படுகின்றது. இவற்றில் அறம் முதலிய நான்கையும் கூறுவது பெருங்காப்பியம் எனவும் இவற்றில் ஏதேனும் ஒன்று குறைவுபடப் பாடுவது சிறுகாப்பியம் என்றும் வகைப்படுத்தப்படுகிறது. இக்காலத்தில் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் பேரிலக்கியம் காவிய மரபு தழுவி எழுந்த இலக்கியங்கள் என இலக்கியங்களை பெரும்பாலும் அடக்கி விட முடிகின்றது. சோழர்காலத்து பெருவாரியான இலக்கியங்கள் காவிய அமைப்புடையன என்ற பண்பை பெற்று விளங்குகின்றன.

பல்லவர் காலத்தில் இசைத்தமிழைப் பாடுவதற்குப் பயன்பட்ட தாழிசை, துறை. விருத்தம் எனும் மூவகைப் பாவினங்களும் இக்காலத்தில் இயற்றமிழைப் பாடுவதற்கு பயன்பட்டது. சீவகசிந்தாமணி எனும் இயற்றமிழ் இலக்கியத்தை விருத்தப்பாவில் முதன்முதலில் வெற்றிகரமாக பாடிக் காட்டியதன் மூலம் திருத்தக்கதேவர் இச் செயன்முறைக்கு வழிகாட்டி வைத்தார். இதே யாப்பினை தேவர் வழிநின்று கம்பர் மிகச் சிறப்பாகக் கையாண்டு வெற்றி பெற்றதனால் "விருத்தம் எனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்" என்று போற்றப்பட்டார்.

ய.நிலோஜினி தரம் 13 – கலைப்பிரிவு

## அழகியல் ஊடாக ஆன்மீகம் காணும் ஆடல்.

மனிதன் உருவாக்கிய கலைகளிலே மிகப்பழைமை வாய்ந்தது நடனக்கலையாகும். அது அன்றைய நிலையில் பாடல், வாத்தியம்(தாளம்), ஆடல், ஒப்பனை, நடிப்பு போன்ற இன்னோரன்ன அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றது. பொதுவாக கலைகள் ஆன்மீக, அழகியல் இயல்புகளை வெளிப்படுத்துவனவாய் விளங்குகின்றன.

நடனக்கலையானது அழகியல் இயல்புடையதாய் காணப்படுகிறது. சாதாரண வாழ்வியல் அம்சங்களை மெருகூட்டி வெளிப்படுத்துவதுடன் அழகியல் அம்சங்களையும் இது கொண்டு விளங்குகின்றது. ஒப்பனையில் ஆடைகளின் நிறங்கள் கூட அழகியல் ஊடாக ஆன்மீகத்தை வெளிப்படுத்துகிறது.

நடனக்கலையானது அழகியலை ஊடகமாகக் கொண்டு ஆன்மீகத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு தன்மையினைக் காணக்கூடியதாய் உள்ளது. அந்தவகையில் நோக்குவோமாயின்.

தேவர்கள் பிரமாவிடம் சென்று எங்களுக்கு கேட்பதும், பார்ப்பதுமான ஒன்றை அனுக்கிரகித்தல் வேண்டும் என்று கேட்டனர். பிரமாவும் இருக்கு வேதத்தில் இருந்து பொருளையும், யசுர் வேதத்தில் இருந்து அபிநயத்தையும் சாம வேதத்திலிருந்து இசையையும், அதர்வ வேதத்தில் இருந்து ரஸங்களையும் எடுத்து ஐந்தாவது வேதமாகிய நாட்டிய வேதத்தை தோற்றுவித்தார். இது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் தரும் என்றும்,அவை எப்போதும் அச்சம், துக்கம், கோபம் என்பவற்றைப் போக்கி வலிமையுள்ள ஆனந்தத்தை தரும் என்றும் கூறப்படுகிறது.

சம்பிரதாய பரதக்கச்சேரிக் கிரமத்தில் அதை நாம் தெளிவாகக் காணலாம். அபிநய அரசி பாலசரஸ்வதி தனது கூற்றிலே அலாரிப்பு என்ற கோபுர வாசல் வழியே பிரவேசித்து ஜதீஸ்வரம் என்ற அர்த்த மண்டபத்தையும் சப்தம் என்ற மகா மண்டபத்தையும் கடந்து வந்தால் புனிதத்திலும் புனிதமான தெய்வ சந்நிதானத்தில் வர்ணம் வருகிறது. இது லய, ஜதிகள் கொட்டவும், பாவ அபிநயங்கள் பொழியவும் விஸ்தாரமாக இடம் கொடுக்கும் சன்னிதானமாகிறது.

வர்ணத்தை தொடர்ந்து வரும் பதங்கள் சந்நிதியில் இருந்து கர்ப்பக்கிரகத்துக்குள் புகுந்தவுடன் ஏற்படும் அடக்கம், குளிர்ச்சி, அமைதி என்பன அபிநயம் செய்யும் போது ஏற்படுகிறது. அடுக்குத் தீபாராதனைகள் மேளதாளம் என்பன நின்று மறை மந்திரம் மட்டும் ஓதப்படும் நிலையை பதங்கள் கொடுக்கிறது. பின் ஆரவாரமணி ஒலியுடன் கற்பூர ஆராத்தி காட்டுவது போன்று தில்லானா இடம் பெறுகின்றது. அதன் பின் இறைவனை மனதில் இருத்தி பக்தி உணர்வுடன் கூடிய விருத்தம் இடம் பெறும். இவ்வாறு நாம் செய்யும் நடனக் கச்சேரி அமைப்பே ஒரு கோயிலாக விளங்குகின்றது.

நாம் நடனம்பயில ஆரம்பிப்பதற்கு முன் கூட நமஸ்காரம் செய்து ஆரம்பிப்பது வழக்கம். இந் நமஸ்காரத்தின் போது குரு, சபையோர், அஷ்ட திக்கு பாலகர், பூமாதேவி ஆகியோருக்கு வணக்கம் செய்வதாக அமைகிறது. மற்றும் ஒரு நடன நிகழ்ச்சி ஆரம்பத்தில் புஸ்பாஞ்சலி என்கின்ற மலர்களால் அர்ச்சித்து இறைவழிபாடு நிகழ்த்தி ஆரம்பிப்பது வழக்கம்.

ஆலயங்களில் நடனம் வளர்த்தமையை நாம் சிறப்புடன் எடுத்து நோக்குவோமாயின் காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பிரபஞ்ச தாண்டவக் காட்சியை அனுபூதி நிலையையே காட்டுகின்றது. "இறவா அன்பு வேண்டி" என்னும் பாடலில் "அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க" என்றார். இறைவனை அருவ நிலையிலும் உருவநிலையிலும் காணும் பண்பு பரத நாட்டியத்தின் இன்னோர் பரிமாணமாகும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் நடன வளர்ச்சி தெய்வீக அம்சம் பொருந்தியதாகவே காணப்படுகின்றது. இயற்கையைத் தெய்வீகப் படுத்தி வழிபடும் மரபு இருக்கு வேத காலத்தில் இருந்து. சிலப்பதிகாரத்தில் பேசப்படும் கொடுகொட்டி முதல் கடையம் ஈறாக பதினொருவகைக் கூத்துக்களும் சிவன், திருமால், கொற்றவை, காமன் முருகன் போன்ற தெய்வங்களால் ஆடப்பட்டதாகக் கூறப்படுகிறது. பிற்பட்ட பல்லவர், சோழர் காலத்தில் ஆலயத்தை மையமாக வைத்து நடனக்கலை சிறப்பாக வளர்ந்துள்ளது. இதற்கு அக்காலத்தில் எழுந்த கோயில் சிற்பங்களும் கல்வெட்டுக்களும் சான்று பகர்கின்றன.

மேலும் உருவாகவும், அருவாகவும் நின்ற அண்டசராசரங்கள் எல்லாவற்றையும் இயக்கும்

பரம்பொருளின் ஆடலைப் புலப்படுத்தி நிற்கும் கலைவடிவம் நடனமேயாகும். நடனத்தின் ஊடாக காலம் கடந்த தத்துவப் பொருளை உணரமுடிகிறது. இக்கலை நிலைபேறு உடைய தெய்வ வடிவம் இறைவன் அசைந்தாடும் போது அண்டசராசரங்கள் அனைத்தும் இயங்குகின்றன. சமயமும், தத்துவமும் பிரித்துப் பார்க்க முடியாதவை நீக்கமற நிறைந்திருக்கும் தெய்வீகக் கலையே நடனக்கலையாகும்.

இறைவன் நடனப்பிரியன் என்பதை அவனுக்கு வழங்கும் பெயர்களே குறிக்கின்றன. அவை ஆடலரசன், ஆடலரசி, கூத்தப்பிரான், நரத்தனகணபதி, நடனமுருகன், ஆடல்வல்லான், நடராஜர் போன்றன நடனத்தின் மூலகர்த்தாவாக விளங்கும் நடராஜர் நிலைகள் அழகியல் அம்சத்தையும் பல அரிய தத்துவங்களையும் தன்னுள்ளே கொண்டு விளங்குகின்றது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் தத்துவத்தைக் குறிக்கிறது.

இக்கலையானது ஜீவாத்மா,பரமாத்மா தத்துவத்தின் ஊடாக ஜீவாத்மா பக்தி எனும் காதலின் மூலம் பரம் பொருளை அடையும் வழியை விளக்கி நிற்கின்றது.

தேவலோக திலோத்தமை, ரம்பை, ஊர்வசி அப்சரஸ் கூட சிறந்த நடன மாதர்களாக விளங்குகின்றனர்.இந்திரன் கூட நடனத்தை ஊக்குவித்ததாகக் கூறப்படுகின்றது. இதனை நாம் புராண வரலாறுகளில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது.மற்றும் இசை நடன உருப்படிகள் இறை உணர்வை சித்தரிப்பனவாக உள்ளன.கீர்த்தனை,பதம் ,வர்ணம்,விருத்தம் போன்ற அனைத்தும் இறைவன் பற்றிய பாடல்களாகவே அமைந்துள்ளன.

இவ்வகையில் ஆடற்கலையை நோக்குகின்ற போது அது அழகியல் ஊடாக ஆன்மீகத்தை வெளிப்படுத்துவதைக் காணக் கூடியதாக உள்ளது. மேலும் இப்பிறவியின் பயனை அடைவதற்காக ஆன்மீக இயல்புகளை இக்கலை வெளிப்படுத்துகிறது எனக் கூறின் அது மிகையாகாது.

திருமதி. விஷ்ணுகுமாரி நக்கீரன

# உரோம நாகரிகம்

இத்தாலியின் உரோமிலே உரோம நாகரிகம் தோற்றம் பெற்றது. ஐரோப்பாக் கண்டத்தின் தெற்கே கிழக்கே அற்றியாட்றிக் கடலுக்கும் மேற்கே கிறீனியன் கடலுக்கும் நடுவே வடக்கே அல்ப்ஸ் மலையை எல்லையாகக் கொண்டு மத்தியதரைக்கடலுக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு நாடு இத்தாலி ஆகும். இவ் இத்தாலியின் மத்தியில் உள்ள அபினைன் மலையிலிருந்து ஊற்றெடுத்து தெற்கே தைரீனியன் கடலைச் சென்றடையும் தைபர்நதிக் கரையோரமாக அமைந்ததே உரோம் ஆகும்.

றொமியூலஸ், றீமஸ் என்ற இரட்டையர்களுக்கிடையிலான போட்டியின் காரணமாக இந்நாகரிகம் தோற்றம் பெற்றது. றொமியூலஸ் என்பவரினால் கி.மு 753 ஆம் ஆண்டளவில் உரோம நாகரிகம் தோற்றுவிக்கப்பட்டது. உரோமின் பல பகுதிகளிலும் வாழ்ந்த இலத்தின ஜனக்குழு மக்கள் ஒருபரந்த பேரரசை நிர்வகித்து மிலேச்சஜனக்குழுமக்களின் படையெடுப்பினால் வீழ்ச்சி அடையும் வரையுள்ள உரோமகாலப்பகுதியை மூன்று கட்டங்களிலஅவதானிக்கலாம்

1. கி.மு.753 – 510 மன்னராட்சி
2. கி.மு.510 – 027 குடியரசு
3. கி.மு.027 – கி.பி 14ஆம் நூற்றாண்டுவரை – பேரரசு

உரோம வரலாற்றின் முதற்காலத்தில் அரசன் அவ்வாட்சியின் முழுப் பொறுப்பாளனாகவும் தலைமை நீதிபதியாகவும் இருந்தான். இவ்வாறு சர்வதிகாரம் பெற்ற ஆட்சிமுறை முந்நூறு ஆண்டுகள் வரை நீடிக்க அரசகுடும்பத்தவர்கள் தமக்கு ஒவ்வாத முறையில் நடந்துகொண்டமையால் மன்னராட்சியை நீக்கிவிட்டு குடியரசு முறையை ஸ்தாபித்தனர். இக்குடியாட்சி முறையில் செனட்சபைக்கு பிரதான இடம் வழங்கப்பட்டிருந்தது. குடிமக்களில் ( ஆண்கள் ) வயது கூடியவர்கள் செனட்சபைக்கு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். செனட்சபைத்தலைவன், முதல்வன், எனவும் போசகர் எனவும் அழைக்கப்பட்டார். இவர் தெய்வ அம்சங்கொண்டவராகக் காணப்பட்டார். செனட்சபையில் கொன்சல் என அழைக்கப்பட்ட அரச அதிகாரிகள் பிரதான இடத்தை வகித்தனர் . உரோமர்கள் பரந்த பேரரசு ஒன்றை உருவாக்கிப் பேரரசில் வாழும் அனைத்து மக்களின் அமைதி, சமாதானம் என்பவற்றைப் பேணும் விதத்திலான மாகாண ஆட்சிமுறையையும், பிரதேச ஆட்சி முறையையும் அறிமுகப்படுத்தினர்.

உரோமர் காலப்பகுதியில் யூலியற் சீசருடைய காலம் (கி.பி 59 - 44) சிறப்பாக விளங்கியது. தற்போது பிரான்ஸ் என அழைக்கப்படும் கோல்தேசம் நட்பின் அதிபதியாய் இருந்த யூலியற்சீசர் றைன்நதி வரையான பகுதிகளை தனது பேரரசுடன் இணைத்துக் கொண்டார். இங்கிலாந்தையும் வென்று தனது படையுடன் சென்ற யூலியற்சீசருக்கு மக்கள் கொன்சால் என்ற பதவியை வழங்கினர். அதன் பின்னரே பேரரசன் எனப் பொருள்படும் சீசர் என்ற பெயரையும் இணைத்துக் கொண்டு யூலியற்சீசர் எனப் புகழ் பெற்றான். எகிப்திற்குச் சென்றவேளை கிளியோபெற்றா என்ற மகாராணியைச் சந்தித்து அவளைத் திருமணம் செய்து கொண்டார். எகிப்தில் யூலியற்சீசர் தனக்கு வழங்கப்பட்டிருந்த தெய்வத்திற்குரிய நிலையை கண்டு அதை தன் நாட்டில் தனக்கு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் உரோம் சென்று அங்கு ஒரு கோயிலில் தன் சிலையை வைத்து அதன் அடியில் வெல்லற்கரி இறைவன் என்ற வாசகத்தையும் பொறித்தான். ஜனநாயகத்தன்மைகளைக் கடைப்பிடித்த உரோம் மக்கள் யூலியற்சீசருடைய இச் செயலை எதிர்த்தனர். இதனால் புருட்டஸ், கசியஸ் முதலிய செனட்சபை உறுப்பினர்கள் வகித்த சதித்திட்டத்தில் கி.மு 44 இல் யூலியற்சீசர் கொல்லப்பட்டார்.

யூலியற்சீசருக்கு பின்னர் இவரின் மருமகனான ஒகஸ்சீசர் உரோமப் பேரரசை நிர்வகித்தார். இவருடைய காலத்திலே இயேசுநாதர் பலஸ்தீனத்தில் உள்ள பெத்லகேமில் பிறந்தார். இவருக்கு பின்னர் குளோடியஸ், நீரோ, ஜஸ்ரீனியன் கொன்ஸ்ரன்ரைன் போன்றோர் சிறந்து விளங்கினர். குளோடியஸ் சிறந்த கல்விமானாகவும் பிரசித்தி பெற்றார். ஜஸ்ரீனியன் சட்டமுறைமைகள் உரோமையரால் உலகிற்கு வழங்கப்பட்ட பொக்கிசங்கள் ஆகும். இவற்றில் வழக்கு விசாரித்தல், சாட்சிகள் மூலம் நிருபித்தல், யூரிசபை மூலம் இறுதிதீர்ப்பு வழங்கல் சந்தேகநபர் குற்றவாளி எனத் தீர்ப்பிடும்வரை நிரபராதியெனக் கருதுதல் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பன காணப்படுகின்றன. உரோம பேரரசில் முதலாவது கிறிஸ்தவ பேரரசன் என்ற ரீதியில் கொன்ஸ்ரன்ரைன் பிரசித்தி பெறுகிறார். இவ்வாறு சிறப்புற்று விளங்கிய உரோம நாகரிகம் மிலேச்சர்களின் படையெடுப்புடன் வீழ்ச்சியடைந்தது.

தே.மோனிசா

A/L(2013)

# தர்ம சாஸ்திரங்கள்

இந்து சமயத்திலே வேதத்திற்கு அடுத்தபடியாக முக்கிய இடம்பெறும் நூல்கள் தர்மசாஸ்திரங்கள் ஆகும். வேதங்கள் இறைவனால் அருளப்பட்டது. தர்மசாஸ்திரங்கள் இறை அருள் நின்ற ஞானிகளால் ஆக்கப்பட்டது. வேதங்கள் எழுதப்படாததால் சுருதி என்றும் அழைக்கப்படுகின்றன. அறத்துக்காய் எழுந்த சாஸ்திரங்களான தர்மசாஸ்திரங்களும் அறத்தை வலியுறுத்தும் இலக்கியங்களாக இந்து சமயத்தில் மிளிர்கின்றன. இந்துக்களின் சட்டப் புத்தகம் என்று போற்றப்படும் பெருமை இவற்றுக்கு உண்டு. தனிமனிதர்களுக்கும், சமூகங்களிற்கும் அன்றாட வாழ்க்கை நெறிகளில் வழிகாட்டுவதற்கு உதவியான விதிகளை இந்நூல்கள் கூறுகின்றன. இந்துக்களுடைய தனித்துவத்தை வாழையடி வாழையாகப் பேணிப் பாதுகாப்பதற்கு இந்நூல்கள் பெரிதும் உதவியுள்ளன.

இந்துமன்னர்கள் அந்தக் காலத்தில் ஆட்சி புரியும் போதும் நீதி வழங்கும் போதும் தர்மசாஸ்திரங்களையே ஆதாரமாகக் கொண்டனர். ஒவ்வொரு காலத்திலும் சட்டங்களை இயற்றித் தரும் மனிதன் ஒருவன் தோன்றுவான். அவன் இருக்கின்ற விதிகளை ஒழுங்குபடுத்தி, பயனற்றுப் போனவற்றை நீக்கி, வேத இயல்புக்கேற்ப இந்துக்களுடைய வழிகள் அமையுமாறு பார்த்துக் கொள்வான். அத்தகைய சட்டங்களை இயற்றித் தந்தவர்களில் மனு, யாக்ஞவல்லியர், பராசரர் ஆகிய மூவரும் வரலாற்றில் அழியாநிலை பெற்றுவிட்டனர். இம் மூவருள் மனுவே மிக முக்கியமானவர். இவருடைய நூலுக்குப் பெயர் மானவ தர்மசாஸ்திரம் ஆகும். எல்லா மக்களுக்கும் வேண்டிய அன்றாடப் பணிகள் யாவும் மனு தர்மசாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளன. வேதங்களில் கூறப்பட்ட அறிவியல் சிந்தனைகளை மனுநூலும் தெளிவுபடுத்துகின்றது. "வேதோ அகிலோ தர்ம மூலம்" என மனுஸ்மிருதியும் கூறுகிறது.

தர்மசாஸ்திரங்கள் மூன்று வடிவங்களில் காணப்படுகின்றன.

1. சூத்திர வடிவம்: கூறப்படும் விடயங்களை மிகச் சுருக்கமாகக் கூறுவது சூத்திர வடிவமாகும்.
2. சுலோக வடிவம்: இது செய்யுள் வடிவம் ஆகும். பாடல் வடிவில் விடயங்களை விளக்குதல் ஆகும்.
3. வியாக்கியான வடிவம் : கூற எடுத்துக் கொண்ட விடயங்களை விபரமாக விளக்குதல் வியாக்கியான வடிவமாகும்.

தர்மசாஸ்திரங்களை எழுதியவர்கள் இரண்டு வகையான தர்மங்களை உள்ளடக்கி எழுதியிருப்பதைக் காணலாம்.

1. நிலையான தர்மங்கள்
2. காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப மாறுபடும் தர்மங்கள்

இவற்றை இயமங்கள் என்றும் நியமங்கள் என்றும் கூறுவர். இவற்றுள் இயமங்களே நிலையான தர்மங்களாகும். உதாரணமாக உண்மை பேசுதல், பஞ்சமா பாதகங்களை தவிர்த்தல், பெரியவர்களைப் பணிதல், தெய்வ நம்பிக்கை கொண்டிருத்தல் முதலியன மாறும் தன்மை பொருந்திய தர்மங்களாகும். இவை ஆளுக்காள் மாறும், காலத்துக்குக் காலம் மாறும், இடத்துக்கு இடம் மாறும், சாதிக்குச் சாதி மாறும்.

உதாரணம் : பல வருடங்களுக்கு முன்னர் உடன்கட்டை ஏறுதல், தர்மமாகக் கருதப்பட்டது. இப்போது அதர்மமாகக் கருதப்படுகிறது. விதவைகள் மறுமணம செய்வது தவறாகக் கருதப்பட்டது. இப்பொழுது விதவைகளுக்கு மறுமணம் செய்து வைப்பது புண்ணியமாகக் கருதப்படுகிறது.

தர்மசாஸ்திரங்களை எழுதியவர்கள் அவற்றை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்தெழுதினர்.

1. ஆசாரம்
2. வியவகாரம்
3. பிராயச்சித்தம்

ஆசாரம் என்ற பகுதியில் ஒவ்வொருவரும் அனுசரிக்க வேண்டிய கடமைகளும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளும் செயல்களும் கூறப்பட்டுள்ளன. தர்மத்தை பேண வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. வியவகாரப் பகுதியில் தர்ம நெறியல் நின்று தவறுகிறவர்களுக்கான தண்டனைகள் குறிக்கப்பட்டுள்ளன. பிராயச்சித்தப் பகுதியில் பாவச் செயல்களும், அவற்றுக்குரிய தீர்வுகளும் விபரிக்கப்பட்டுள்ளன. அக்காலத்தில் வாழ்ந்த பெரியவர்கள் தாம் அனுபவத்தினூடாகப் பெற்ற கருத்துக்களைத் தர்மசாஸ்திரங்களாகத் தந்துள்ளனர். காலத்திற்கு காலம் தர்மசாஸ்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன.

தர்மம் என்பது உபதேசத்திற்கு மட்டும் உரியதல்ல, அது சாதனைக்குரியது. இந்து தர்மம் வாழ்ந்து அனுபவப்படுவதற்குரிய உரைகல்லாகும். தனி மனிதனுக்குரிய ஒழுக்க நியமங்களைப் போன்று குடும்பத்திற்கும். சமூகத்திற்கும், உலகத்திற்கும் என தர்மங்கள் உண்டு. இத்தகைய பண்புகளின் முறையான வளர்ச்சியினாலேயே கல்வி, அன்பு, ஈகை, இரக்கம், பொறுமை, வைராக்கியம், ஒற்றுமை, உண்மை, உரிமை, ஒப்புரவு, ஞானம் போன்ற சனாதன குணங்கள் பெருகி வருகின்றன. தர்மசாஸ்திரங்கள் தனி மனித ஈடேற்றத்துடன் சமுதாய ஈடேற்றத்தையும் சிறப்பாக கொண்டுள்ளது. இந்த சமுதாயம் சில கட்டுப்பாடுகளை வலியுறுத்தி வந்திருக்கின்றது.

தர்மசாஸ்திரங்களில் மனு எழுதிய தர்ம சாஸ்திரம் மிகவும் சிறப்புற்று விளங்குகின்றது. மனு உயர்ந்த தர்மங்களைக் கூறிய போதும் வர்ணாச்சிரம தர்மத்தில் சூத்திரர்களை ஒதுக்கி அவர்களுக்கு பாதகமான சில விடயங்களைக் கூறி இருப்பது வருந்தத்தக்க விடயமாகும். இந்து சமுதாய அமைப்பை அது எடுத்துக் காட்டிய போதும் இந்துக்களுடைய பண்பிற்கு களங்கம் கற்பிப்பதாகவே காணப்படுகிறது. மனு தர்மசாஸ்திரத்தை ஆராய்ந்த அறிஞர்கள் சிலர் இக் கருத்துக்கள் பிற்காலத்தில் இடைச்செருகல்களாக எழுதிச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதுகிறார்கள். எனினும் தர்மசாஸ்திரங்கள் இந்து சமுதாயத்தின் தனித்துவம் பேணப்படுவதற்கு பெரிதும் உதவியுள்ளன.

த.தனுசிகா
தரம் A/l 2013

# கார்மேல் சபையும் அவை திருச்சபைக்கு ஆற்றிய பணிகளும்.

கார்மேல் சபையின் வரலாறு 12ம் நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் தொடங்குகிறது. பாலஸ்தீனத்திலுள்ள கார்மேல் மலையில் பல தனி வாசம் வாழ்ந்த துறவிகள் இருந்தனர் எருசலேம் பிதாப்பிதா அவர்களுக்கு ஒரு நெறியை வழங்கினார். அதில் 16 ஒழுங்குகள் இருந்தன. இவர்கள் ஆழ்தியானம் செய்பவர்கள் அவர்கள் கடும் தவம் புரிபவர்கள். மட அதிபருக்கு அனைத்திலும் கீழ்ப்படிவர். தனி அறையில் வாழ்வர் எனினினும் திருப்புகழ் மாலை செபிப்பதற்கு ஒன்று கூடுவர். மௌனம், செபச் சூழலில் வாழ்வர். ஏழ்மையில் வாழ்ந்து, தம் உணவுக்காக வேலை செய்வர் தங்கள் அன்றாட உணவில் மாமிசத்தை தவிர்ப்பர் சாரசேனர் பாலஸ்தீவைத் தாக்கிய பொழுது கார்மேல் மலையில் வாழ்ந்த துறவிகள் தெற்கு, மேற்கு ஐரோப்பாவிற்குச் சிதறுண்டு ஓடினர். அவர்களின் ஒருவர் இங்கிலாந்தில் கெனற் நாரில் பிறந்த சைமன் ஸ்டொக் என்பவர் ஐரோப்பாவில் பல ஆச்சிரமங்களை அமைத்து, வாழ்ந்த துறவிகள் 1247இல் கென்றுக்கு வந்த சைமன் ஸ்டொக்கை தமது தலைமை அதிபராகத் தெரிவு செய்தனர்.

ஆரம்பத்தில் ஆண்களுக்கென்றே ஸ்தாபிக்கப்பட்ட கார்மேல் சபை பெண்களின் வேண்டு கோளுக்கு அமைய 1452 இல் பெண்களுக்கென்று கார்மேல் இரண்டாம் சபை அமைக்கப்பட்டது. தொடர்ந்து இல்லறத்தவர்களும் அச் சபையின் செபம், பணிகளில் பங்கெடுக்க விரும்பியதால் 1476 இல் இல்லறத்தவர்க்கென்று கார்மேல் மூன்றாம் சபையும் அமைக்கப்பட்டது. சைமன் கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்ட், பாரீஸ் முதலிய பல்கலைக்கழக நகரங்களில் தமது சபையின் மடங்களை நிறுவினர். அவ்வாறே அயர்லாந்திலும், ஸ்கொட்லாந்திலும் மடங்கள் நிறுவப்பட்டன.

இவர்களும் படிப்படியாகப் பிரான்சிஸ்கன், டொமினிக்கன் துறவற சபைகளைப் போல இரவலர் துறவற சபையாக மாறினர். இப்பல்கலைக்கழகங்களில் கார்மேல் சபைத் துறவிகள் விரிவுரையாற்றி மறைப்பணிகளில் ஈடுபட்டனர். அவர்களது தொடக்காலத் தவவாழ்க்கையையும், அப்போஸ்தலிக்கப்பணியையும் ஒருங்கிணைப்பதில் சிரமங்கள் ஏற்பட்டன. கார்மேல்சபையிலும் சீர்திருத்தம் தேவைப்பட்டது.

இதன் முழுமையான சீர்திருத்தம் புனித அவிலா தெரசாளினால் கொண்டு வரப்பட்டது. கார்மேல் சபைத் துறவியான அவிலா தெரசாள் தன்னுடைய இருபைத்தைந்து ஆண்டுகள் துறவற வாழ்க்கை அனுபவத்துடன் பெண்கள் கார்மேல் சபையில் இச் சீர்திருத்தத்தை அரம்பித்தார். தமது உள்ளத்தில் இறைவனின் குரலை கேட்கத் தொடங்கினார். அவருக்கு பல காட்சிகளையும் வழங்கினார். "நிறைவாழ்வின் வழி" (The Way of Perfection) உள்ளக மாளிகை (Interior castle) எனும் ஆன்மிக நூல்களை எழுதினார். கார்மேல் சபையின் தொடக்கால தவவாழ்வும், ஆழ்தியான நிலைவாழ்வையும் மீண்டும் கொண்டு வருவதற்கு அவர் எடுத்த முயற்சிகள் பலனளித்தன.

நன்கொடையாளர்களின் உதவியுடன் 1561இல் ஒரு புது மடம் கட்டி அங்கு தன் சீர்திருத்தப் பணியை தொடங்கினார். புனிதசூசையப்பர் மடம் என அதற்குப் பெயர் இட்டார். திருத்தந்தையின் அதிகாரமும் கிடைத்தது. அம்மடத்தில் முழுநேர மௌனம் காக்கப்பட்டது.

கடுமையான ஏழ்மை இருந்தது. கன்னியின் ஆடை மூட்டு கம்பளியியாலானது. காலில் சப்பாத்து அணிவதில்லை. ஆனால் மிதியடி அணிந்தார்கள். சப்பாத்து அணியாதபடியால் அவர்கள் "காலணி துறந்த கார்மேல் சபையினர் ( Discalced Carmelites.) என அழைக்கப்பட்டார்கள். இத்தகைய கடுமையான வாழ்க்கையால் துறவிகள் ஆன்மீக வளர்ச்சியைக் கண்டார்கள்.

புனித அவிலா திரேசாளுக்கு உதவியாகவிருந்த புனித சிலுவை யோவானும் அவரைப் பின்பற்றி, அவரது உதவியுடன், கார்மேல் ஆண்கள் சபைத் துறவிகளுக்கான சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார். அவரும் பல ஆன்மீக நூல்களை எழுதினார். அவை " கார்மேல் சபை ஏற்றம்" ( The

ascent of mount Carmel), "இருண்ட இரவு", (The dark Night), "ஆன்மீகப் பாடல்" (The Spiritual Canticle), "அன்பின் அணையாச் சுவாலை" (The living Flame of love) என்பனவாம். இவர்கள் இருவரதும் ஆன்மீக வாழ்வின் நூல்கள் பலரது வாழ்வில் மிகவும் உதவியாக இருந்தன. செபவாழ்வு, ஆழ்தியான நிலைச்செபம் (Contemplative Prayer) போன்றவற்றை அனுபவமாக்கும் முறைகள் பற்றிய ஆக்கங்கள் மிகவும் பயனுள்ளவை. ஆன்மீக வாழ்வில் இறையொன்றிப்பை அனுபவிப்பதற்கு தாழ்ச்சி இன்றியமையாதது என்னும் அறிவுரையும் பலரால் ஏற்கப்படும் உண்மையாகும். இவற்றிற்கு உதாரணமாக குழந்தை யேசுவின் புனித தெரேசாள் புனித ஈடித் ஸ்ரெயன் ஆகிய கார்மேல் சபைத் துறவிகள் திகழ்கின்றனர்.

ம.மேரிடயானா

தரம் 13 (2013)



பொறுமை இதயத்தின் பொக்கிஷம்,
சமாதானத்தின் தூதுவன், வீரத்தின் சிகரம்
அமைதியின் வாய்க்கால்.

# Our Gratitude


Our Special gratitude to the Almighty…. We are obliged to express our sincere thanks in words and in feelings, spreading out a breeze fragrance of appreciation to the "Flavour 2" that carries the pages of this Magazine. From our deep heart we are grateful for the dedicated service of the great and the small, elders and youngsters who had erected an edifice more than a half a century.

Further, we feel very happy to say a big thank you for our benefactors and well-wishers who made the launching of this magazine a reality. Our excellent appreciation flows to those who contributed their mites in photographs, articles, poems and personal experiences.

It is indeed a challenging job to launch a magazine and we really are grateful to the Principal, staff, students, thecontributors, computer designer, and the PraganthPrinters who havemade a treasured memory for the 'THERESIAN FLAVOUR2 '

May God Bless you!

# Thank You



# Celebration

















PURE & TRUE
1947







